www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 123 டிசம்பர் 2001

## திரைக்குப் பின்னால் ...




நன்றி: இந்தியா டுடே 28/11/2001

- பார்ப்பனர் ஆட்சியை அகற்றிட முனையுங்கள்!
- பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தமும், மிகை உழைப்பு ஊதியமும்
- புத்தாயிரம் ஆண்டில் முதல் பத்தாண்டுகளில் தொழிற்சங்க இயக்கத்தின் பங்கு
- என்று அணையும் இந்தப் பசித் தீ!
- அமெரிக்க மயமாதல்

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்


* பார்ப்பனர் ஆட்சியை அகற்றிட முனையுங்கள்! - வே.ஆனைமுத்து 1


### கட்டுரைகள்


* இராமாயணப் பாத்திரங்கள் - ஈ.வெ. இராமசாமி 9
* புத்தாயிரம் ஆண்டில் முதல் பத்தாண்டுகளில் தொழிற்சங்க இயக்கத்தின் பங்கு - இரா.குசேலர். 14
* என்று அணையும் இந்தப் பசித் தீ? – க.முகிலன் 22
* கல்வி கோழைத்தனத்தை வளர்க்கிறதா? -இரா. இரத்தினகிரி 30
* முடியாட்சி – குடியாட்சி எல்லாம் குடுமி ஆட்சியே! - ஓலைப்பட்டி கந்தையா 32
* அமெரிக்கமயமாதல் - துதி 36


### கவிதை


* 'பொடா' - போடா! -தமிழேந்தி



**சிந்தனையாளன்**

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை உடனே அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட
'சிந்தனையாளன்'
SINTHANAIYALAN
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.
தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!


## புரட்சிகர அமைப்புகளுக்கு...



தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. நன்றி! தமிழ்நாடு அரசு நிதி நெருக்கடி தொடர்பான செய்திகளை இணைய இதழ்களில் படித்தேன். சன் டிவியிலும் பார்த்தேன். இது தொடர்பாக எனக்குத் தோன்றிய கருத்துக்களைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. சத்துணவுத் திட்டம் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் என மாற்ற வேண்டும். தாங்களும், இதே போன்ற கருத்தை வெளியிட்டது போன்று எனக்கு நினைவுள்ளது.

2. இலவச மின்சாரம் ஏழை விவசாயிகளுக்கு மட்டும் என மாற்ற வேண்டும். டாக்டர் ச.இராமதாசும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். சிந்தனையாளனில் பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன் இந்நிலையை முன்னர் அறிவித்தார் என்று நினைக்கிறேன். அனைத்து மக்களும் மின்சார விலையேற்றத்தைச் சுமப்பதற்கு இந்நிலை மேல் என்று பொருள்பட அவர் எழுதியிருந்தார் என்று நினைக்கிறேன்.

3. இலவச வேட்டி, சேலை - வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களுக்கு மட்டும் என முதல்வர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்க முடிவாகும்.

4. இலவச பஸ் பாஸ் மிக வறிய மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படவேண்டும். கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்த மாணவர்களும், நண்பர்களுடன் அரட்டையடிக்க பஸ் பாஸ் வாங்குவதும், அரசுப் பேருந்து ஊழியர்களுக்கு உரிய போனஸ் வழங்கப்படாததும் வேதனையான முரண்பாடு.

5. அரசுப் போக்குவரத்து, மின் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் இலாபத்தில் இயங்கும் வண்ணம் திட்டமிட வேண்டும். அரசுப் பொதுத் துறை ஊழியர்களுக்கு போனஸ் தருவதற்குப் பதிலாக இலாபத்தில் பங்கு தரப்பட வேண்டும். இத்துறைகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுவதிலிருந்து தடுப்பதற்கும் தொழிலாளர் நலன் பேணப்படுவதற்கும் இதைவிடச் சிறந்த வழி இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

6. அரசின் திட்டத்தில் ஒவ்வொரு ரூபாய் செலவிற்கும் நாம் கேள்வி கேட்க வேண்டும். திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் தொகையில் விரயம், ஊழல் - இவற்றை அம்பலப்படுத்தி ஆட்சியாளர்களை, அதிகாரிகளை சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டும். நிறைவேறாத திட்டங்களுக்கு விளம்பரங்கள் செய்யப்படுவதைப் போராடித் தடுக்க வேண்டும். இவற்றை அம்பலப்படுத்திப் புரட்சிகரச் சக்திகள் விளம்பரம் செய்ய வேண்டும்.

7. அனைத்துத் துறைகளும் தனியார் மயமாக்கப்படுவதை கம்யூனிஸ்டு கட்சிகள் தவிர, பிற அனைத்து வாக்கு வேட்டைக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் நிலை தோன்றி வருகிறது. இந்நிலையை முறியடிக்க எந்த ஒரு புரட்சிகர அமைப்பிடமும் தெளிவான திட்டம் இருப்பதாய்த் தெரியவில்லை. ஓராண்டிற்கு இந்திய அளவில் விரிவான கருத்தரங்கங்கள், மாநாடுகள் நடத்தி மக்கள் ஆதரவைத் திரட்டப் புரட்சிகர அமைப்புகள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திச் செயல்பட வேண்டும். அடுத்த ஆண்டு போராட்டத்தைத் தொடங்க வேண்டும். இதனால் மைய, மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை மாற்றலாம். குறைந்தபட்சம் மட்டுப்படுத்தலாம். எந்த ஒரு தனி அமைப்பாலும் சிறிய அளவு மாற்றத்தைக் கூடக் கொண்டு வர முடியாது.

ஆங்காங்
14.11.2001

அன்புடன்
ந. அப்துல் ரகுமான்

www.padippakam.com

**சமதர்மக் காவலர்கள்**



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா


# சிந்தனையாளன்

சுவடி : 24 மாத இதழ் ஏடு:4


இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

## கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!

- பெரியார்


ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

*இதழ் வடிவமைப்பு:*
கோ. அருண்மொழி

சென்னை டிசம்பர் 2001

விலை ரூ.7/-


# பார்ப்பனர் ஆட்சியை அகற்றிட முனையுங்கள்!

பார்ப்பான் ஒருவன் அரசனாக வந்தது, 2000 ஆண்டுகளுக்கு முன்னர்தான். அவனே புஷ்ய மித்திர சுங்கன். அசோகனின் கொள்ளுப் பேரனான அரசனிடம் தளபதியாக இருந்தவன் அவன். அரசனையே, படை வரிசையின் முன்னாலேயே தலையைச் சீவினான்; தானே அரசன் என அங்கேயே அறிவித்தான்.

அசோகன் காலம் முதல் ஒரு 150 ஆண்டுகள் செல்வாக்கோடு திகழ்ந்தது பவுத்தக் கொள்கை. பவுத்த பிக்குகளை அடியோடு கொன்றொழித்தால்தான் வேதமதம் மீண்டும் தழைக்கும் என்று திட்டமிட்டான், சுங்கன். பவுத்த பிக்குகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வந்தவர்களுக்குப் பொன்னும், மணியும் வாரிக் கொடுத்தான். எனவே, பவுத்தம் பாடலிபுத்திரப் பகுதியில் அன்றே குற்றுயிரும் குலை உயிருமாக ஆகிவிட்டது.

அந்தச் சுங்க அரசன்தான் இராமாயணத்தைத் தொகுத்து வடிவம் கொடுத்தவன்.

2000 ஆண்டுக்கு முன் அவனால் தொகுக்கப்பட்ட இராமாயணம் இந்தியாவிலும் மற்றும் இலங்கை, பர்மா, சயாம், ஜாவா, சுமத்ரா, போர்னியோ முதலான நாடுகளிலும் நாளா வட்டத்தில் பரப்பப்பட்டது.

இந்துக்கள் என்பவர்களில், இராமாயணத்தின் சாரம் தெரியாதவர், இன்று ஒருவர் கூட இருக்க மாட்டார். இதுதான் வெகு மக்களின் பேரில் பார்ப்பானுக்கு உள்ள முதலாவது கொள்கைப் பிடிப்புப் பலம்.

வட இந்தியாவில் ஆண்ட இரசபுத்திரர்கள், இஸ்லாமியர்கள்; தென்னகத்தில் ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள்; கி.பி. 1500க்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட விசய நகர நாயக்கர்கள், மராட்டியர்கள், நவாபுகள் இவர்கள் எல்லோரிடமும் - பார்ப்பனர்களே மந்திரிப் பிரதானிகளாகவும், அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



வெள்ளையர் ஆட்சி செய்த 200 ஆண்டுக் காலத்திலும் - பார்ப்பனர்களே, நிர்வாகம் - நீதி - படை ஆகிய எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தினர்.

வெள்ளையர் காலத்தில்தான், இன்று உள்ள வடிவத்தில், ஒரு நாடாக, ''இந்தியா'' என்பது உருவாக்கப்பட்டது. வெள்ளையர் வெளியேறிய போது வைதிக வெறி பிடித்த பார்ப்பனர்களிடமே இந்திய ஆட்சியை ஒப்படைத்துச் சென்றனர்.

அந்தக் கால 'அரசனுக்கு'ப் பதிலாக இன்று, 'குடி அரசுத் தலைவர்.' அந்தப் பதவிக்கு வந்தவர்களில் அதிகம் பேர் பார்ப்பனரும், மேல் சாதிக்காரரும், வைதிக இஸ்லாமியருமே ஆவர். ஒரு கியானி ஜெயில் சிங் - ஒரு கே.ஆர். நாராயணன் மட்டுமே ஒடுக்கப்பட்ட வகுப்பினர்.

1946 முதல், பழைய 'மந்திரிப் பிரதானி' என்கிற ''பிரதமர்'' பதவிக்கு வந்தவர்களில் அதிகம் பேர் பார்ப்பனர்களே.



**எனவே, சமூகம் - நிர்வாகம் - நீதி - படை என்கிற அனைத்துத் துறைகளிலும் இன்றும் ஆதிக்கம் செலுத்துவோர் பார்ப்பனரே. இத்துணைத் துறைகளையும் கட்டி ஆளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிற ஆட்சிக்குப் பெயர்தான் ஓர் அரசு.**

இந்தத் தன்மையிலான அரசின் கொள்கையை இந்து - இஸ்லாமிய - சீக்கிய - கிறித்துவ - பவுத்த - சமண மதங்களை அப்படியே காப்பாற்றிக் கொண்டு, நிர்வாகம் - நீதி - படை இவற்றைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருப்பதையே, 1990 வரையில் இந்தியாவில் ஆட்சியில் இருந்தவர்கள் கடைப்பிடித்தனர்.

1991க்குப் பிறகு, படிப்படியாக நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் பெற்ற பாரதிய சனதா என்கிற பார்ப்பன - வேதமத - இதிகாசக் கொள்கை கொண்ட கட்சியினர், தங்களின் தலைமையிலான ஓர் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு - முதலாளிகள், நிலப்பிரபுக்கள், இந்த மத சனாதனிகள் ஆகியோரின் முழு ஆதரவையும் திரட்டிக் கொண்டு இந்திய ஆட்சியில் கெட்டியாக அமர்ந்து கொள்ளத் திட்டமிட்டனர்.

இப்படிப்பட்ட பார்ப்பன சனாதனக் கொள்கையைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்று வாழ்பவர்களே பெரும்பாலான இந்துக்கள்.

எனவே, எந்தக் கட்சி - எந்த மாநிலம் - எந்த மொழியைச் சார்ந்தவராக இருந்தாலும், 'நான் ஓர் இந்து' என்கிற உணர்வுக்கு ஆட்பட்டவர்களே அவர்களில் அதிகம் பேர். இப்படிப்பட்ட உணர்வுக்கு அடிமைப்பட்டவர்களைக் கொண்ட 23 எடுபிடிக் கட்சிகளை இணைத்துக் கொண்டு வெறும் 180 பெயர்களை மட்டுமே மக்களவையிலும், வெறும் 47 பேர்களை மாநிலங்கள் அவையிலும் உறுப்பினர்களாகக் கொண்ட பாரதிய சனதாக் கட்சி, 400 நாடாளு மன்ற உறுப்பினர்களின் பேராதரவோடு ஆட்சி செய்கிற வாய்ப்பை 1999 இலேயே பெற்று விட்டது.

அன்று முதல் கணந்தோறும் திட்டமிட்டு இந்தியா முழுவதிலும் வேதமத - இதிகாச - புராண - பஞ்சாங்க ஆட்சியை, அறிவியல் முறையில் திட்டமிட்டுப் பரப்பி, சனாதன அமைப்பை மேலும் கெட்டிப்படுத்திட பா.ச.க. ஆட்சி முனைந்து விட்டது.

இதற்கு உரிய ஆதரவை எல்லாத் தரப்பு மக்களிடமிருந்தும் திரட்டிட பாரதிய சனதாவும் அதன் துணை அமைப்புகளும், 1990 இல் மேற்கொண்டது தான், 'இராம இரதப் பயணம்'. அப்பயணத்தால் இந்துக்களுக்கு ஊட்டப்பட்ட வெறியின் துணை கொண்டு, 6.12.1992 இல் அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து விட்டு, 'அந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார்; எனவே அங்கேதான் இராமர் கோவிலைக் கட்ட வேண்டும்' என அடாவடியாக ஒற்றைக் காலில் நிற்கின்றனர், பாரதிய சனதா - விசுவ இந்து பரிசத் - பஜ்ரங்தள் - ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர். இந்தக் கேடான நிலைமைக்கு வித்திட்டவர்கள் பண்டித நேருவும், பண்டித கோவிந்த வல்லப பந்தும் ஆவர்; இந்தக் கேட்டுக்கு மேலும் ஊக்கம் தந்தவர் இராஜீவ்காந்தி. 1947க்கும் 1990க்கும் இடையில் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தக் கேடு, செயல்பட்டு, பாபர் மசூதி 1992 இல் இடிக்கப்பட வழி செய்தவர் பி.வி. நரசிம்மராவ்.

அப்போது தொடங்கி, பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்படுவதற்கான இராமன் கோவிலுக்கு உரிய கட்டடப் பகுதிகளைப் பல கோடி ரூபாய்கள் செலவில், இராசஸ்தான் மாநிலத்திலும் மற்ற இடங்களிலும் உருவாக்கி வடிவமைத்து, இப்போது பகுதி பகுதியாக அக் கட்டட வடிவங்களை அயோத்திக்கே கொண்டு வந்து விட்டனர்.

நில அகழ்வு ஆராய்ச்சி முடிவுகளுக்கும் - வரலாற்று ஆய்வு முடிவுகளுக்கும் எதிராக, இஸ்லாமியர்கள் பெற்றிருந்த உரிமைக்கு எதிராக - அந்த 'இடத்தில், வரும் 12.3.2002 இல் இராமன் கோயில் கட்டப்படும் என்பதை விசுவ இந்து பரிசத் - பஜ்ரங்தள் - ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளின் தலைவர்களும், தர்ம சன்சத் என்கிற மதகுருக்கள் அமைப்பினரும் வெளிப்படையாகவே அறிவித்து விட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com




இதனை எதிர்க்கவும், போராடவும் தேசிய மக்கள் நாயகக் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் முன்வரவில்லை. தேசிய மக்கள் நாயகக் கூட்டணி உருவாக்கப்பட்டபோது தொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு இது எதிரானதாக இருந்தும் - இதை எதிர்க்க, இந்தக் கூட்டணியில் உறுப்பாக உள்ள எந்தக் கட்சியும் முன்வரவில்லை. ஏன்?

இந்தக் கட்சிகளுள் எதற்கும் எந்தக் கொள்கையும், குறிக்கோளும் இல்லை. ஆனால், பாரதிய சனதாக் கட்சிக்கு 'இராம இராஜ்யத்தை நிலை நாட்ட வேண்டும்' என்கிற தெளிவான ஓர் இலட்சியம் இருக்கிறது.

அப்படியிருப்பதால்தான், அதை எப்படியும் சாதிக்க வேண்டும் என்கிற உறுதியுடன் 2002 மார்ச்சு மாதம் இராமர் கோயில் கட்டப்படப் போவது தெரிந்த பிறகும், 2002 பிப்ரவரிக்குள் இதற்கு ஒரு தீர்வு காணப் போவதாக மனதறிந்தே ஒரு பொய்யைக் கூறியிருக்கிறார் பிரதமர் வாஜ்பேயி.

இந்தியாவில் இன்று வரை பதவி ஏற்ற பிரதமர்களுள் வாஜ்பேயியைப் போன்ற ஒரு நல்ல - பெரிய பொய்யரை எவரும் கண்டதில்லை.

ஆதனால்தான், 'இராமர் கோயில் கட்டுவது என்பது ஒரு தேசிய உணர்வின் வெளிப்பாடு' என்று துணிந்து அவர் பொய் சொன்னார், கேரளக் குமரகத்திலிருந்து!



அதனால்தான் - எந்த வினய் கடியார் என்பவர் 1992 இல் பாபர் மசூதியை இடித்திட 'பஜ்ரங் தள்' என்கிற குரங்குப் படையை அயோத்தியில் தன் சொந்த வீட்டில் ஆயத்தப்படுத்தினாரோ, அவரையே அயோத்தியாவிலும், உத்தரப் பிரதேசப் பகுதியிலும் உள்ள இஸ்லாமியத் தலைவர்களோடு சமரசம் பேச அமர்த்தினார்.

அதனால்தான், அரசின் கட்டுக்காவலையும் மீறித், தற்காலிகமான இராமர் கோயில் கருவறை வரையில் சென்று பூசனையும் பசனையும் நடத்திய விசுவ இந்து பரிசத் தலைவர்கள் செய்தது 'வெறும் உணர்ச்சி வசப்பட்ட செயல்?' என்று மனதறிந்து பொய் சொன்னார், வாஜ்பேயி.

இப்போது, அதுபோல் எவரும் இனி அங்கு நுழையாமல் இருக்க வேண்டி, 24 மணி நேரமும் காவல் காக்க வேண்டி - மூன்று இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளைப் (I.A.S.) பிரதமர் அயோத்தியில் அமர்த்தியுள்ளார்.

பிரதமரின் இந்தத் திருட்டுத் திட்டத்துக்கு உரம் சேர்க்கிற தன்மையில் உள்துறை அமைச்சர் அத்வானி, 'இராமர் பிறந்த இடம் பற்றி நீதிமன்றமோ, வரலாற்று ஆய்வாளர்களோ, சொல்லுவதை நாங்கள் ஏற்க முடியாது' என்கிறார்.

இந்த இரண்டு பொய்யர்களையும் புறங்காணுந் தன்மையில், மனிதவள மேம்பாட்டுத் துறை என்கிற கல்வித் துறையின் அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி என்கிற பச்சைப் பார்ப்பனர், இந்திய வரலாற்றைப் புதிய கோணத்தில் - தேசியப் பார்வையுடன் எழுத வேண்டும் என்று சொல்லி, 1850 முதல் உலக அறிஞர்களால் உறுதி செய்யப்பட்ட பல வரலாற்று முடிவுகளை அடியோடு மாற்றிட, எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்.

**பச்சைக்களி மண் போன்ற மழலைப் பருவந் தொட்டு, பாலர் பருவம், பிள்ளைப் பருவம், வாலிபப் பருவம் இவற்றில் கல்வியின் மூலம் ஆட்சியின் வழியாக மக்களிடையே புகுத்தப்படும் எண்ணங்களும் கருத்துக்களும்தான் எந்தச் சமூகத்திலும் நீடித்து நிலைத்து நிற்க முடியும் என்பது ஓர் உண்மை. இதுவே, 'பாரம்பரியப் பண்பாடு' என்று உருப் பெறுவது.**

இதனை, இன்றைய நிலையில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாரதிய சனதாப் பார்ப்பனர்கள் உள்ளார்ந்த உணர்வோடு புரிந்து கொண்டு தான் கல்வித் திட்டத்தில் - தொடக்கம் முதல் பல்கலைக் கல்வி வரையில் 'இந்துத்துவ சனதாதனக் கல்வி'க்கு முகாமையாக வேண்டப்படுகிற எல்லாப் பாடத்திட்டங்களையும் தன்னிச்சையாக வகுத்து, நடப்புக்குக் கொண்டு வந்து விட்டனர்.

1. 'ஆரியர் வருகை என்பது ஒரு கற்பனை; ஆரியர்கள்தாம் இந்தியாவின் ஆதிக்குடிகள்' என வரலாற்றையே திருத்தி எழுதச் சொல்லி விட்டார், ஜோஷி.

2. 'இந்திய விடுதலைப் போர்' பற்றிய நான்கு தொகுதிகளையும் திருத்தியே தீர வேண்டும் என அடம் பிடித்து, அதை நிறைவேற்றி விட்டார்.

3. இந்தியப் பல்கலைக் கழகங்களில் வேத சோதிடம், வேதக் கணிதம், வேத வேதியியல், கர்ம காண்டம் முதலான பாடங்களைக் கற்பிக்க ஆவன

படிப்பகம்

www.padippakam.com





முரளி மனோகர் ஜோஷி

செய்ய வேண்டுமென ஆணை பிறப்பித்து, பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவின் (UGC) வழியாக ரூபாய் 15 இலக்கம், 20 இலக்கம், 1 கோடி என, ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் நிதி வழங்கிட வழிவகுத்து விட்டார்.

இந்தியாவில், இன்று, பா.ச.க. ஆட்சி நடைபெறும் எல்லா மாநிலங்களிலும், பிற மாநிலங்களிலும் உள்ள 35 பல்கலைக் கழகங்கள் இந்த 'வேதக் கல்வி'யை அறிமுகப்படுத்தி விட்டன.

4. வரலாற்றுப் பேராசிரியர்கள் எழுதி வழங்கிய - பட்ட வகுப்புகளுக்கான வரலாற்று நூல்களிலிருந்து இன்னின்ன பாடங்களை நீக்கிவிட வேண்டும் என்றும்; இன்னின்ன பாடங்களைச் சேர்க்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்து விட்டார்.

காட்டாக, 'பழங்கால இந்தியாவின் வரலாறு' என்பதில், 'நிலை பேறு பெற்ற இந்தியா' (Eternal India), இந்தியாவின் பாரம்பரிய வரலாறு (Traditional History of India), 'உயர் தத்துவத்தின் தோற்றம்', (Germination of High Philosophy) என்கிற பகுதிகளைப் புதிதாக எழுதி, NCERT என்கிற அமைப்பின் மூலம் சேர்க்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து விட்டார்.

அதேபோல், முகலாயர் காலத்துக்கு முந்திய ஓராயிரம் ஆண்டைய வரலாற்றை அடியோடு மறைத்து விட்டனர்.

மகாராட்டிரம் பற்றிய வரலாற்றில் சிவாஜி மேற்கொண்ட கொள்ளைகள் (Lootings) பற்றிய வரலாற்றுப் பகுதியை நீக்க வேண்டும் என்று அந்த நூலாசிரியருக்கே, அமைச்சர் ஜோஷி மடல் எழுதியுள்ளார்.

வரலாற்றில் 'இந்துத்துவக் கொள்கை'களைத் திணிப்பதற்கென்றே பா.ச.க. அரசினால் மேற்கொள்ளப்பட்டுவிட்ட இந்தக்கேடான நிலைப்பாடுகளை வரலாற்று மூதறிஞர்களான ரொமிலா தாப்பர், இர்ஃபான் ஹபீப், டாக்டர் டி.என். ஜா, பேராசிரியர்கள் அர்ஜுன் தேவ், சத்தீஷ் சந்திரா, கே.என். பணிக்கர், கே.ஆர். அனுமந்தய்யா முதலானோர் வெளிப்படையாகவும், தக்க முகாந்திரங்களுடனும் கண்டனம் செய்துள்ளனர்.

மேலும் 'பழங்கால இந்தியா', 'மத்திய கால இந்தியா', பற்றிய வரலாறுகளில், 6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையில் உள்ள பாடங்களில் - சாதி, வருணாசிரமம், பார்ப்பன மதம் பற்றிய கொள்கைகளை விவரித்து வரலாற்று அறிஞர்கள் ரொமிலா தாப்பர், இராம் சரண் சர்மா, அர்ஜுன்தேவ் - இந்திரா அர்ஜுன்தேவ், சத்தீஷ் சந்திரா முதலானோர் எழுதியுள்ள பாடப் பகுதிகளைக் கற்பிக்கக் கூடாது என இந்திய அரசின் இடைநிலைக் கல்விக் குழுமம் (CBSE) ஆணை வெளியிட்டுள்ளது.

இதனை வரலாற்று அறிஞர்களும், இந்தியாவிலுள்ள நாளேடுகளும் மற்ற ஏடுகளும் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன. அத்துடன், 19.11.2001 அன்று தொடங்கப்பட்ட இந்திய நாடாளுமன்றத் தொடர் கூட்டத்தில், பெரும்பாலான எதிர்க்கட்சிகள், ''இந்துத்துவக் கொள்கையைக் கல்வித் திட்டத்தில் திணிக்கும் திட்டம் மத வெறியை வளர்க்கும்' எனக் கூறி, இம் முயற்சியைக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன.

இத்துணைக் கடுங் கண்டனங்களுக்குப் பிறகும் பிரதமர் வாஜ்பேயி சொன்ன விடை என்ன?

'வரலாறு ஒருதரப்புச் சார்பு உள்ளதாக இருந்தால் அதைத் திருத்தத்தான் வேண்டும். (If history is one - sided, it should be corrected)' என, 24.11.2001 இல் தில்லியில், வி.கே. மல்கோத்ரா வீட்டில் நடந்த விருந்தின் போது குறிப்பிட்டுள்ளார்.

75 வயது நிரம்பிய வாஜ்பேயி, 50 ஆண்டுகளுக்கு முன்னர் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் படித்த வரலாற்றில் இருந்த விவரங்கள் ஒரு சார்பு உடையவை என்பதை, இப்போது எந்தப் புதிய சான்றுகளை அறிந்து கொண்டு அவற்றை வைத்து இவர் 'ஒரு தரப்புச் சார்பு' என்று கூறுகிறார்? இவருடைய கூற்றைப்பற்றி ஏற்கெனவே தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதியவர்களும் - இவரைப் போல், 50 ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றைக் கற்றிட்ட, இன்றைய 75 வயதுக்காரர்கள்தானே! இவர்கள் அன்றோடு வரலாற்று ஆய்வை நிறுத்தி விடாமல் மேலும் மேலும் வரலாற்றை ஆய்ந்து ஆய்ந்து புதிய புதிய உண்மைகளை உலகுக்கு அளிக்கிற அறிஞர்கள் அல்லவா?

இப்படிப்பட்ட வரலாற்று ஆய்வு அறிஞர்களின் எதிர்ப்புகளையும், எதிர்க்கட்சிகளின் கண்டனங்களையும், கல்வியாளர்களின் விளக்கங்களையும், பத்திரிகையாளர்களின் எதிர்ப்புகளையும், அடியோடு புறந்தள்ளி விட்டு, 'இந்துத்துவாக் கொள்கை'யைக் கல்வித் திட்டத்தில் திணிக்கிற இந்தப் பார்ப்பனர் ஆட்சியை அகற்றிட எல்லோரும் முன்வர வேண்டாமா?

இத்துடன் மட்டுமா இந்தக் கேடர்கள் நின்றார்கள்? இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



5. அச்சுக்கலை, காட்சி வழிக்கல்வி, அஞ்சல் வழிக் கல்வி, கணினிவழிக்கல்வி என்னும் எண்ணற்ற பயிற்று வழிகள் ஏற்பட்ட பின்னரும், பேச்சு மொழியாக ஆக முடியாமல் - கருமாதி, கல்லெடுப்பு, தீட்டுக் கழிப்பு, சிலை வணக்கம் இவற்றுக்கு மட்டுமே 2001 இலும் பயன்படுகிற சமஸ்கிருதத்தை எளிமைப்படுத்தி, எல்லாச் சிறுவர் - சிறுமிகளுக்கும் அம் மொழியை அரசுச் செலவில் கற்றுத் தரவும் பார்ப்பனக் கேடர்களான வாஜ்பேய் - அத்வானி - ஜோஷி தலைமையிலுள்ள பாரதிய சனதா அரசு தன் மூப்பாகவும் தடாலடியாகவும் திட்டமிட்டுச் செயல்படுகிறது.

இத்துடன் நின்றதா இவர்களின் கொட்டம்? இல்லை.

இராசஸ்தான் மாநிலம் கல்வியில் மிகவும் பின் தங்கியது.

அங்கு பழங்குடி மக்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்கள் உதயப்பூர், சிரோஹி, டங்கர்பூர், பன்ஸ் வாரா முதலியவை ஆகும். அந்தப் பழங்குடி மக்கள் அயலார் மதமான இஸ்லாமிய மதத்தில் சேராமலிருக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டு, 'வனவாசி கல்யாண் பரிசத்' (V.K.P.) என்கிற அமைப்பின் பேரால், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இந்துத்துவக் கொள்கைகளை விசுவ இந்து பரிசத்காரர்கள் அவர்களிடையே திணித்து வருகிறார்கள்.

கடந்த ஆகஸ்டு மாதம் முதல் இதைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டி விடுகிறார்கள்.

அதேபோல், இந்துக்களிடமும் மற்றவர்களிடமும் தேசிய விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதாகக் கூறிக் கொண்டு, இராசஸ்தானில் பஜ்ரங்தள் அமைப்பைச் சார்ந்தவர்கள், ஜோத்பூர் பகுதியில் வீடு வீடாகச் சென்று துண்டு அறிக்கைகளைப் பரப்புகிறார்கள்; 'திரிசூல தீட்சை' என்கிற பேரில் இளைஞர்களுக்குத் திரிசூலத்தை அன்பளிப்பாக வழங்கி, இந்து மத வெறியை ஊட்டி வருகிறார்கள்.

இராசஸ்தானில் உள்ள காங்கிரசு அரசு இவர்களால் பரப்பப்படும் அறிக்கையைத் தரக் கூடாது எனத் தடை செய்தது. பஜ்ரங்தள் அமைப்பினர் அங்கு மேற்கொண்டுள்ள வகுப்பு வெறிப் பிரசாரம் பற்றி இராசஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் பிரதமர் வாஜ்பேயிக்கு முறையிட்டார்; பஜ்ரங்தள் அமைப்பையே தடை செய்யும்படிக் கோரினார்.

ஆனால் பிரதமர் வாஜ்பேயி இதுபற்றி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அவ்வளவு நல்லவர் இவர்!

இவற்றின் விளைவாக எந்த நேரத்திலும் இராசஸ்தான் மாநிலத்தில் இந்து - முஸ்லிம் வகுப்புக் கலவரம் வெடிக்க வாய்ப்பு உண்டாகி வருகிறது.

'மதவெறி பயங்கரம் (Religious Terrorism) உள்பட எல்லா வடிவங்களிலும் உள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக் காட்டுவோம்'' என்று ஊரெங்கும்-உலகெங்கும் சென்று உளறுகிற வாஜ்பேயி - ஒரு முகமூடி அணிந்த இந்துத்துவ மதவெறியர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

வெகு மக்களை மதவெறிக்கு ஆளாக்குவதோடு நில்லாமல், தாங்கள் செய்யப் போகிற சட்டத்திற்கும், உண்மைக்கும், வரலாற்றுக்கும் எதிரான தீய செயலுக்கு எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டிடவும் வெளிப்படையாக முனைந்து விட்டனர்.

அயோத்தியில் தற்காலிக இராமர் கோயிலில் தடுப்பையும் மீறி நுழைந்த விசுவ இந்து பரிசத் அமைப்பின் மூத்த தலைவர்கள், 19.11.2001 முதல் தில்லியில் நாடாளுமன்றக் கூட்டம் நடப்பதை முன்னிட்டு அங்கே, பல பேர்கள் தங்கிக் கொண்டு, பொதுவுடைமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நேரில் கண்டு, இராம ஜென்ம பூமி பற்றிய தங்களின் நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கிக் கூறி, விளங்க வைக்கத் திட்டமிட்டிருப்பதாக, 11.11.2001 அன்றே அறிவித்து விட்டனர். அவர்களிடையே, ''அடிக்கடி எழுப்பப்படுகிற வினாக்களுக்கு விளக்கம்'' (Questions Frequently Asked) என்கிற புத்தகம் மற்றும் துண்டு அறிக்கைகளை வழங்கி, ''இராமர் கோயிலை அயோத்தியில் கட்டப் போவது பற்றியத் தங்களின் முடிவைப் பற்றி யாருக்குமே - எதையுமே இவர்கள் சொல்ல வில்லையே? என்கிற பழியைத் துடைத்துக் கொள்ளவும், அதன் வழியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டவும் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்.

இந்தத் திட்டம் பற்றி வாஜ்பேயிக்கோ, அத்வானிக்கோ தெரியாமலும், அவர்களுடைய ஒப்புதலும் உள் ஆதரவும் இல்லாமலும் இந்தப் பிரசாரத்தை விசுவ இந்து பரிசத்தின் முக்கியத் தலைவர்கள் எப்படி மேற்கொள்வார்கள்? இதனைப் பற்றித் தேசிய மக்கள் நாயகக் கூட்டணி (NDA) உறுப்புக் கட்சிகள் எல்லாமே வாய் மூடி மவுனமாக இருப்பது ஏன்? இது எப்படிச் சரியாகும்?

இங்கு இன்னொன்றை நாம் குறிப்பிடுவது பொருந்தும்.

மா.பெ.பொ.க. முன்னணித் தோழர்கள் ஆறுபேர், வே.ஆனைமுத்து தலைமையில், 2000 செப்டம்பர் 5 முதல் நவம்பர் 5 முடிய - 60 நாள்கள் உத்தரப் பிரதேசத்தில் 30 மாவட்டங்களில் இடஒதுக்கீடு பற்றிய பரப்புரையை மேற்கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்து 2000 திசம்பர் 2 முதல் 19 வரை தில்லியில் தங்கிக் கொண்டு எல்லாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கண்டு பேசி ஆதரவு திரட்டினர்; குறிப்பாக பாரதிய சனதாக் கட்சியினரில் பலரையும் சந்தித்தனர்.

அதுசமயம் ஓர் உறுப்பினருடன் நடந்த உரையாடலை அப்படியே தந்தால், நம் நாடாளுமன்றத்தில் உள்ள பாரதிய சனதா உறுப்பினர்களின் அறிவு வளம் (!) அதன் மூலம் அப்படியே பளிச்சிடும்.



வே.ஆனைமுத்து, சங்கமித்ரா, எம். இராஜு, (மூவரும்): அய்யா! நீங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரா? தாழ்த்தப்பட்ட வகுப்பினரா?

பாரதிய சனதா நாடாளுமன்ற உறுப்பினர்: நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினன்.

மூவரும்: இந்திய அரசியல் சட்டம் விதி 15(4) இல் கல்வியில் இடஒதுக்கீடு தரும்படிக் கூறப்பட்டிருக்கிறது. இன்று வரையில், பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசுக் கல்வியில் ஒரு விழுக்காடு கூட இடஒதுக்கீடு தரப்பட வில்லை. இதுபற்றி உங்களின் கருத்து என்ன?

உறுப்பினர்: அப்படியா? தெரியாதே!

மூவரும்: அதேபோல், விதி 16(4) இல் வேலையில் இடஒதுக்கீடு தர வழி இருக்கிறது. ஆனால் பிற்படுத்தப்பட்டோருக்கோ, தாழத்தப்பட்டோருக்கோ எந்தத் துறையிலும் விகிதாசாரம் இன்னும் தரவில்லையே! இதற்கு நீங்கள் ஏன் முயலக் கூடாது?

உறுப்பினர்: அப்படியா? நீங்கள் காட்டுவது என்ன புத்தகம்? எங்கே கிடைக்கிறது?

மூவரும்: இது இந்திய அரசமைப்புச் சட்டப் புத்தகம், புதிதாக இங்கே வாங்கியது.

உறுப்பினர்: அப்படியா? இதுதான் அரசியல் சட்டம் என்கிற புத்தகமா? அதைக் கொடுங்கள் பார்க்கலாம். (பார்த்துக் கொண்டே) இது என்ன விலை?)

மூவரும்: இதன் விலை 50 ரூபாய். நாளைக்கு நாங்களே வாங்கி வந்து உங்களுக்குத் தருகிறோம்.

உறுப்பினர்: (வெட்கப்பட்டுக் கொண்டே) இல்லை; இல்லை. நாளே வாங்கிக் கொள்கிறேன்; கடையின் முகவரி போதும்.

மூவரும்: அய்யா! நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர். நாடாளுமன்றத்திலேயே, உங்களுக்குக் கொடுப்பார்கள். வீணாகக் கடைக்கு ஆள் அனுப்ப வேண்டாம்.

இவ்வளவு விரிவாக - இட ஒதுக்கீடு பற்றி, அரசியல் சட்டப் புத்தகம் பற்றி நாங்கள் மூவரும் கூறுகிற வரையில், அந்தப் புத்தகத்தையே பார்த்திராத - படித்திராத - அதிலுள்ளது பற்றி எதுவும் தெரிந்திராத, அவ்வளவு பெரிய அறிவுத் திலகங்கள் தாம் பாரதிய சனதா நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர்.

அதிலும், இந்த உறுப்பினர் யார் தெரியுமா? அனைத்திந்திய பஜ்ரங் தள் தலைவர்; அயோத்தியா நாடாளுமன்றத் தொகுதியின் பேராளர்; பாபர் மசூதியை இடித்திட எல்லா ஏற்பாடுகளையும் செய்தவல்லவர்!

அந்த அறிவுச் சுடர் (!) தான் வினய் கடியார் என்கிற எம்.பி. (M.P)

நாடாளுமன்ற உறுப்பினர்களையே அரசியலில் உலக்கைக் கொழுந்துகளாக வைத்துக் கொண்டு இருக்கிற பா.ச.கட்சியினர், எல்லாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பார்த்தும் - இளைஞர்களைக் கண்டும் - பழங்குடி மக்களைக் கண்டும் இராமன் கோயில் கட்டுவது பற்றி எடுத்துக் கூறி, விழிப்புணர்ச்சி உண்டாக்கப் போகிறார்களாம்!

இப்படிப்பட்ட அறிவுக் கொழுந்துகள், வரலாற்றை - அகழ்வு ஆராய்ச்சியை - நீதி மன்றத்தை - மற்ற மதத்தவர்களின் உணர்வுகளை எப்படி மதிப்பார்கள்?

இவை வாஜ்பேயிக்கே வெளிச்சம்!

இவர்களை நல்லவர்கள் - வல்லவர்கள் என்று மெச்சிக் கூறி, இச்சகம் பேசி, இன்னமும் தொடர்ந்து இவர்களின் ஆட்சி நீடிக்க மனதறிந்தே துணை போகிற திராவிடர் இயக்க - தமிழியக்கத் தலைவர்களும், அறிஞர்களும், அரசியல் பதவி வேட்டைக்காரர்களும்; புலே - பெரியார் - அம்பேத்கர் - லோகியா வாதிகளும் அறிவு, மானம், மக்களைப் பற்றிய கவலை, சமூகப் பொறுப்பு இவற்றை இன்னமும் விற்றுத் தின்று கொண்டிராமல், இந்தப் பார்ப்பனக் கேடர்களின் ஆட்சியை அகற்ற முனைய வேண்டாமா?

இதற்கு இவர்கள் இனியும் ஆயத்தமாகவில்லை என்றால், இந்த மானங்கெட்டவர்களை மக்களிடமிருந்து அப்புறப்படுத்திட மக்கள் - குறிப்பாக இளைஞர்களும் மாணவர்களும் முன்வரவேண்டும். இவ்விரண்டில் ஒன்று நடந்தே தீர வேண்டும்

இதற்கு நாம் வழிகோல வேண்டும்.

வாருங்கள்! வழி காணுங்கள்!

1.12.2001 வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தமும் மிகை உழைப்பு ஊதியமும்

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 15,750 பேருந்துகளை இயக்குகின்றன. தனிப்பட்டவர்கள் ஏறக்குறைய 7,000 பேருந்துகளை இயக்குகின்றனர்.

தனிப்பட்டவர்கள், தனித்தனியே ஒன்று, இரண்டு, பத்து, இருபது பேருந்துகளுக்கு உரிமையாளர்களாக இருக்கின்றனர். இவர்கள் பேருந்துகள் இயக்குவதனால், இழப்பு வருவதாகக் கேள்விப்பட்டதே இல்லை.

அரசுப் பேருந்துக் கட்டண விகிதத்தில்தான் தனியாரும் கட்டணம் பெறுகின்றனர். இந்த நிலையில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மட்டும் இழப்பில் இயங்குவது ஏன்?



கடந்த பத்தாண்டுகளில் ரூ.2500 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப்பதாக இன்றைய அரசு கூறுகிறது. அப்படியானால் 1991 - 1996 அ.தி.மு.க. ஆட்சியிலும், 1996 - 2001 தி.மு.க. ஆட்சியிலும் இருந்த அரசுகளும், பேருந்துத் துறை அமைச்சர்களும், பேருந்துக் கழக மேலாண்மை இயக்குநர்களும், பேருந்துப் பணிமனைகளில் பணிபுரிவோரும், ஓட்டுநர்களும் நடத்துநர்களும் - தனியார் பேருந்துப் பணிமனைகளில் இருப்பது போல் பொறுப்பாக இல்லாமல், மக்கள் தரும் கட்டணப் பணத்தைக் கொள்ளையடித்து விட்டார்கள் என்பதே உண்மை. இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமே இல்லை.

இந்த நிலைமைக்கு முழுப் பொறுப்பை அரசுதான் ஏற்க வேண்டும். குதிரை கொள் என்றால் வாயைத் திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடுவதும் போல, இழப்பு இருப்பதாகச் சொல்லி, போக்குவரத்துத்



முதல்வர் பன்னீர் செல்வம்

தொழிலாளர்களுக்குக் கடந்த மூன்றாண்டுகளாகக் கொடுத்து வந்த 20% மிகை உழைப்பு ஊதியத்தைக் (Bonus) கொடுக்க முடியாது என்று இன்றைய அரசு சாதனையாகக் கூறியது அடாவடித் தனமானது; தொழிலாளர் நலனுக்கு எதிரானது. வேலை நிறுத்தத் தொடக்க நாளில் தொழிலாளர்கள் வைத்த கோரிக்கை 25% மிகை உழைப்பு ஊதியம் வேண்டும் என்பது. பின்னர், அவர்களே நிலையை மாற்றிக் கொண்டு, வழக்கம் போல் 20% வீதத்தை - ரூ.6,000 பெற்றுக் கொள்ள ஒரு முகமாக ஒப்பிய பிறகு, அரசு இரண்டு அல்லது மூன்று தவணைகளில் ரூ.6000 அளிப்பதாக ஏற்றுக் கொணடு, உடனடியாகப் பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொணடு வந்திருக்க வேண்டும்.

அதை விடுத்து, வெளி மாவட்டங்களிலிருந்து தனியார் பேருந்துக்களையும், சிற்றுந்துகளையும் (Mini Bus) வரச் செய்து, அதிகக் கட்டணம் பெற்றுக் கொண்டு சென்னை மாநகரிலும், மற்றும் எல்லா ஊர்களிலும் இயக்கிட அரசு ஏற்பாடு செய்ததால், வேலை நிறுத்தம் நடைபெற்ற 17 நாள்களில் பயணித்த பொதுமக்களுக்கு ஒரு பக்கம் பயண வசதி கிடைத்தது போலவே, இன்னொரு பக்கம் ஏறக்குறைய 40 கோடி ரூபாய்க்கு மேல் வெட்டியாக இழப்பு ஏற்பட்டு விட்டது. ஏனெனில் கட்டணங்கள் ரூ.3, ரூ.5, ரூ.10, ரூ.15 எனப் பெறப்பட்டன. பல தடங்களில் விபத்துகள் நடந்து பலர் உயிரிழந்தும், அடிபட்டும் பேரிழப்புகள் நேர்ந்தன. இவ்வளவு பெருந்துன்பத்துக்கும் பேரிழப்புக்கும் இடையே பொதுமக்கள் என்போர்



படிப்பகம்

www.padippakam.com



அரசின் அடாவடித் தனத்துக்கு எதிராக எந்த முணுமுணுப்பும் காட்டாதது எதைக் காட்டுகிறது? தமிழக மக்கள் வெறும் கவர்ச்சிக்கும் கட்சி உணர்ச்சிக்கும் ஆட்பட்டு, அடிமை உணர்வைப் பெருக்கிக் கொண்டார்கள் என்பதையே காட்டுகிறது.

முதன்மையான எதிர்க்கட்சியாக விளங்குகிற தி.மு.க. - இதில் எதிரிக்கட்சி போல் நடந்து கொண்டதே அன்றிப், பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட நிலைமை நேரிட்டவுடன் - சிலர் அரசுப் பேருந்துகளைத் தனியாருக்குத் தந்துவிட வேண்டும் என்றும், பேருந்துக் கட்டணங்களை உயர்த்தி இழப்பை ஈடுகட்டி தொடர்ந்து அரசே இயக்கலாம் என்றும் அதிமேதாவித்தனமாக ஆலோசனைகளை வழங்கத் தலைப்பட்டு விட்டனர். இது கண்டனத்துக்கு உரியது.

1. தொழிற் சங்கங்கள் அரசு அங்கீகாரம் பெற்றவை - பெறாதவை என இருப்பதும்; 2. பேருந்துக் கழகத் தொழிலாளர்கள் கட்சி வழிப்பட்டுப் பல சங்கங்களை அமைத்துக் கொண்டு செயல்படுத்துவதும்; 3. பொதுத் துறை அலுவலர்கள் - தொழிலாளர்களின் கழிப்பிணித்தனமும், 4. அமைச்சர்களின் திருட்டுத்தனமுமே அரசுப் பேருந்துகள் இழப்புக்கு உள்ளாகக் காரணங்கள் ஆகும்.

1. ஒரு தொழிலில் உள்ள எல்லா அலுவலர்கள் - தொழிலாளர்களுக்கும் ஒரே தொழிற்சங்கம்;

2. அந்தந்தத் தொழிலில் அலுவலராக - தொழிலாளராக உள்ளவர்கள் மட்டுமே தொடர்புடைய தொழிற் சங்கத் தலைவர், செயலர், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்;

3. பொதுத்துறைத் தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணியாற்றும் அனைவரும் அந் நிறுவனங்களின் பங்குதாரர்கள் என்கிற வடிவங்களில் - பொதுத்துறை நிறுவனங்களும், அந்நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர் மற்றும் தொழிலாளர்களும், இயங்குவது ஒன்றே, பொதுத்துறை நிறுவனங்கள் இழப்பின்றி நடைபெற்றிட ஏற்ற வழி முறைகளாகும்.

*1.10 இலக்கம் அரசுப் பேருந்து ஊழியர்களும், 26.11.2001 முதல் பணிக்குத் திரும்பியது மகிழ்ச்சிக்கு உரியது.*

போரா[illegible] தில் கைது செய்யப்பட்டு சிறை [illegible] தொழிலாளர்களையும் எந்தவித [illegible]டுதலை செய்வதும்; வேலை [illegible]லக்கு வந்த நாள்களாகக் கருதி [illegible]; உடனடியாக 8.33% மிகை [illegible]யை ஒவ்வொருவருக்கும் [illegible]வேண்டிய 11.67% சிறப்புத் [illegible]ரண்டொரு தவணைகளில் [illegible]ந்துறை வெற்றியாக இயங்க [illegible] நாட்டு அரசின் நீங்காக்

## பெரியாரியச் சிந்தனையாளர் வீரானந்தபுரம் ந.கணபதியின் படத் திறப்பு



தந்தை பெரியாரின் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரியவராகவும், பகுத்தறிவுக் கொள்கை பரப்புநராகவும் விளங்கிய நல்லாசிரியர் வீரானந்தபுரம் ந.கணபதி அவர்கள் 23.10.2001 இல் மறைவுற்றார். அன்னாருடைய உடல் வீரானந்தபுரம் இடுகாட்டில் 24.10.2001 அன்று பிற்பகல் 3.45 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. இடு காட்டில் து.தில்லைவனம், வே.காசிநாதன், க.முகிலன், க.வெள்ளைச்சாமி, சி.பெரியசாமி, மா.முத்துச்சாமி, த. சுப்பிரமணியன், பா.மோகன், பூ.அர. இராசசேகரன், து.பழநிச்சாமி, வீ.இராமலிங்கம், புலவர் இரா. கலியமூர்த்தி, பேராசிரியர் பக்கிரிசாமி, வே.ஆனைமுத்து ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

### படத்திறப்பு விழா

கணபதி அவர்களின் படத் திறப்பு விழா 11.11.2001 ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு காட்டுமன்னார்கோயில், எஸ்.பி.எஸ். திருமண மண்டபத்தில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்ச்செல்வம் தலைமையில், ஆர்.வி.ஆர். கணேசன் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விருவரும் தத்தம் தந்தையர் காலம் முதலே கணபதி அவர்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் இருந்த கொள்கைவழிப்பட்ட தொடர்பினை விளக்கினர். வே.ஆனைமுத்து படத்தைத் திறந்து வைத்து கணபதிக்கும் தனக்கும் இருந்த 63 ஆண்டு கால இடையறாத நெருக்கத்தையும், கணபதி அவர்களின் தன்னல மற்ற தொண்டினையும் நினைவு கூர்ந்தார்.

தோழர்கள் அந்தூர் கி.இராமசாமி, மா.முத்துச்சாமி, சங்கமித்ரா, மு. பாலகுருசாமி, பா.மோகன், த.சுப்பிரமணியன், க.வெள்ளைச்சாமி, கிறித்தவப் பாதிரிமார் ஜான் டேவிட்குமார், ஜான் பீட்டர், து. தில்லைவனம், து. பழநிச்சாமி, வே.காசிநாதன், வீ. இராமலிங்கம், ப.வே. பரமசிவம் ஆகியோர் மறைந்த கணபதி அவர்களின் சிறப்புகளை நினைவு கூர்ந்து இரங்கலுரை ஆற்றினர். மகன் க. அறிவொளி நன்றி நவின்றார்.

படத்திறப்பு விழாவிற்கு வந்திருந்த அனைவர்க்கும், 'என் பயணம்' என்ற சிறுநூல் அளிக்கப்பட்டது. இந்நூல் அவருடைய வாழ்க்கை பற்றி அவரே எழுதிய கட்டுரையையும், அவரைப் பற்றி வே.ஆனைமுதது எழுதிய கட்டுரையையும் அரிய படங்களையும் அடங்கியதாகும்.

செய்தி: து. தில்லைவனம்

படிப்பகம்


www.padippakam.com



இராமாயணத்தை எரிப்போம்! ஏன்?

# 2. இராமாயணப் பாத்திரங்கள்

- ஈ.வெ. இராமசாமி



இராமாயணக் கதையில் முக்கியப் பாத்திரங்களாக விளங்கும் தசரதன், இராமன், சீதை, இலட்சுமணன் முதலியவர்களின் யோக்கியதையைச் சற்று ஆராய்வோம்.

இராமாயணத்தில் யாகத்துக்கு அடுத்தாற்போல் தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் சேதி குறிப்பிடத்தக்கதாகும். இதில் தசரதன் அவனுடைய பிள்ளைகள், மனைவிமார்கள், மந்திரி, குரு முதலானவர்களுடைய தன்மைகள் இன்னவை என நன்கு விளங்கும்.

**தசரதன் சுமந்திரனை அழைத்து, 'இராமனுடன் நாட்டிலுள்ள பொக்கிஷம், தானியக் களஞ்சியம், குடிகள், படைகள், வியாபாரிகள், வேசியர்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிற்கு அனுப்பிக் கொடுத்து விடு' என்கிறான்.**

1. தசரதன்: தசரதன் கைகேயியை மணக்கும் போதே 'கைகேயியின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுக்கிறேன்' என்பதாக வாக்குக் கொடுத்து இருக்கிறான். மற்றும் கதை வாசகப்படிப் பார்த்தால், தசரதன் தனது விவாகத்தின் போதே கைகேயி வசம் நாட்டை ஒப்புவித்து விட்டு, கைகேயிக்காகக் கைகேயிக்குப் பிரதிநிதியாய் இருந்து நாட்டை ஆண்டு வந்தானென்றே தெரிகிறது.

2. அதாவது, கைகேயிக்குத் தசரதன் அயோத்தியை 'சுல்கமாக'க் கொடுத்து விட்டான் என்று மூலத்தில் இருக்கிறது.

3. இந்தச் சங்கதி இராமனுக்கும் கோசலைக்கும் தெரியும். 'என்றைக்குப் பரதன் அவன் மாமன் வீட்டுக்குப் போனானோ அன்று முதல் உன் பட்டாபிஷேகத்துக்குத் தக்க காலம் என்பது எனது கருத்து' என்று இராமனிடம் வெளிப்படையாய் தசரதன் சொல்லுகிறான். பரதனை நாடு பெறச் செய்யாமல் ஏமாற்றுவதற்காகவே அவனை அவனது பாட்டனார் வீட்டில் தசரதன் பத்து வருட காலம் விட்டு வைத்திருக்கிறான்.

4. திடீரென்று ஒரு நாள் நினைத்துக் கொண்டு குடிகளுக்குச் சமாதானம் சொல்லி, அடுத்த நாளே இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்கிறான்.

5. இந்தத் துரோகமான காரியத்திற்கு மந்திரிகளும் வசிட்டன் முதலிய குருமார்களும் இராமனும் சம்மதிக்கிறார்கள்.

6. கோசலையும் இராமனுக்குப் பட்டம் கிடைக்க சதா தபசு செய்கிறாள்.

7. பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் ஜனக மன்னனுக்கும், கேகய மன்னனுக்கும் கைகேயிக்கும் தெரிவிக்காமலும், இவர்களுக்கு அழைப்புகள் கூட அனுப்பாமலும் இவ்வளவு முக்கியமான முடிசூட்டை அவசர அவசரமாக நடத்த ஏற்பாடு செய்கிறான்.

8. இராமனிடம் தசரதன் தனிமையில் பேசும் போது, 'பட்டாபிஷேகம் நடைபெறாமல், தடை செய்ய வேண்டிய அவசியம் பரதனுக்கு இருந்தாலும், அது முடிந்து விடுமாயின், பிறகு பரதன் வந்தாலும் தகராறு செய்யாமல் அதற்குச் சம்மதித்துச் சும்மா இருந்து விடுவான். ஏனெனில், பரதன் சாது; நல்லவன்; நடந்துவிட்ட காரியத்தை ஒத்துக் கொள்ளுவது உயர்ந்த குணம் படைத்தவர்களின் கடமை. ஆதலால் சீக்கிரம் முடிய வேண்டும்' என்கிறான்.

9. இந்தப் பட்டாபிஷேகச் சேதி அறிந்து, கைகேயி இராஜ்யத்தைத் தன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும், அந்த முடி பரதனுக்கு நிலைக்கச் செய்ய இராமன் காட்டுக்குப் போக வேண்டுமென்றும் சொல்லும் போது, கைகேயியை ஏமாற்ற தசரதன் அவள் காலில் விழுந்து கெஞ்சுகிறான்.

10. 'எவ்வளவோ ஏற்பாட்டுடன் செய்த காரியத்தைக் கெடுத்து விட்டாயே' என்கிறான். ஆனால், நாடு மூத்த மகனாகிய இராமனுக்குத் தானே உரிமை என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லை. தசரதனுக்குக் கைகேயி இணங்காமல் போன பின்பு, தசரதன் இராமனை அழைத்து, "இராமா! நான்

படிப்பகம்

www.padippakam.com



புத்தி சுவாதீனம் இல்லாத சமயத்தில் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாக ஒப்புக் கொண்டு விட்டேன்; என்றாலும் நீ அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. என்னைப் பட்டத்திலிருந்து தள்ளி விட்டு நீ இராஜ்யத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்து கொண்டிரு'' என்று துர்யோசனையைச் சொல்லிக் கொடுக்கிறான்.

*11.* இவையெல்லாம் பயன்படாமல் போகவே, தசரதன் சுமந்திரனை அழைத்து, 'இராமனுடன் நாட்டிலுள்ள பொக்கிஷம், தானியக் களஞ்சியம், குடிகள், பண்டிகள், வியாபாரிகள், வேசியர்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிற்கு அனுப்பிக் கொடுத்து விடு' என்கிறான்.

*12.* இதைக் கைகேயி ஆட்சேபித்தவுடன் தசரதன், 'நீ நாடுதான் கேட்டாயே ஒழிய இவைகளை எல்லாம் சேர்த்துக் கொடு என்று கேட்கவில்லையே' என்று அடா வழக்குப் பேசுகிறான்.

*13.* பிறகு பொக்கிஷத்தில் உள்ள நகைகளை எல்லாம் வாரி சீதைக்குக் கொடுத்து விடுகிறான்.

*14.* தனது மற்றொரு மகன் இலட்சுமணன் காட்டுக்குப்போவதைப் பற்றித் தசரதன் துக்கப்படவில்லை.

('குடிஅரசு' - கட்டுரை, 18.12.1943)

## புதிய தமிழகம் கட்சித் தலைவர் கே.கிருஷ்ணசாமி கைது



புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் கே.கிருஷ்ணசாமி 25.11.2001 அன்று காலை குனியமுத்தூரில் அவருடைய இல்லத்தில் கைது செய்யப்பட்டார். அவர் 1997ல் நாரைக் கிணறு என்கிற இடத்தில் நடந்த முத்துக் கிருஷ்ணன் கொலை தொடர் பாகவும், 1998ல் மாஞ்சோலையில் நடைபெற்ற கொலை தொடர்பாகவும் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் 1997ல் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 20% போனஸ் கோரிப் போராடினார். இப்போது வால்பாறை தோட்டத் தொழிலாளர்களுக்கு 20% போனஸ் கோரி போராட்டம் நடத்தினார். இந்தப் பின்னணியில் தமிழக அரசு அவரைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பது கண்டனத்திற்கு உரியதாகும்.

- மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி.

## வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சிகள்

**நா.கனிவண்ணன் - பெ. மங்கையர் திலகம்**

சீர்காழி வட்டம் சட்டநாதபுரம், பாலாஜி நகர், கு. நாராயணசாமி, சுந்தராம்பாள் இவர்களின் மகன் நா. கனிவண்ணனுக்கும் மயிலாடுதுறை தாலுகா, நடுத்திட்டு அ. பெருமாள் சாரதாம்பாள் அவர்களின் மகள் பெ.மங்கையர் திலகத்திற்கும் மயிலாடுதுறை பட்ட மங்கலத் தெரு வாழ்க்கைத் திருமண மண்டபத்தில் 4.11.2001 அன்று காலை 9 மணிக்கு வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது.

மணமக்களின் சார்பாக ரூ.100/- சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ந.கார்த்திகேயன் வழங்கினார்.

**க. கலைவாணன் - ப.இளவரசி**

அரியலூர் மாவட்டம் நந்தியன் குடிகாடு பொன். கணேசன் - சகுந்தலா கணேசன் ஆகியோர் மகன் க. கலைவாணனுக்கும், காட்டுமன்னார்குடி குறுங்குடி கு.சி. பழனிவேலு - தமயந்தி பழனிவேலு இவர்களின் மகள் ப. இளவரசிக்கும் அரியலூர் மாவட்டம் செந்துறை ஸ்ரீ சோமமங்கலம் திருமண மண்டபத்தில் தோழர் பொன். இராசமாணிக்கம் (மா.பெ.பொ.க.) தலைமையில் 26.11.2001 அன்று காலை 7.30 மணிக்கு வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. து. தில்லைவனம், கே.வெள்ளைச்சாமி உட்படப் பலர் வாழ்த்துரை வழங்கினர். மாலை 5 மணியளவில் காட்டுமன்னார் கோயில் திவ்யலட்சுமி திருமண மண்டபத்தில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்ச்செல்வம் தலைமையில் மணமக்கள் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

## அரூர் அருணாசலம் முகவர்கள் 40 ஆவது ஆண்டுத் தொடக்க விழா

விவசாயத்திற்கு தேவையான பல நிறுவனங்களைச் சேர்ந்த இயற்கை உரங்கள், இயற்கை பூச்சிக் கொல்லிகள், தரமிக்க அனைத்து இரக விதைகள், பயிர் ஊக்கிகள், சங்கர் சிமெண்ட்கள் ஆகியவை மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கும் நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் (21.11.1962) தொடங்கி 21.11.2001 இல் 40 ஆம் ஆண்டுத் தொடக்க நாள் விழா, காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை நடந்தது. வாடிக்கையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்பு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

- கோ.அருண்மொழி

படிப்பகம்

www.padippakam.com



# 'சிந்தனையாளன் - 2002 பொங்கல் சிறப்பு மலர்' முயற்சி வெற்றி தரும்!

'சிந்தனையாளன்', 'பெரியார் ஊழி' **(Periyar Era)** இரண்டு ஏடுகளும் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைக்கு ,அரணாக நிற்பவை; திராவிடரியக்கக் கொள்கைக்கு ஓர் அகர முதலி போல் திகழ்பவை; மார்க்சியம் வென்றெடுக்கப்படப் பெரியாரியப் பாதை தான் உற்ற வழி என்பதை விளக்குபவை. இக் காரணங்களால் பல தரப்புத் தமிழ் மக்களாலும் விரும்பப்படுபவை.

இவ்வளவு பயன்பாடு இருந்தாலும் தமிழக மக்கள் - குறிப்பாகப் படித்த பிரிவினர், ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இவ் ஏடுகளை வரவழைத்துப் படிப்பது இல்லை.

இவ் ஏடுகளை வரவழைப் போரில் பலரும் இவற்றைப் படிப்பது - விவாதிப்பது - பரப்புவது என்பதற்காக ஒரு மாதத்தில் சில மணிகள் நேரத்தைக் கூட ஒதுக்குவதற்கு முன் வருவதில்லை.

இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கு இடையேயும், 24 ஆம் ஆண்டில் - அதாவது கால் நூற்றாண்டுக் காலத்தைத் தொட்டுக் கொண்டு 'சிந்தனையாளன்' வெளிவருகிறது.

திராவிட இயக்கத்துக்கு என்று **"Periyar Era"** என்கிற நம் ஆங்கில மாத ஏட்டைத் தவிர, திராவிடர் கழகம் வெளியிடுகிற **"The Modern Rationalist"** ஏடு மட்டுமே வெளிவருகிறது.

**"Periyar Era"** ஆங்கில மாத ஏடு, உலக அளவில், தனக்கென ஒரு தனி இடத்தைக் கடந்த எட்டாண்டுகளில் நிலைக்க வைத்துக் கொண்டுள்ளது. இது மாபெரும் சாதனையாகும்.

இத்துணை முயற்சிகளுக்கும் ஈடுகொடுக்க நம்மில் மிகச் சில தோழர்களே முன் நிற்கிறார்கள்; மிகப் பலர் போதிய அக்கறையில்லாமலே உள்ளனர். இது வருந்தத்தக்கது.

இவற்றின் விளைவாக இன்று பல இலக்க ரூபாய்கள் கடனைச் சுமந்து கொண்டு இவ் ஏடுகளை நாம் வெளியிடுகிறோம்.

இவ்வளவு பெரிய கடன் சுமைக்கிடையே, மாதந்தோறும் - ஏடுகளுக்கு மட்டும் 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. பலரிடம் பிய்த்துப் பிடுங்கி, அவ்வப்போது, இந்தச் செலவு செய்யப்பட்டே ஏடுகள் இரண்டும் வெளிவருகின்றன.

நம்மைப் போல் துன்பப்படுகிற, சிற்றேடுகளை வெளியிடுகிற நண்பர்கள் - 'குறித்த காலத்தில் சிந்தனையாளன் வந்து விடுகிறது' என்று மனமாரப் பாராட்டுகிற நிலையை நம் இயக்கம் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இது ஒன்று மட்டுமே நமக்குப் பெருமை.

இந்த நிலைமையை நாம் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

பயனுள்ள செயல் மூலம் இதற்கு ஒரு வழிவகை தேடுவதற்குத்தான் ஆண்டு தோறும் 'பொங்கல் சிறப்பு மலர்' வெளியிடப்படுகிறது.

'பொங்கல் சிறப்பு மலரை' வெற்றியோடு வெளியிட நம் தோழர்கள் பலரும் அலைச்சலை மேற்கொள்ளு கின்றனர்.

என்றாலும், இன்னும் கூடுதலாக அலைந்தும் வருந்தியும் திட்டமிட்டும் முயன்றால் - எல்லாச் செலவுகளும் போக மிகக் குறைந்தது இரண்டு இலக்கம் ரூபாய் தொகையை நாம் இதன் வழியாகத் தேடிக் கொள்ள முடியும். 'பொங்கல் சிறப்பு மலர்' வெளியிடுவதில் நமக்கு உள்ள **'தன்னல நோக்கம்'** இது ஒன்றே!

இந்த உண்மை நிலையை ஒவ்வொருவரும் உணருங்கள்! இந்தப் பணிக்கெனச் சேர்ந்தாற்போல் - ஒரு குழுவினராகச் சென்று, நாலைந்து நாள்கள் முயலுங்கள்!

முயற்சி வெற்றி தரும்; முயற்சி இன்மை தோல்வி தரும்.

வெற்றியைத் தேட வழிகோலுங்கள்!

வரும் 7.12.2001க்குள் விளம்பரங்களைத் திரட்டி, விளம்பரச் செய்திகளையும் தொகை களையும் விடுத்து உதவுங்கள்! நன்றி.

1.12.2001 **வே.ஆனைமுத்து**

படிப்பகம்

www.padippakam.com



## சிந்தனையாளன் 2002 - பொங்கல் சிறப்பு மலர் வெளியீடு

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா
## கல்வி காவிமயமாக்கல் - ஆங்கில வழிக் கல்வி எதிர்ப்பு மாநாடு

# அழைப்பிதழ்

நாள் : திருவள்ளுவர் ஆண்டு 2032 சிலை (மார்கழி) 22 - **6.1.2002** ஞாயிற்றுக்கிழமை
இடம் : தேவநேயப் பாவாணர் நூலகக் கூட்ட அரங்கம், அண்ணாசாலை, சென்னை - 2

**விழா அமைப்பு:**

**மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**
19, முருகப்பா தெரு, சேப்பாக்கம்
சென்னை - 600 005. தொலைபேசி: 8522862

## சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியீடு

**காலை 9 மணி**

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | கலச. இராமலிங்கம் |
| தலைமை | : | கவிஞர் தமிழேந்தி |
| சிறப்பு மலர் வெளியிடுபவர் | : | மணவை முஸ்தபா நிர்வாக ஆசிரியர், 'யுனெஸ்கோ கூரியர்' - தமிழ் |
| முதல்படி பெறுபவர் | : | பூ. குருசாமி, ஒடுக்கப்பட்டோர் ஆசிரியர் - அலுவலர் பேரவை, சென்னை |

**உரையாற்றுவோர்**

**மா. முத்துச்சாமி,** மாநிலத் துணைச் செயலர், மா.பெ.பொ.க.
**பா.மோகன்,** கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர்
**கோவி ராமலிங்கம்,** உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
**பொ.சுப்பிரமணி,** திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர்
**மு. ஜெயப்பிரகாஷ்,** மா.பெ.பொ.க. காஞ்சி நகரச் செயலாளர்
கவிஞர் **தி.இர. விசயன்,** மா.பெ.பொ.க., விழுப்புரம் மாவட்டம்
**பா.கு. குப்பண்ணா,** திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. துணைச் செயலாளர்
**வீ. இராசாப்பிள்ளை,** மா.பெ.பொ.க. சிதம்பரம் நகரச் செயலர்

**நன்றியுரை : ப்.வடிவேலு**

**காலை 11.30 மணி**

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | **சா.குப்பன்,** புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், வேலூர் |
| தலைமை | : | **க.முகிலன்,** மா.பெ.பொ.க. சோளிங்கபுரம் |
| | | **சிறப்புரை** |
| பாவாணர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை | : | சொல்லாய்வறிஞர் **ப. அருளி,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை |
| | | **வாலாசா வல்லவன்,** மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் |
| நன்றியுரை | : | **ச. நேதாஜி,** மா.பெ.பொ.க. மாநில மாணவரணி அமைப்பாளர் |

**மலர் விலை ரூ.60 - விழா அன்று ரூ.50**

படிப்பகம்

www.padippakam.com



பிற்பகல் 2.30 மணி

## கல்வி காவிமயமாக்கல் - ஆங்கில வழிக் கல்வி: எதிர்ப்பு மாநாடு

வரவேற்புரை : ந. கருணாகரன், பு.க.க.இ.ம. திருச்சி

தலைமை : வே.ஆனைமுத்து, செயலாளர், மா.பெ.பொ.க.

**உரையாற்றுவோர்**

முனைவர் இரா. இளவரசு தலைவர், பாவேந்தர் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி
விடுதலை க. இராசேந்திரன், பொதுச் செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்
இரா. இரத்தினகிரி, நிறுவனர், சிந்தனையாளர் மன்றம், தஞ்சாவூர்
சங்கமித்ரா, பெரியார் தமிழ்ப் பேரவை அமைப்பாளர்
து. தில்லைவனம், மா.பெ.பொ.க., கடலூர் மாவட்டம்
சி. நடராசன், காஞ்சி மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர்
பொன். இராசமாணிக்கம், மா.பெ.பொ.க. அரியலூர் மாவட்டம்
இரா.ப.புகழ், ஒடுக்கப்பட்டோர் ஆசிரியர் - அலுவலர் பேரவை, சென்னை
சிதம்பரம் வே.மணிவாசகம்
மலர்மணி, பு.க.க.இ.ம., சென்னை,
புலவர் இரா. கலியமூர்த்தி, மா.பெ.பொ.க. அமைப்பாளர், அரியலூர் மாவட்டம்

நன்றியுரை: க.மு. கருப்பையா, சென்னை


## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூல்கள்

1. திருக்குறள் தமிழ் மரபுரை
2. தமிழ் வரலாறு
3. தமிழர் வரலாறு
4. வடமொழி வரலாறு
5. தமிழ் இலக்கிய வரலாறு
6. முதற்றாய்மொழி
7. ஒப்பியன் மொழி நூல்
8. வேர்ச்சொல் கட்டுரைகள்
9. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
10. கட்டுரை வரைவியல்
11. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (மு.பா.)
12. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (மு.பா.)
13. இயுற்றமிழ் இலக்கணம்
14. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
15. பழந்தமிழாட்சி
16. திராவிடத் தாய்
17. தமிழர் மதம்
18. மண்ணில் விண் (அல்லது) வள்ளுவர் கூட்டுடைமை
19. வண்ணனை மொழி நூலின் வழுவியல்
20. தமிழ்நாட்டு விளையாட்டுகள்
21. இந்தியாவில் தமிழ் எவ்வாறு கெடும்
22. தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?
23. தமிழர் திருமணம்
24. தமிழர் சரித்திரச் சுருக்கம்
25. தமிழன் எப்படிக் கெட்டான்?
26. செந்தமிழ்க் காஞ்சி
27. இசையரங்கு இன்னிசைக் கோவை
28. சிறுவர் பாடல் திரட்டு
29. கிறித்தவக் கீர்த்தனம்
30. சுட்டு விளக்கம்
31. இசைத் தமிழ்க் கலம்பகம்
32. சென்னைப் பல்லைக் கழக அகராதியின் சீர்கேடுகள்
33. என் அண்ணாமலை நகர் வாழ்க்கை
34. The Primary Classical Language of the World
35. The Language Problems of Tamilnadu and its Logical Solution.

*மேற்கண்ட நூல்கள் கிடைக்குமிடம்*

**தமிழ் மண் பதிப்பகம்**

அகமது வணிக வளாகம், 293, திரு. வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014

எல்லா நூல்களின் மொத்த விலை உரூ.**3000/-** கழிவு **20%** தொலைபேசி: **8312175**


படிப்பகம்

www.padippakam.com



# புத்தாயிரம் ஆண்டில் முதல் பத்தாண்டுகளில் தொழிற் சங்க இயக்கத்தின் பங்கு

இரா. குசேலன், தலைவர்,
உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றம் (WPTUC)



முன்னுரை:


உலக மயமாதல், தாராளமயமாதல், தனியார் மயமாதல், திறந்த சந்தை, சந்தைப் பொருளாதாரம் ஆகிய பொருளாதாரச் சூழலில் தொழிலாளர்கள் - தொழிற்சங்கங்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள், தீர்க்கும் வழிகள் குறித்து உலகில் உள்ள இடங்களில் பல கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

நாளை 01.04.2001 அன்று, கோவையில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் "வரும் புத்தாண்டுகளில் தொழிற்சங்க இயக்கத்தின் பங்கு" என்று வரையறுத்து இருப்பதற்குக் காரணம் என்ன?

பொருளாதார உறவில் உலக நாடுகளிடையே வேகமான மாற்றங்கள் எதிர்பாராத அளவிற்கு நடந்து வருகின்றன. தொழில் வர்த்தக நிறுவனங்கள் இந்த வேகத்திற்கு ஈடுகொடுக்கப் பலவிதமான உத்திகளைப் பரிசோதிக்கின்ற நிலையிலேயே இருக்கின்றன. இந்த மாறுதல்களினால் எதிர்வரும் பிரச்சினைகளை வளர்ந்த நாடுகளில் இருக்கும் ஒன்றுபட்ட சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு ஓரளவிற்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுக்கின்றன. வளரும் நாடுகளில் இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள் - குறிப்பாக இந்தியாவில் இருக்கக் கூடிய பிளவுபட்ட தொழிற்சங்கங்கள் எதிர்வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க, தீர்க்க முடியாமல் திண்றுகின்றன. பிரச்சினைக்குரிய தீர்வுகளைப் பொதுவாகப் பேசிவிட்டுப் போவதில் பயன் இல்லை. ஆகவே வரும் பத்தாண்டுகளில் என்னென்ன பிரச்சினைகள் வரும்; எப்படிச் சமாளிக்க வேண்டும்; எப்படித் தொழில்களை, தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும்; வேலையின்மையை எப்படி அகற்ற வேண்டும் என்பது குறித்து ஆராய்வதும் வழிமுறைகளைக் கண்டறிவதும், செய்முறைகளை வகுத்து அதன்படி நடப்பதும் அதற்கான கருத்துக்களை வெளிப்படுத்தவுமே பத்தாண்டுக்கால வரையறையை இந்தக் கருத்தரங்கிற்கு வைத்திருக்கிறோம். இப்போது இருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே குழப்பங்கள் இருக்கும் போது பத்தாண்டுகளுக்குப் பின்னால் என்ன நடக்கும் என்பதை யூகிப்பதில் கஷ்டம் இருக்கிறது. அப்போது ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க அந்தக் காலக்கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தக்க வழிமுறைகளை நிச்சயம் வகுத்துக் கொள்ளும். ஆகவே தான் நாளை நடக்கும் கருத்தரங்கில், வரும் பத்தாண்டுகளில் நாம் செய்ய வேண்டுவனவற்றை வரையறுத்துக் கொள்ள அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

## இரு இலக்குகள் கொண்ட தொழிற்சங்க இயக்கம்:

கடந்த காலத்தில் பாதுகாக்கப்பட்ட சந்தை தேசத்திற்குத் தேசம் இருந்த போது தொழிற்சங்கங்கள்



www.padippakam.com



அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் அணுகவேண்டியிருந்தது. 'தொழிற்சங்கங்கள் பொதுவுடைமைக் கல்லூரிகள்' என லெனின் அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்திச் சொன்னார். உழைக்கும் மக்கள் அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கும், நடத்துவதற்கும் பயிற்சி யளிக்கும் பள்ளிகள் எனத் தொழிற்சங்கங்களை விவரித்தார். தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு- புதிய உரிமைகளுக்குப் போராடுவதோடு அரசுகளைக் கைப்பற்ற வும் அவற்றை நடத்தவும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மூலமாக பலபாகங்களில் இந்த நோக்கத்தோடு தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டன.

தொழிற்சங்கங்கள் தங்களுடைய ஒற்றுமை, செல்வாக்கு மூலம் அரசியல் ஆதிக்கம் செலுத்த வேண்டுமே ஒழிய அரசு அமைக்கும் இலக்கோ நேரடிப்பங்களிப்போ இல்லாமல் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒன்றாக்கி அவர்களின் நலனைப் பாதுகாப்பது என்ற நோக்கத்தோடு நின்று அவர்கள் விருப்பப்படி அரசமைக்கும் விவகாரத்தில் நடந்து கொள்ளலாம் என்ற ரீதியிலும் தொழிற்சங்க அமைப்புகள் நடத்தப்பட்டன. இந்த அமைப்புகள் சுதந்தரத் தொழிற்சங்க அமைப்புகள் என்றும், அரசு அமைக்கும் நோக்கம் கொண்ட தொழிற்சங்க அமைப்புகள் என்றும், கம்யூனிச தொழிற்சங்க அமைப்புகள் என்றும் அழைக்கப்பட்டன.

**இன்றைய தொழிற்சங்க இயக்கத்தின் போக்கு:**

சோவியத் யூனியன் உடைந்த பிறகு, பல சோஷலிச அரசுகள் அகற்றப்பட்ட பிறகு அரசு அமைக்கும் நோக்கம் கொண்ட தொழிற்சங்கங்கள் உலக அளவில் இன்று வலுவிழந்திருக்கின்றன.

உலகத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு (WFTU) இன்றைக்கு வலுவிழந்து இந்தியாவில் இயங்கும் தொழிற்சங்க மையத்தின் அரவணைப்பில் பெயரளவில் செயல்பட்டு வருகிறது. சோவியத் யூனியனிலும், கடந்த கால மற்ற சோஷலிச நாடுகளிலும் செயல்படும் தொழிற்சங்கங்களும் இப்போது ICFTU என்ற தொழிற்சங்க மையத்திலும் IMF என்ற தொழில் வாரியான உலக அமைப்புகளிலும் இணைந்து செயல்படுவதைப் பார்க்கிறோம். இந்தப் போக்கைப் புரிந்துகொண்ட WPTU, இம் மூன்றாண்டு களுக்கு முன்னால் IMF இல் இணைக்கப்பட்டதையும் நாம் அறிவோம்.

**தொழில்நிறுவனங்களின் கூட்டுகள்:**

தொழில், உலக மயமாதலால் தேசியத் தொழில்கள் சர்வதேசியத் தொழில்களாக ஏதோ ஒரு விதத்தில் (MERGERS, TEKEOVERS, STRATEGIC ALLIANCES, etc.) இணைந்து தங்கள் தொழில்களைத் தற்காத்துக் கொள்வதைப் பார்க்கிறோம். தனித்து இயங்கினால் தொழில் இயக்கம் முடக்கப்படும் என்ற நிலை தான் அதற்குக் காரணம். அதே போன்று தொழிற்சங்க இயக்கமும் தொழிலாளர்களும் உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்தால்தான், உலக மயமாவதால் எதிர்வரும் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சந்தித்துப் பாதுகாப்பான தீர்வுகள் கண்டு முன்னேற முடியும்.

**தொழிற் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயம்**

உலகப் போட்டி வியாபாரத்தில் தொழில்கள் பாதுகாக்கப்பட, வளர முதலாளிகளும், நிறுவன அதிபர்களும் நிர்வாகத்தாரும் பல புதிய உத்திகளைக் கையாள முனைந்துவிட்டனர். உற்பத்திச் செலவு குறைப்பு, தொழில் நுட்ப மேம்பாடு, ஆட்குறைப்பு, ஒப்பந்தக் கூலி முறை, பெரும் தொழில்களைச் சிறு தொழில்கள் ஆக்குதல், பல வெளியாருக்குக் கொடுத்து பல உறுப்புகளைத் தயாரித்தல், இணைத்தல் வேலை மட்டும் (ASSEMBLING) தொழிற் சாலைக்குள் வைத்துக் கொள்ளல், இடை அதிகாரிகள், தர நிர்ணயிப்பாளர்கள் அவர்களை அகற்றிவிட்டு தொழிலாளர்களையே வேலை செய்ய வைத்தல், பல தொழில் நுணுக்கங்களை ஒரே தொழிலாளியைப் பயில வைத்தல், பல இயந்திரங்களை ஒரே தொழிலாளி நடத்தி வைத்தல் (MULTI MACHINE OPERATION), தொழிலாளிகளை அகற்றிவிட்டுத் தானியங்கி இயந்திரங்களைப் பொருத்துதல், பழைய தொழிற்சாலைகளைப் புறக்கணித்து விட்டுப் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல் (GREENFIELD PLANTS), தொழிற்சங்கங்கள் இல்லாத இடத்தில் தொழிலைத் துவக்குதல், தொழிற்சங்கங்கள் உருவாகாமல் தடுத்தல், இருக்கும் தொழிற் சங்கங்களைப் புறக்கணித்தல், வளரும் நாடுகளில் வேலை நேரத்தை அதிகரித்தல், ஊதிய வெட்டுக்கள் செய்தல், பன்னாட்டு நிறுவனங்கள் WORLD BANK, INTERNATIONAL MONETARY FUND, WTO போன்ற பகாசுர நிறுவனங்களின் வலிமையைக் கொண்டு வளரும் நாடுகளின் அரசாங்கங்களை அச்சுறுத்தித் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டங்களை நீக்குதல் (EXIT POLICY) போன்ற பல்வேறு உபாயங்களைத், தரமான பொருள் மலிவான விலை என்ற பெயரில் அசுர வேகத்தில் அமல்படுத்த வருவதைப் பார்க்கிறோம்.

தங்கள் உற்பத்தி விற்காவிட்டால் தங்கள் வேலை பறிபோகும் என்ற பயத்தில் தொழிலாளி தள்ளப்பட்டு VRS போன்ற தப்பிக்கும் வழிகளில் தொழிலாளிகள் வெளியில் போக நிர்ப்பந்தத்தை உருவாக்குவதும்,

படிப்பகம்

www.padippakam.com



வேலை பறிபோகுமோஎன்ற அச்சத்தில் தொழிலாளர்கள் சங்கங்களும் நிர்வாகத்தின் / முதலாளிகளின் மேற்படி சாகசங்களுக்குத் துணை போகவேண்டிய அவசியமும் ஏற்படுவதைப் பார்க்கிறோம்.

ஏன் பொதுத்துறை தனியார்மயமாக்கப்படுகிறது:

முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கும், தொழிலாளர்கள் கம்யூனிச அரசுகள் - சோஷலிச அரசுகள் அமைத்துவிடுவார்களோ என்ற அச்சம் அறவே போய்விட்ட நிலையில் பொதுத் துறையைத் தனியார்மயமாக்கும் வழிமுறையை வேகமாகக் கடைப்பிடிக்கிறார்கள். ஒரு பக்கத்தில் நிதிப்பற்றாக் குறையை ஈடுகட்ட தனியார் மயமாக்குகிறோம் என்று சொல்லி அரசுக்கும் மக்களுக்கும் சொந்தமான நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரைவார்ப்பதைப் பார்க்கிறோம்.

தனியார் துறை: திறமை வாதமாயை;

பொதுத்துறையை இலாபமாக நடத்த முடியாது; தனியார் தான் திறமையாக நடத்துவார்கள் என்ற கோஷத்தை முன்வைக்கிறார்கள். ஆனரல் நம் கண்ணெதிரிலேயே BINNY,METAL BOX, STANDARD MOTORS போன்ற சென்னையிலுள்ள பெருந்தொழில் நிறுவனங்களும், கோவையிலுள்ள RAMAKRISHNA STEELS, RADHAKRISHNA MILLS, போன்ற எண்ணற்ற நிறுவனங்களும் TIRUPPUR DHANALAKSHMI MILLS போன்ற தனியார் நிறுவனங்களும், தனியார் நிர்வாகக் கோளாறினால் மூடிக் கிடப்பதைப் பார்க்கிறோம். இது மாதிரி இலட்சக்கணக்கான தனியார் நிறுவனங்கள் இந்தியா முழுவதும் தனியார்களால் சூறையாடப்பட்டு இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் குடும்பங்கள் நிர்க்கதியாக்கப்பட்டு நிற்பதைப் பார்க்கிறோம்.

கலப்புப் பொருளாதாரம்:

நாடு சுதந்தரம் பெற்றதும் மக்களுடைய வரிப்பணத்தில் கலப்புப் பொருளாதார அடித்தளத்தில் ஏராளமான தொழில்கள் இந்தியாவில் ஆரம்பிக்கப் பட்டன. இந்தியத் திருநாட்டை ஒரு தன்னிறைவு நாடாக ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தனியார் துறையில் இருந்த கேந்திரமான இரயில்கள், வங்கிகள், போக்குவரத்து, காப்பீட்டுத்துறை போன்றவை தேசியமயமாக்கப்பட்டன. அரசினர், நிர்வாகத்தார் ஊழல்கள், திறமையின்மைகள், பல தொழில் வர்த்தகப் பொது நிறுவனங்களை முடமாக்கி வருகின்றனர். துரதிருஷ்டவசமாக இங்குச் செயல்படும் தொழிற்சங்க நிறுவனங்கள் ஊழியர்களுக்கு ஒழுக்கத்தை - உழைப்பை ஊட்டாமல் ஊழல் செய்யும் அரசின் நிறுவன அதிகாரிகளைப் போன்று சோம்பேறித் தனத்தையும் ஒழுங்கீனத்தையும் கட்டுப்படுத்துவதில் தவறியிருக்கின்றனர். அரசியல்வாதிகளும் மேல்மட்ட ஊழல்காரர்களும் கோடிக்கணக்கில் ஊழல் செய்ததை மறைத்து - அவர்களுடைய நிர்வாகத் திறமை யின்மையை மறைத்து தொழிலாளர்கள் மேல் பழி சுமத்தி தொழிற்சங்கங்களை இழிவாகப் பேசித் தொழிலாளர்களையும், தொழிற்சங்கத்தையும் திருத்த முடியாது என்றுகூறிப் பொதுத்துறையைத் தனியாருக்குத் தாரைவார்க்கின்றனர்.

பொதுமக்களும் பொதுத்துறையை ஆதரிக்காதது ஏன்? வங்கி, காப்பீடு, இரயில், தபால், மின்சாரம், பால் விநியோகம், தொலைபேசி, உணவுப் பொருள் விநியோகம் இவற்றைச் சேர்ந்த அரசுத்துறை ஊழியர்கள் மக்களிடம் சேவைமனப்பான்மையுடன் நடந்து கொள்வதில்லை. தொழிற்சங்கப் பொறுப்பில் உள்ளவர்கள் சுயநலன்களில் ஈடுபட்டு ஊழியர்களை நெறிப்படுத்தத் தவறுகிறார்கள். தொழிற்சங்கங்களில் இருப்பவர்கள் ஒரே அமைப்பில் பல சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு பல சுகபோகங்களை அனுபவிக் கிறார்கள். அவர்கள் வேலை செய்வதில்லை. தொழிற்சங்கங்கள் சீரழிய ஊழல் அதிகாரிகள் வேண்டுமென்றே அனுமதிக்கிறார்கள். காரணம் அப்போது தான் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் செய்யும் ஊழலைத் தொழிற்சங்கங்கள் தட்டிக் கேட்காது என்ற நம்பிக்கை. ஆகவே, பொதுமக்கள் தனியார்மயமாவதை எதிர்க்கப், பொதுத்துறையில் வேலை செய்பவர்கள் பொதுமக்கள் நம்பிக்கை பெறும் வகையில் பாராட்டும் வகையில் பணியாற்ற வேண்டும்.

பொதுத்துறையைத் தனியார்மயமாக்கக் கூடாது - ஏன்?

பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்துப் பிரிவு மக்களையும் ஒன்றுபடுத்தும் மெய்யான சமத்துவ புரமாகத் திகழ்கின்றன. அனைத்து மொழிபேசுவோர் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளில் குடியிருப்போர், அனைத்து மதத்தினர், அனைத்துச் சாதியினர் ஒரு சேர - ஒற்றுமையான ஒரே சகோதர, சகோதரிகளாக ஒரே இடத்தில் பணிபுரிவது, ஒரே இடத்தில் உண்ணுவது, ஒரு சேரக் குடியிருப்பது, குழந்தைகள் அனைவரும் ஒரே இடத்தில் படிப்பது, ஒரே இடத்தில் விளையாடுவது என்று பல பிரிவினரின் ஒற்றுமையை நிலைநாட்ட ஏற்றவையாக அந்த இடங்கள் திகழ்கின்றன. தனியார் துறையில் தனிப்பட்ட அதிபரின் சாதிக்காரர்களே உயர்

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரிகளாக ஆதிக்கம் செலுத்துவதைப் பார்க்கிறோம்.

இராணுவம், இரயில்வே, அரசுப் போக்குவரத்து, மின்சார வாரியம் போன்ற இடங்களில் பணிபுரிவோர் பல சமூகப் பிரிவுகளைச் சார்ந்தவராயினும்அவர்கள் அனைவரும் சின்ன - ஒன்றுபட்ட இந்தியர்வாக அந்த இடங்களில் பணிபுரிந்து வாழ்கின்றனர். கோயில்கள் என்று அழைக்கப்பட்ட இந்த நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களால் சாதி ஆதிக்கம் தலை தூக்கி, பணிபுரிவோர் மத்தியில் இருக்கும்ஒற்றுமை உடைந்து அமைதி கெடும். ஆகவே எந்த நாட்டில் தனியார் ஆதிக்கத்தை அனுமதித்தாலும் சாதி வேற்றுமைகள் உள்ள இந்தியாவில் அதனை அனுமதிக்கக் கூடாது. பொதுத்துறை நிறுவனங்கள் திறம்பட நடக்கவில்லை; நஷ்டத்தில் நடக்கிறது; தொழிலாளர்கள் வேலை செய்வது இல்லை என்பதில் உண்மைகள் இருக்கின்றன. அதே சமயத்தில் இந்த நஷ்டத்தைத் தவிர்க்க முடியும்; இலாபத்தைப் பெருக்க முடியும்; அனைவரையும் வேலை செய்ய வைக்க முடியும். திறமையின்மை, நாணயமின்மை என்ற மூட்டைப் பூச்சியை நசுக்குவதற்குப் பதிலாக பொதுத்துறை என்ற வீட்டையே கொளுத்துவது தவறு.

இலாபகாரமாக - கட்டுப்படியாகக் கூடிய நிறுவனமாகச் சில பொதுத்துறை நிறுவனங்களும் நடத்தப்படுகின்றன. மற்றும் அரசுத்துறையில் நடக்கின்ற மத்திய உயர்நிலைப் பள்ளி ஒன்றில் 2000 பெண் குழந்தைகள் படிக்கின்றனர். சாதாரணக் குடும்பங்களிலிருந்து வ்ரும் வசதியற்ற குழந்தைகளும் படிக்கும் இப்பள்ளியில் 100 சதவீதம் தேர்ச்சி பெறுவதும், குறிப்பாகக் கணிதத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் பலர் வாங்குவதும் எப்படிச் சாத்தியமாகிறது? கப்பலோட்டிய தமிழனின் பெயர்த்தி அங்கு தலைமையாசிரியையாக இருந்து தானும் ஒழுக்கமுடன் உத்தமமாக நடந்து தன்னுடன் பணிபுரியும் ஆசிரியர், ஆசிரியைகளையும் ஒழுங்குபடுத்திச் சிறந்த முறையில் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதனால் தான் இது சாத்தியமாகிறது.

இன்னொரு உதாரணம். போலீஸ் அதிகாரி திருமதி கிரண்பேடி டெல்லி திகார் சிறையில் 7000 கைதிகளை ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ளவர்களாக மாற்றியது எப்படி? கிரண்பேடி அவர்கள் ஒழுக்கம் உள்ளவராகவும், ஊழல் இல்லாதவராகவும், உத்தமமானவராகவும், சேவை செய்பவராகவும் இருந்த காரணத்தினால் தான் இது சாத்தியமானது. அவருக்குக் கீழே பணிபுரியும் அதிகாரிகளும் அவரைப் போல நடந்து கொண்டார்கள்.

இவ்வளவு பெரிய சாதனைகள் நிகழ்த்திய தலைமை ஆசிரியை திருமதி.பிரம்மகுட்டி அவர்களும், திருமதி கிரண்பேடி அவர்களும் என்ன சொல்கிறார்கள்? தாங்கள் வாங்கிய சம்பளத்திற்கு வேலை செய்கிறோம் என்று அடக்கமாகக் கூறுகிறார்கள். இப்படி - வாங்கும் சம்பளத்திற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும், தொழிலாளர்களும் வேலை செய்தால் எந்தப் பொதுத்துறை நிறுவனத்தையும் இலாபகரமாக நடத்த முடியும். அதில் வேலை செய்பவர்கள் சரியான சேவையைப் பொதுமக்களுக்குச் செய்தால் தனியார்மயமாக்கலை சேவை பெறும் பொதுமக்களே எதிர்ப்பார்கள்.

தனியார் துறையிலும் எந்தெந்தத் தொழில்கள் நடைபெறுகின்றன? எந்தெந்தத் தொழில்கள் நலிகின்றன அல்லது மூடப்படுகின்றன? எந்த நிறுவனத்தில் திறமையான நிர்வாகம், தொழிலாளர் ஒத்துழைப்பு இருக்கிறதோ அந்த நிறுவனங்கள் சிறப்பாக நடைபெறுவதையும் திறமையான நிர்வாகம் சரியான வழிகாட்டுதல் இல்லாத நிறுவனங்களில் தொழில் நலிவடைவதையும் நாம் பார்க்கிறோம்.

கடந்த காலங்களில் தனியார் துறை திறம்பட நடத்தப்படாததால் மூடப்பட்ட தொழில்களை மத்திய, மாநில அரசுகள் எடுத்து நடத்தின. தொழில்வளம் பெருக்கவும் தொழிலாளர் வாழ்க்கையைப் பாதுகாக்கவும், நாட்டுடைமை யாக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

தனியார் சில பேர் சரியாக நடத்தவில்லை. ஊழல் செய்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காகத் தனியார் துறையையே ஒழித்து விட வேண்டும் என்று யாரும் வாதம் செய்யவில்லை. அதேபோல் பொதுத் துறையில் இருக்கக் கூடிய நிறுவனங்கள் சரிவர நடத்தப்படவில்லையென்றால் சரிவர நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமே ஒழிய, அதற்குப் பதிலாக அதைத் தனியார்மயமாக்க வேண்டும் என்று தனியார்களுக்குப் பொதுச் சொத்துக்களைக் கொடுப்பது சரியான வழிமுறையாகாது. இந்தியாவைப் பொறுத்த மட்டிலும் வேலையின்மையைப் போக்கப் பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுத்துறை, கூட்டுறவுத் துறை ஆகிய அனைத்துத் துறைகளையும் ஊக்குவித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்.

**தேசபக்தி:**

தேசபக்தி, கார்கில் வெற்றி, அணுகுண்டு வெடிப்பு என்று தேசமக்களைச் சில ஊழல்காரர்கள் ஏமாற்றுவார்கள். தேசபக்தி என்பது தேசத்தில் இருக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது

படிப்பகம்

www.padippakam.com



தான். அனைவர்க்கும் உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், விடுமுறை, சுற்றுலா மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றிற்குப் பாடுபடுவதே தேசபக்தி ஆகும். அண்டை நாடுகள் மேல் பகையை மூட்டி அணுகுண்டை வெடித்து இராணுவத் தளவாடங் களைப் பெருக்குகிறோம் என்ற பெயரில் அயல் நாட்டவர் கொள்ளையடிக்க அவர்களிடம் வாங்கும் இராணுவத் தளவாடங்களுக்கு அநியாய விலைகொடுத்து, அதில் கோடி கோடியாக ஊழல் செய்யும், கொள்ளையடிக்கும் அரசியல் வாதிகள் செய்யும் - சொல்லும் போலி தேசபக்திக்குத் தொழிலாளர் வர்க்கம் மதிப்புக் கொடுக்கக் கூடாது. இந்திய உழைக்கும் மக்களுக்கும் பாகிஸ்தானிய உழைக்கும் மக்களுக்கும் எந்த விரோதமும் கிடையாது. மாறாக நட்புணர்வே உண்டு. அதே போல் தேசபக்தியின் பெயரால் இந்தியாவைக் கொள்ளையடிக்கும் கூட்டமும் நம் மத்தியில் விரோத உணர்வை ஊட்டி அவர்கள் மத்தியில் கள்ள உறவை வைத்துக் கொண்டு இரு நாட்டு மக்களையும் சூறையாடுகிறார்கள் என்பதை உணர்ந்து ஒருவருக் கொருவர் உதவியாய்ச் செயல்பட வேண்டும். இந்தியா-பாகிஸ்தானில் இருக்கக்கூடிய ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கங்கள் இரு நாட்டு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி உறவை வள்ர்க்க வேண்டும். வீண் இராணுவச் செலவுகளைத் தவிர்த்து இரு நாட்டின் வளர்ச்சியை - இரு நாட்டு மக்களின் சுபிட்சத்தைப் பெருக்குவோம். இரு நாட்டு மக்களும் முழுமையாகக் கல்வி பெறாத நிலையில் இரு நாட்டு வருமானங்களில் ஏறக்குறைய 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை இராணுவத்திற்குச் செலவு செய்வது தேவையற்ற ஒன்றாகும். இந்தச் செலவினங்கள் ஆக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

**அரசும் தொழிற்சங்கங்களும்:**

மத்திய, மாநில அரசுகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு, புதிய தொழில் துவக்கத்திற்கு வழி செய்கிறோம் என்ற பெயரில், உழைக்கும் மக்களுடைய நலனுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

தொழிலாளர்கள் நலச் சட்டங்களை இரத்துச் செய்வதும், தொழிலாளர் விரோதச் சட்டங்களை நிறைவேற்றுவதுமாக இருக்கிறார்கள்.

தொழிலகச் சட்டம், தொழில் தகராறுச் சட்டம், தொழிற்சங்கச் சட்டம் போன்ற பல தொழிலாளர் பாதுகாப்பு அம்சங்களை நீக்க முயற்சிகள் மேற்கொள்கிறார்கள்.

புதுவரிகளைப் புகுத்தியும், வரிகட்டுவோர் எண்ணிக்கையை உயர்த்தியும் கூட, பட்ஜெட் பற்றாக்குறை ஏற்படுகிறது. வெளிநாட்டுக்கடன் வட்டி மற்றும் வருடந்தோறும் திருப்பித் தர வேண்டிய அசலின் தவணைகள் கொடுக்க முடியாத நிலையும் ஏற்படுகிறது. கடனைத் தள்ளி வைக்கவும் பற்றாக்குறையைக் குறைக்கவும் IMF, WORLD BANK, WTO போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் கொடுக்கக் கூடிய நிர்ப்பந்தங்களுக்கு இந்தியா உட்பட வளரும் நாடுகள் அடிபணிகின்றன.

இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டும்; 100 சதவீதம் மூலதன முதலீட்டு முறையை அனுமதிக்க வேண்டும்; ராயல்டி பன்னிரண்டரை சதவீதம் வரைக்கும் வசூலிக்கலாம்; 2005 - 06ம் ஆண்டுக்குள் இறக்குமதி வரியை உலக அளவில் சமன்படுத்த வேண்டும் என்பவை போன்றவற்றிற்கு வளரும் நாடுகள் பலியாடுகள் மாதிரித் தள்ளாட்டி விட்டு வருகிறார்கள். இதன் விளைவு என்னவாகும்?

இப்போதே வளரும் நாடுகளுடைய அரசுகள் உலக வல்லரசுகள் சொல்கிறபடிச் செய்ய முனையும் போது தேசியத் தொழில்கள் நசுக்கப்பட்டு, பன்னாட்டுத் தொழில்கள் விஸ்தரிக்கப்படும் போது பொம்மை அரசுகளை உருவாக்கக் கூடிய வல்லமை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வந்து விடுகிறது. அரசு அதிகாரம் அவர்கள் ஆட்டுவிப்பவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டு அரசாட்சி உரிமை பறிபோகும் நிலை ஏற்படவிருக்கிறது.

**பொருளாதாரத் தாக்கம்:**

வளர்ந்த நாடுகளின் நிதி மூலதனமும், தொழில் நுட்பமும், பயன்படுத்தாத உபரியாக இருக்கக் கூடிய தொழில் திறனும் (UNUTILISED CAPACITY) நம் நாட்டைப் போன்ற வளரும் நாடுகளை ஆக்கிரமித்து விடும். தேசியத் தொழில்கள் இதற்கு ஈடு கொடுக்க முடியாது. தொழிற் புரட்சி சமயத்தில் தேசியக் கைவினைத் தொழில்கள் நலிந்து மறைந்த மாதிரி, தேசியத் தொழில்கள் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு மாறிவிடும்.

FORD MAHENDRA, FORD ஆகி விட்டது. HINDUSTAN MOTORS, CATERPILLAR ஆகிவிட்டது. HYUNDAI, MARUTHI ஆகியவை அயல் நாட்டு நிறுவனங்கள் ஆகிவிட்டன. NEW HOLLAND, JOHNDEER ஆகிய அந்நிய TRACTOR கம்பெனிகள் உள்நாட்டு TRACTOR கம்பெனிகளை ஆக்கிரமித்து வருகின்றன. TOYOTA பல் பயன் வண்டி உள்நாட்டுத் தேசிய உற்பத்தியை விழுங்கி விட்டது. இரசாயன மருந்துக் கம்பெனிகள்,

படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசி, வங்கி, காப்பீடு போன்ற பல துறைகளிலும் அயல்நாட்டு ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது.

• இந்தியாவில் எதிர்காலத்தில் பெருத்த சந்தைக்கு வாய்ப்பு இருப்பதால் - மலிவான ஊதியத்தில் திறமையான தொழிலாளர்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் ஆரம்பத்தில் நஷ்டம் வந்தாலும் கவர்ச்சிகரமாக விற்று உள்நாட்டுத்தொழில் நலிந்து பிறகு எந்த விலையையும் வைத்து விற்கக் கூடிய, அதை நாம் வாங்கித் தீர வேண்டிய நிலைமையைப் பின்னாளில் உண்டாக்கி விடுவார்கள்.

இந்தப் பன்னாட்டுத் தொழில் வர்த்தக நிறுவனங்கள் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பாடுவார்களே ஒழிய, உலக மக்களின் நலனை முன்நிறுத்திச் செயல்பட மாட்டார்கள். உதாரணத்திற்கு விவசாய விதைகளைக் கூட மீண்டும் முளைக்காத விதைகளாகக் கொடுத்து எப்பொழுதும் அவர்களுடைய விதைக்ளை வாங்கக் கூடிய நிலைமையை விவசாயிகளுக்கு உண்டாக்கி, விவசாயிகள் விதையைத் தயாரிக்கும் உரிமையைப் பறிக்கும் விதமாக உள்நாட்டுத் தொழில் முனைவைப் பறித்து விடுவார்கள்.

உலகமயமாக்கும் போது நாம் உலகத்தாரோடு சேர்ந்து வாழ்வதற்குப் பதிலாகப் பன்னாட்டு நிறுவனங்களை நாம் சார்ந்து வாழக் கூடிய நிலையை உருவாக்கி விடுவார்கள்.

**தொழிலாளர் நிலை:**

தொழில் அதிபர்கள் தொழிலாளர்களை ஆட்குறைப்புச் செய்யவும், தொழிலை மூடவும் உரிமை கொடுத்துச் சட்டம் செய்ய அறிவித்து விட்டார்கள். அதோடு, நிரந்தர வேலைகளைக் கூட ஒப்பந்த வேலைகளில் செய்யவும், தொழிற்சாலைக் குள்ளே செய்யக் கூடிய வேலைகளைக் கூட முதலாளிகள் தங்கள் இஷ்டம் போல் வெளியாரிடம் கொடுத்துச் செய்யவும் சட்டம் கொண்டு வருகிறார்கள். இதனுடைய விளைவுகள் என்னவாக இருக்கும்? முதலாளிகள் தைரியமாக ஆட்குறைப்புச் செய்வார்கள்; அந்த வேலையைக் குறைந்த கட்டணத்திற்கு வெளியில் தருவார்கள். இவைகளைச் சட்டப்பூர்வமாகச் செய்வார்கள். தொழிலாளர் களுக்காக இருக்கக் கூடிய சங்கங்கள் இவற்றைத் தடுத்து நிறுத்தவில்லை என்று சொன்னால் சங்கத்தின் மேலேயே தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்து தொழிற்சங்க இயக்கமே பலவீனப்பட்டு விடும். இந்தத் தொழிலாளர் விரோதச் சட்டங்களைப் பயன்படுத்தித் தொழிற்சங்கங்களில் முன்னணியில் இருப்பவர்களைப் பழிவாங்கப் பயன்படுத்திக் கொள்வார்கள். இப்போது இருக்கின்ற சங்கப் பாதுகாப்பு தைரியம் தொழிலாளர்களுக்கு அற்றுப் போய்விடும். தொழிற்சங்கங்கள் சாதனைகள் படைப்பதாலும் வேலைப் பாதுகாப்பிற்கு வேலியாக இருப்பதாலும் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள். தொழிற்சங்கத்தில் இருந்தால் எதுவும் நடக்காது - பாதிப்புத்தான் அதிகம் என்ற நிலை ஏற்பட்டால் தொழிற்சங்கங்கள் தேவையில்லை என்ற முதலாளிகளின் வாதம் எடுபட்டு விடும்.

இந்தியாவில் சுமார் இரண்டு கோடிப் பேர் பொதுத் துறையிலும், சுமார் ஒரு கோடிப் பேர் தனியார் துறையிலும் அணி திரட்டப்பட்ட தொழிலாளிகளாக (ORGANISED) இருக்கிறார்கள். இந்தியாவில் இந்தத் தொழிலாளர்கள் தொழிற்சங்க இயக்கத்தின் மூலமாக ஓரளவிற்கு வாழ்க்கைத் தரமுள்ள தொழிலாளர்களாக இருக்கிறார்கள். உணவு, உடை, இருப்பிடம், வைத்திய வசதி, சுற்றுலா வசதி, குழந்தைகள் கல்வி வசதி, ஓய்வுக்கால வசதி ஆகியவற்றைப் பெற்றிருக்கிறார்கள். உலகமயமாதலால், தாராள மயமாதலால், தனியார் மயமாதலால் இவர்களின் வேலை பறிபோகக் கூடிய நிலையும், வேலையில் இருக்கும் போது கிடைக்கும் சம்பளச் சலுகைகள் குறையக் கூடிய நிலையும் ஏற்படும்.

தொழிலதிபர்களின் நிறுவனங்களான FICCI, ASSOCHEM, CII போன்ற நிறுவனங்கள் ஒரு காலத்தில் உலகமயமாதல், தாராளமயமாதல், தனியார் மயமாதல் ஆகியவைகளை ஆதரித்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் தொழிலே நாசமாகக்கூடிய நிலை ஏற்படுவதால் இந்தக் கொள்கை சம்பந்தமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முணுமுணுக்கிறார்கள்; சிலர் வெளிப்படையாகவும் பேசுகிறார்கள்.

**அரசுகள், தொழிற்சங்கங்களை ஏன் புறக்கணிக் கிறார்கள்:**

வளரும் நாடுகளில் இருக்கக்கூடிய தொழிற் சங்கங்களைக் - குறிப்பாக, இந்தியத் தொழிற்சங்கங் களை மத்திய, மாநில அரசுகள் பொருட்படுத்துவ தில்லை. மத்திய; மாநில அரசுகள் தொழிலதிபர்களின் சங்கங்களைக் கலந்து உரையாடுகிற அளவிற்குக் கூடத் தொழிற்சங்கங் களைக் கலந்து உரையாடுவதில்லை. அதற்குக் காரணம் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கும் ஒற்றுமையின்மை, தொழிற்சங்கங்களின் மத்தியில் இருக்கும் போட்டி மனப்பான்மையே ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆளுகின்ற கட்சிகளே, தங்களுக்கென தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. இந்தத் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களைப் பிளவுபடுத்துவதோடு அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதச் செயல்களுக்கும் தாளம் போடுகின்றன. தொழிலாளர் மத்தியில் பேசும் போது உதட்டளவில் அவர்களுக்கு ஆதரவாக இருப்பது போல் நடிக்கிறார்கள். எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்கள் எதிர்த்தாலும் அவர்களுக்குள் இருக்கின்ற தொழிற்சங்கப் போட்டி மனப்பான்மையால் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை. 10 சதவீதம் தொழிலாளர்கள் கூட தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லை. இவர்கள் கூட ஐம்பதாயிரம் சங்கங்களில் பிளவுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். இவற்றுள் பல சங்கங்கள் முதலாளிகளின், அரசுகளின், கட்சிகளின் பிடியில் செயல்படுகின்றன. இவற்றுள் பெரும்பான்மையான சங்கங்கள் தங்கள் குறுகிய வட்ட நலனுக்காக இயங்குகின்றன. இதனால் ஓர் ஒன்றுபட்ட அமைப்போ, ஓர் ஒன்றுபட்ட இயக்கமோ, அரசாங்க முடிவுகளின் பேரில் ஓர் ஒன்றுபட்ட தாக்கமோ உண்டாக்க முடியவில்லை. இந்த நிலையைக் கண்டு இரங்கிய மறைந்த தொழிற்சங்க மாமேதை திரு. இந்திரஜித் குப்தா அவர்கள் தொழிற்சங்கங்கள் முதலில் அரசுகள், முதலாளிகள், கட்சிகளின் பிடியில் இருந்து விடுபட்டால்தான், ஓர் அமைப்பில் இருந்தால்தான், தொழிலாளர் தங்கள் நலனைப் பாதுகாக்க முடியும் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

**எப்படி ஒன்றுபடுவது:**

இந்தியத் தொழிலாளர்கள் கடந்த 100 ஆண்டு காலமாகத் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். AITUC ன் கீழ் 1948 ம் ஆண்டு வரைக்கும் ஒரே அணியில் இருந்தார்கள். இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முன்னணிப் படையாகச் செயல்பட்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களிடம் சுதந்திர இந்தியாவை ஒப்படைப்பதற்கு இந்தியத் தொழிற்சங்க இயக்கம் ஒரு பெரிய காரணியாக இருந்தது. பம்பாயில் 1946ல் கடற்படை எழுச்சி ஏற்பட்டு இந்தியக் கடற்படை வீரர்கள் வெள்ளை அதிகாரிகளைச் சுட்டு வீழ்த்தி 'தால்வார்' என்ற கப்பலில் காங்கிரஸ், முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட் கட்சிக் கொடிகளை ஏற்றினார்கள். அவர்களுக்கு ஆதரவாகத் தொழிலாளர்களும் பம்பாய் AITUC ன் தலைமையின் கீழ் திரண்டு பம்பாயை ஸ்தம்பிக்க வைத்தார்கள். அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த ஆட்லி அவர்கள் இனி இந்தியாவை நம்மால் ஆள முடியாது என்ற முடிவிற்கு வந்து காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் ஆகியோரிடம் ஆட்சியின் பல அம்சங்களை ஒப்படைத்து ஆட்சி மாற்றத்திற்கு வழி செய்தார். அவ்வளவு பெரிய சாதனையை இந்தியா ஒன்றுபட்ட தொழிலாளி வளர்க்கம் ஏற்படுத்தியதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பம்பாய் தொழிலாளர்கள் ஏற்படுத்திய இயக்கம் சென்னை, கல்கத்தா போன்ற பல நகரங்களில் விரிந்து தொழிலாளர் மத்தியில் பேரெழுச்சியை ஏற்படுத்தியது.

**தொழிற்சங்க இயக்கத்தின் பலவீனமும் பலமும்:**

அரசியல் சுதந்தரங்களை அன்று போராடிப் பெற்ற தொழிலாளர் வர்க்கம், இன்று தன்னுடைய வாழ்வே பறிபோகும் வகையில் உலகமயமாதல், தாராள மயமாதல் மற்றம் தனியார் மயமாதல் நடைபெறும் போது அற்றைத் தடுக்கச் சக்தியற்றவர்களாய்க் காட்சியளிப்பதற்கு காரணம் என்ன? அன்று தொழிலாளர் வர்க்கம் ஒரே அமைப்பின் கீழ் இருந்தது. இன்று தொழிலாளர் வர்க்கம் பல சங்கங்கள் அமைப்பின் கீழ் இருக்கிறது. இதுதான் வித்தியாசம்.

பிளவுபட்டு இருப்புதால் புறக்கணிக்கப்படுகின்ற தொழிற்சங்க அமைப்புகள், ''ஒன்றுபட்டால்தான் வாழ்வு உண்டு'' என்ற அடிப்படையை இப்போது உணரத் தொடங்கியிருக்கின்றன. அதனுடைய எதிரொலியாய் AITUC தன்னுடைய அமைப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிடியில் இருந்து விலகிக் கொண்டு அனைவரையும் தொழிலாளி வர்க்க அடிப்படையில் ஒன்றுபடுத்த சில ஆண்டுகளுக்கு முன்னர்ல் தீர்மானம் போட்டது. அதைத் தொடர்ந்து AITUCம் HMSம் இணைவது என்று இரு அமைப்புகளும் தீர்மானம் போட்டன. இணைப்பு இன்னும் முழுமையடையவில்லை. இந்தியா முழுவதும் பல பாகங்களில் உள்ள தொழிற்சங்க இயக்க அமைப்புகள் ஒன்றுபட வேண்டும் என்ற வேட்கை வெளிப்படுத்தப் படுகிறது. 1999 அக்டோபரில் பம்பாயில் பெருவாரியான தொழிற்சங்க அமைப்புகள் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்று நடைபெற்று ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும் என்ற எண்ண எழுச்சி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை அண்ணாமலை மன்றத்திலும் சூலை 2000 த்தில் WPTUC ன் முன்கையெடுப்பினால் நடைபெற்ற கருத்தரங்கில் AITUC, HMS, CITU மற்றும் IMF ஆகிய அமைப்புகள் பங்கு பெற்ற ஒன்றுபட்ட இயக்கத்திற்கான தேவையை எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கான தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**நம்முடைய இப்போதைய உடனடித் தேவை என்ன?**

கோவையில் நாளை நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்ற

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுகோளை முன் வைத்தபோது அனைத்து அமைப்புகளும் அதற்குச் சம்மதித்துப் பங்கேற்கின்றனர். இன்றைய தேவை ஒற்றுமை, ஓர் மைப்பு, ஒரு செயல் திட்டம், அதன் அடிப்படையில் அனைவரும் செயல்படுதல் என்ற ஒருமித்த கருத்தே நிலவுகிறது. இதற்குச் செயல்வடிவம் கொடுக்கத் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

உலகம் முழுவதும் இருக்கக் கூடிய தொழில் நுட்பம் உலக மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படவேண்டும். ஒரு சாராரைப் பணக்காரர்களாகவும், பெரும்பான்மையினரை வறுமையின் கீழ் தள்ளுவதும் போன்ற போக்கை அனுமதிக்கக் கூடாது. விஞ்ஞான முன்னேற்றம், தொழில் நுட்ப மேம்பாடு இவற்றை அனைத்து மக்களும் அனுபவிக்கக்கூடிய நெறிமுறையை இந்தியத் தொழிலாளர் வர்க்கம், உலகத் தொழிலாளர் வர்க்கத்துடனும் ஒன்றிணைத்து கடைபிடிக்க முடியும். உலகத்தினுடைய போக்கை - உலக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உலகத் தொழிலாளர் வர்க்கம் தான் நிர்ணயிக்க வேண்டும். உலகத்தைச் சூறையாடும் 350 குடும்பங்களிடம் உலக மக்களுடைய வாழ்க்கையை ஒப்படைக்கக் கூடாது.

கோவை நகரம் தொழிலிலும் சிறந்தது. தொழிற்சங்கப் பாரம்பரியம் கொண்டது. இங்கு நாளை சொல்லப்படும் கருத்துக்களுக்கு நாம் உருவம் கொடுத்துஓர் தொழிற்சங்க ஜனநாயக அமைப்பை ஏற்படுத்த எழுச்சி பெற்றுத் தொடர்ந்து செயல்படுவோம்.

**ஒவ்வொரு நிறுவனத்திலும் இருக்கக் கூடிய உழைக்கும் மக்களை ஒரு தொழிற்சங்க அமைப்பின் கீழ் ஒன்றாக்குவோம். அந்தத் தொழிற்சங்க அமைப்பிலும் ஜனநாயக ரீதியில் சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்போம். அதேபோல் ஒரே மாதிரியான தொழில் இருக்கக் கூடிய சங்கங்களையெல்லாம் இணைத்து ஒரு கூட்டமைப்பு (FEDERATION) ஏற்படுத்துவோம்.**

பல தொழில் கூட்டமைப்புகளை ஒன்றிணைத்துப் பெருங்கூட்டமைப்பு (CONFEDERATION) ஏற்படுத்துவோம். அந்தக் கூட்டமைப்பையும் பெருங்கூட்டமைப்பையும் உலக அமைப்புகளோடு இணைப்போம்.

நாளை நடைபெறும் கருத்தரங்கில் இந்தக் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டால், ஆறே மாதத்தில், இந்தியத் தொழிலாளர்கள் அனைவரையும் ஓர் அமைப்பின் கீழ்க் கொண்டுவர முடியும். உடனே சாத்தியமில்லை என்றாலும் விரைவில் சாத்தியமாக்கிட WPTUC தொடர்ந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதுவே இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தைப் பாதுகாக்கும் வழியாகும்.

இந்திய மொத்த ஆண்டு வருமானத்தில் தொழிலும், சேவை நிறுவனங்களும் 70 சதவீத வருமானத்தை ஈட்டுகின்றன. மீதம் உள்ள சுமார் 30 சதவீத வருமானம் விவசாயத்திலிருந்து கிடைக்கிறது. 70 சதவீத வருமானத்தை ஈட்டும் தொழிலாளர்கள் ஓர் அமைப்பின் கீழ் ஒருருவாய்ப்- பேருருவாய் விஸ்வரூபம் எடுத்தால் அரசுகள் அந்த மாபெரும் சக்தியைப் புறக்கணிக்க முடியாது. இன்று விவசாயக் குடிகளும், சிதறுண்ட - அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளர்களும், மத சாதி அமைப்புகளில் ஈர்க்கப்படக் காரணம் என்ன? தொழிற்சங்க இயக்கம் பிளவுபட்டு இருப்பதால் - அது ஒரு மாபெரும் சக்தியாகத் திகழாமல் இருப்பதால் - மக்கள் பிரச்சனைகளைக் கையிலெடுத்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்காததால் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு அல்லலுறும் மக்களைச் சாதிமத அமைப்புகள் எளிதாய் ஈர்த்து விடுகின்றன. சமூகம் ஊழல்களில் சிக்கித் திக்குமுக்காடுகிறது. ஒன்றுபட்டு முன்னேறுவதற்குப் பதிலாகப் பிளவுபட்டுப் பிணக்குகளில் சிக்கித் தவிக்கிறது; அமைதி கெடுகிறது. வன்முறைகள் நாடு முழுவதும் தலைதூக்கி உள்ளன. வன்முறைத் தீவிரவாதங்களில் இளைஞர்கள் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். முறையான, வலுவான, ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கம் மக்களுக்கு வழிகாட்டத் தவறி விட்டதால்தான் இந்த ஊழல்கள், குழப்பங்கள், வன்முறைகள், அமைதியின்மை, நம்பிக்கையின்மை ஆகியவை தாண்டவமாடுகின்றன.

நிறைவுரை:

இந்தியத் தொழிலாளி வர்க்கம் என்ஜினாக இருந்து இந்தியச் சமூகத்தை நல்வழியில் இழுத்துச் செல்ல வேண்டும். பலமான இந்தியாவை உருவாக்கி நலமான வாழ்வை அனைத்து இந்தியர்களும் அடைய இந்தியத் தொழிலாளி வர்க்கம் ஓர் அமைப்பின் கீழ் திரள வேண்டும்.

இந்திய மக்களுடைய பிரச்சினைகளை அந்நியர் வந்து தீர்க்க மாட்டார்கள். நாம் தான் நம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அந்த வழியில் செல்ல நாளை நடக்கும் அனைத்துத் தரப்பினர் கருத்தரங்கம் உதவட்டும் என வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

***( 1. 4 .2001 அன்று கோவையில், இரா. குசேலர் ஆற்றிய உரை)***

●


படிப்பகம்

www.padippakam.com



# என்று அணையும் இந்தப் பசித் தீ?

க. முகிலன்



அக்டோபர் 16 - உலக உணவு நாள். ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் உலகில் உள்ள மக்கள் அனைவர்க்கும் உணவு கிடைக்க வேண்டும் என்று 'உபதேசிக்கப் படுகிறது.'

அய்க்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ரோம் நகரில் இருக்கிறது. 1974 இல் ரோம் நகரில் உலக உணவு மாநாடு நடைபெற்றது. ''பத்து ஆண்டுகளுக்குள் (1984க்குள்) ஒரு குழந்தையோ, ஒரு பெண்ணோ, ஓர் ஆணோ பசித்த வயிறுடன் படுக்கச் செல்லும் நிலையை ஒழித்திட வேண்டும்; அதேபோன்று ஊட்டமான உணவின்மையால் (Malnutrition) உடல் வளர்ச்சியோ, மூளை வளர்ச்சியோ பாதிக்கப்படக் கூடிய நிலையையும் போக்கிட வேண்டும்'' என்று அம்மாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இத்தீர்மானத்தின்படி உலகில் பட்டினியில்லா நிலை உருவாகியிருக்கிறதா?

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 1960க்குள் 14 வயதுக்குட்பட்ட அனைவர்க்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆனால் அய்ம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 40 கோடி மக்கள் எழுத்தறிவற்றவர்களாகவே இருக்கின்றனர். எல்லோருக்கும் உணவு கிடைக்கச் செய்வது என்பதும் இதேகதியில்தான் இருக்கிறது.

மீண்டும் 1996 இல் உலக உணவு மாநாடு கூடியது. இம்முறை சற்று எச்சரிக்கையுடன் தீர்மானம் போட்டார்கள். ''2015க்குள் பசித்த வயிறுடன் வாழ்வோரின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைப்பது'' என்பதைக் குறிக்கோளாக அறிவித் தார்கள்.



அய்க்கிய நாடுகள் அவை கடந்த பத்து ஆண்டுகளாக ஒவ்வோர் ஆண்டும் மனித வள மேம்பாட்டு அறிக்கையை (Human Development Report) வெளியிட்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டிற்கான 11ஆவது அறிக்கை இப்போது வெளியிடப் பட்டுள்ளது. இந்த அறிக்கையிலும் 2015க்குள் பசியுடன் வாழ்வோரின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது இலட்சியமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் 2015க்குள் அனைவர்க்கும் தொடக்கக் கல்வி அளித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காதவர் எண்ணிக் கையைப் பாதியாகக் குறைத்தல் முதலானவைகளும் குறிக்கோளாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.

இதிலிருந்து ஒன்று நன்றாகப் புலப்படுகிறது. எந்நாளும் எல்லோர்க்கும் பசியாற உண்ண உணவு கிடைக்காது. அடுத்து ஒரு கேள்வி எழுகிறது! எல்லா நாடுகளிலுமா பட்டினிப் பட்டாளம் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறது? இதற்கு 2001 ஆம் ஆண்டின் மனிதவள மேம்பாட்டு அறிக்கையே பதில் கூறுகிறது.

வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள் என்பனவற்றில் தாம் பசியால் வாடுவோர் மிகுந்திருக்கின்றனர். தற்போது உலக மக்கள் தொகை 600 கோடி. இதில் வளரும் நாடுகளின் மக்கள் தொகை 460 கோடி. இவர்களில் 120 கோடி மக்கள் ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் (ரூ.45) குறைவான வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 280 கோடி மக்கள் ஒரு நாளைக்கு இரண்டு டாலருக்கும் (ரூ.90) குறைவான

படிப்பகம்

www.padippakam.com



வருவாயுடன் வாழ்கின்றனர். இதனால் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் ஆண்டுதோறும் 110 இலட்சம் குழந்தைகள் உணவின்மையாலும், ஊட்டச்சத்துக் குறைவினாலும், பல நோய்களுக் குள்ளாகி மடிந்து கொண்டிருக் கின்றன. அதாவது ஒரு நாளைக்கு 30,000 குழந்தைகள் சாகின்றன (Human Development Report - HDR 2001). 460 கோடி மக்களில் 120 கோடி மக்கள் கொடிய வறுமையில் உழல்கின்றனர்; மேலும் 280 கோடி மக்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்றனர். எஞ்சியுள்ள 60 கோடி மக்கள் (13%) மட்டுமே வளமான வாழ்வைப் பெற்றுள்ளனர்.

இந்தியாவில் உள்ள நிலையைக் காண்போம். இந்தியாவில் தற்போது மக்கள் தொகை 103 கோடி. இவர்களில் 35 கோடி மக்கள் கொடிய வறுமையில் இருக்கின்றனர். வறுமைக்கோட்டிற்கும் கீழே நலிவுற்றுக் கிடக்கும் மக்கள் எண்ணிக்கை பற்றி அரசியல் கட்சிகள் தங்கள் வசதிக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 35 கோடி என்பதை தேசிய மாதிரி ஆய்வும் (National Sample Survey) அமர்த்தியாசென், ஜீன் மர்ஸ் போன்ற பொருளாதார வல்லுநர்களும், உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளன. 35 கோடி மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் குறைவாகவே வருவாய் கிடைக்கிறது. இவர்களில் 5 கோடி மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றனர்.



மேலும் 50 கோடி மக்கள் ஏழ்மையில் வாழ்கின்றனர். இவர்களின் ஒரு நாள் வருவாய் இரண்டு டாலருக்கும் குறைவு. இந்தியாவில் கிட்டத்தட்ட 90 விழுக்காடு மக்களின் ஒருநாள் வருவாய் இரண்டு டாலருக்கும் குறைவு என்று உலக உணவு திட்ட அமைப்பு (WFP) கூறியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது. ''இடும்பை கூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது'' என்று 35 கோடி மக்கள் ஒரு வேளையேனும் வயிறார உண்ண உணவின்றித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். 50 கோடி மக்கள் பசித்தீயுடன் படுத்துறங்க வேண்டிய நிலையில் இல்லையாயினும், மூன்று வேளையும் போதிய உணவு கிடைக்காத நிலையில் இருக்கின்றனர். எஞ்சியுள்ள 15 கோடி மக்கள் மட்டுமே ஊட்டமான சுவையான உணவை மூன்று வேளையும் உண்பதோடு, உயர்ந்த வாழ்க்கை வசதிகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

வளரும் நாடுகளில் 460 கோடி மக்களில் 400 கோடி மக்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்றனர். ஆனால் வளர்ந்த நாடுகளின் மக்கள் தொகையான 140 கோடியில் 13 கோடி மக்கள் மட்டுமே ஏழ்மை நிலையில் இருக்கின்றனர். (HDR 2001 பக்.9-10). வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளின் மக்களுக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வு மலைக்கும் மடுவுக்குமானதாக இருக்கிறது. அமெரிக்காவில் தற்போது மக்கள் தொகை 28.14 கோடி. இவர்களில் பத்து விழுக்காட்டினரின் - 2.8 கோடிப் பேர்களின் ஆண்டு வருவாய் வளரும் நாடுகளில் ஏழ்மையில் கிடக்கும் 200 கோடி மக்களின் ஒட்டுமொத்த வருமானத்தை விட அதிகம் (ஃபிரண்ட்லைன் ஆகஸ்ட் 18, 2001). எனவேதான் அமெரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் 25 விழுக்காட்டினராக மட்டும் இருந்த போதிலும், உலகின் இயற்கை வளங்களில் 80 விழுக்காடு அளவிற்குத் துய்க்கின்றனர். அதனால்தான் அமெரிக்காவில் 100க்கு 90 குடும்பங்கள் ஒரு மகிழுந்து (கார்) வைத்துள்ளன. 18 விழுக்காடு குடும்பங்களில் மூன்றுக்கு மேற்பட்ட கார் மற்ற வாகனங்கள் இருக்கின்றன. 25 விழுக்காடு குடும்பங்களின் வீடுகளில் 7 அறைகளுக்கு மேல் இருக்கின்றன. (ஃபிரண்ட்லைன், செப்.28, 2001).

உலகில் எழுத்தறிவற்றவர்களில் பாதிப் பேர் இந்தியாவில் இருக்கின்றனர். ஊட்டச்சத்து குறைவானவர்களிலும் பாதிப் பேர் இந்தியாவில் இருக்கின்றனர். பெண்களில் பாதிப் பேருக்கு இரத்தச் சோகை உள்ளது. பிறக்கும் குழந்தைகளில் 100 இல் 30

படிப்பகம்

www.padippakam.com





குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறக்கின்றன. (எம்.எஸ்.சாமிநாதன்)

இந்தியாவில் பட்டினிச் சாவின் விளிம்பில் உள்ள 5 கோடி மக்கள் யார்? இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். வாழ்நாள் முழுவதும் நிரம்பாத தம் வயிற்றுடன் போராடுபவர்கள்; கொடிய வறுமையால் மெல்ல மெல்லக் கொல்லப்படுபவர்கள் இவர்கள்.

நீந்தத் தெரியாதவன் நீரில் மூழ்கித் தத்தளிப்பது போல் ஆழ்ந்த ஏழ்மை நீர்ச் சுழலில் சிக்கிக் கரையேற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் மீதி 30 கோடி மக்கள் யார்? இவர்களில் 70 விழுக்காட்டினர் தாழ்த்தப்பட்ட - பழங்குடி வகுப்புகளைச் சேர்ந்தவர்கள்; 30 விழுக்காட்டினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள உடலுழைப்புச் சாதியினர். இம் முப்பது கோடி மக்களில் 80 விழுக்காட்டினர் நிலமற்றவர்கள். விவசாயக் கூலிகள்; உடலுழைப் பாளிகள்; உதிரிப் பாட்டாளிகள். இவர்களின் பிள்ளைகளில் பெரும்பாலோர் பள்ளிக்குச் செல்வதில்லை; செல்வோரும் ஓராசிரியர், இரண்டு ஆசிரியர்கள் கொண்ட அரசுப் பள்ளிகளில் அய்ந்தாம் வகுப்பைத் தாண்டுவதில்லை. நோய் வந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனையை நாடுவார்கள்; பிழைத்தால் உண்டு! இல்லையேல் சாவுதான்!

இருவேளையேனும் பசியாற உண்ணும் நிலையில் உள்ள 50 கோடி மக்களில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் 10 விழுக்காடு; மேல் சாதியினர் 10 விழுக்காடு. எஞ்சியவர் சூத்திரச் சாதியினர். இவர்கள் பிறந்த சாதியின் தர வரிசைக்கு ஏற்ப உடைமையும், கல்வியும், உத்தியோகமும், அரசியல் செல்வாக்கும் பெற்றிருக்கின்றனர். இவர்களில் கீழ்த்தட்டில் இருப்போர் தம்பிள்ளைகளைத் தமிழ் வழிக் கல்விப் பள்ளிக்கும், ஆங்கிலமறியா ஆங்கிலப் பள்ளி களுக்கும் அனுப்புகின்றனர். தீவிர நோய்த் தாக்குதலின் போது மட்டும் தனியார் மருத்துவரை அணுகுகின்றனர். மேல்தட்டில் இருப்பவர்கள் தமிழ் வழிக் கல்வியாயினும் அதிலும் நல்ல பள்ளிக்குத் தம்பிள்ளைகளை அனுப்புகின்றனர். நகரங்களில் ஆங்கில வழிக் கல்விப்பள்ளிக்கே அனுப்புகின்றனர். அரசு மருத்துவமனைக்குச் செல்வதில்லை. ஆயினும் பல ஆயிரக்கணக்கில் செலவு செய்ய வேண்டிய நோய்க்கு ஆளாகும் போது பெரிய அரசு மருத்துவமனையை நாடுகின்றனர்.

வளமான வாழ்க்கை வாழும் 15 கோடி மக்களில் 90 விழுக்காட்டினர் பார்ப்பனர்; மற்ற மேல் சாதியினர். உயர் கல்வி, உயர்ந்த உத்தியோகம், இவர்களின் ஏகபோகமாக இருக்கிறது. பெரும் நிலப்பண்ணையார் களாகவும், தொழில் முதலாளிகளாகவும் இருப்பது இவர்களே! தமிழகம் தவிர பிற மாநிலங்களிலும் இந்திய அளவிலும் அரசியல் தலைமையிலும் ஆட்சியிலும் நிர்வாக நீதித் துறையிலும் பெரும் பங்கு பெற்றிருப்பது இவர்களே!

இந்தியாவில் எந்தவொரு சிக்கலை ஆராயும் போதும் சாதியுடன் இணைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இக் கண்ணோட்டம் பெரியாரும் மேதை அம்பேத்கரும் நமக்குக் கற்றுத் தந்துள்ள பாடம். பட்டினிச் சாவு என்றால் கூட ஒரு பார்ப்பானோ, ஒரு மேல் சாதிக்காரனோ பட்டினியால் சாகும் நிலை இந்தியாவில் இல்லை. கற்பழிப்பு என்றால் தாழ்த்தப்பட்ட - பழங்குடிப் பெண்களே 90 விழுக்காட்டினர். பூலான்தேவி ஒரு சத்திரிய மேல் சாதிப் பெண்ணாக இருந்தால் கொடூரமாகச் சுடப் பட்டிருக்க மாட்டாள். அப்போது பூலான்தேவியை ஒரு புரட்சிக்காரியாகச் சித்திரித்திருப்பார்கள் மேல் சாதியினர்.

கடந்த ஏப்பிரல் மாத இறுதியில் தில்லியில் 'பட்டினி இல்லா இந்தியாவை நோக்கி' என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் வாஜ்பாய் 2007 இல் பத்தாவது அய்ந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் வறுமையின் காரணமாக பசியுடன் வாழும் நிலையை அறவே போக்கிட வேண்டும் என்று கூறினார். இந்தியாவின் கிராமப்புறங்களில் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்காத நிலைக்கான காரணங்களும் அவற்றை நீக்குவதற்கான

www.padippakam.com



வழிமுறைகளும் என்ற கையேட்டையும் பிரதமர் வெளியிட்டார்.

ஆனால் சூன் மாதம் முதலே ஒரிசாவில் பட்டினிச் சாவுகள் நிகழ்வது குறித்துச் செய்திகள் வெளிவரத் தொடங்கின.' சூலை, ஆகசுட்டு மாதங்களில் ஒரிசாவில் பட்டினியால் பலர் மடிந்தனர்; இவர்களில் பெரும்பாலோர் பழங்குடியினர். பட்டினிச் சாவுகள் குறித்துப் பத்திரிகைகளில் விரிவான செய்திகள் வந்தன. ஆனால் ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக், அரிசி கிடைக்காததால் இவர்கள் இறக்கவில்லை; பூஞ்சணம் பிடித்த மாங்கொட்டையைத் தின்றதால் இறந்தனர் என்று கூறினார். இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், மகாராட்டிரத்தின் சில பகுதிகள், கர்னாடகம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவுவதாகவும் செய்திகள் வெளிவந்தன. இதையொட்டி, இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்திய உணவுக் கழகத்தில் (Food Corporation of India - FCI - C.E.P.) கோதுமையும் அரிசியும் சேர்த்து 5 கோடி டன் கையிருப்பு இருக்கும் போது ஏழை மக்கள் பசித் துன்பத்தில் இருப்பது ஏன்? என்ற கேள்வி எழுந்தது. இந்தச் சூழ்நிலையில் ஆகசுட்டு 15 அன்று பிரதமர் வாஜ்பாய் செங்கோட்டையில் கொடியேற்றி விட்டு, சம்பூர்ண கிராமின் ரோஸ்கார் யோஜனா (SGRY) என்ற திட்டத்தை அறிவித்தார். இதற்கு 10,000 கோடி நிதி ஒதுக்குவதாக அங்கு கூடியிருந்த மக்களின் பெருத்த கரவொலிக்கிடையே முழங்கினார். **கிராமப் புறங்களில் வேலைக்கு உணவுத் திட்டம் (Food for work) என்பது இதற்கான தமிழ்ப் பெயராகும்.**

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது 'வறுமையே வெளியேறு' (Garibi Hatao) என்று முழங்கியதால் வறுமை ஒழியவில்லை. ஆனால் இப்போது மக்கள் குடியுரிமை அமைப்பு (PUCL) உச்ச நீதிமன்றத்தில் ஆகசுட்டு 20 அன்று பொது நல வழக்கு ஒன்றைத் தொடுத்தது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் விதி 21 இல் உயிர் வாழ்வதற்கான உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 5 கோடி டன் தானியம் கையிருப்பு இருந்தும் நூற்றுக்கணக்கில் பட்டினிச் சாவு நிகழ்கிறது; பல கோடி மக்கள் உண்ண உணவு இல்லாமல் பசித் துன்பத்தில் இருக்கின்றனர். உச்ச நீதிமன்றம் உடனே இதில் தலையிட்டு இதற்குத் தீர்வு காண வேண்டும் என்பது வழக்கின் சாரம். இவ்வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது. 5 கோடி டன் தானியத்தை இருப்பு வைத்துக் கொண்டு, கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் தவிக்கும் நிலைக்காக மய்ய, மாநில அரசுகளைக் கண்டனம் செய்தது. வறுமையில் வாடுவோர்க்கு உடனே அரசு உணவளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. இதன் பிறகே அரசியல் கட்சிகள் வாய் திறந்து இதுகுறித்துப் 'பேசத் தொடங்கின. சக்களத்திச் சண்டையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கருத்துக் கூறவில்லை. 'தானியம் குவிந்து கிடக்க, இந்தியக் குடிமகன் பட்டினியால் சாவதா? அந்தோ! கொடுமையிலும் கொடுமை!' என்றார் சோனியா காந்தி!

ஆகசுட்டு 15 அன்று செங்கோட்டையிலிருந்து அறிவித்த கிராமப் புறங்களில் வேலைக்கு உணவுத் திட்டத்தை பிரதமர் வாஜ்பாய் உத்திரப் பிரதேச மாநிலத்தில் (அங்கு விரைவில் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தால்), அக்டோபர் மாதம் ஒரு கிராமத்தில் முறைப்படித் தொடக்கி வைத்தார். பாரதிய சனதாக் கட்சியின் ஏடாக விளங்கும் **தினமணி** கிராமப்புறங்களில் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பும், தானியமும், பணமும் அளிக்கும் மிக உன்னதமான திட்டம் இது என்று தலையங்கம் (5.10.2001) எழுதிப் போற்றிப் புகழ்ந்துள்ளது.

இதற்கு முன் ஏழைகளுக்கு உணவும், வேலை வாய்ப்பும் அளிப்பதற்கான திட்டங்கள், ஏற்பாடுகள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படவில்லையா? நேரு காலம் முதலே இந்திய உணவுக் கழகம் (FCI) செயல்பட்டு வருகிறது. உணவு பங்கீட்டுக் கடைகள் (PDS பொது விநியோக முறை) இயங்கி வருகின்றன. இந்திரா காந்தி காலம் முதல் ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் பல்வேறு பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போது பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ள சம்பூர்ண கிராமிய வேலைவாய்ப்புத் திட்டம் என்பது இதுவரை நடைமுறையில் இருந்த 1. ஜவகர் கிராம மேம்பாட்டுத் திட்டம், 2. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய இரண்டையும் இணைத்து, பழைய மொந்தையில் புதிய கள் என்பது போல் புதிய பெயர் சூட்டப்பட்டதாகும்.

ரூ.10,000 கோடி என்ற மாயையை - போலிப் பெருமையை உடைத்துக் காட்ட வேண்டியுள்ளது. முன்பே வேலைக்கு உணவுத்திட்டத்திற்காக 5000 கோடி இந்திய உணவுக் கழகத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 50 இலட்சம் டன் கோதுமையும் அரிசியும் வேலைக்கு உணவுத் திட்டத்தில் கூலியில் பாதித் தொகைக்கு தானியமாக வழங்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள - முன்பு நடைமுறையில் இருந்த இரண்டு திட்டங்களுக்காக 3750 கோடி ஒதுக்கப்பட்டது. இப்போது இது 5000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 10,000 கோடி என்று பீற்றிக் கொள்ளுவதில் உண்மையில் 'புதியதாக உயர்த்தப்பட்டுள்ள தொகை 1250 கோடி மட்டுமே!

படிப்பகம்

www.padippakam.com



வேலைக்கு உணவுத் திட்டத்தில் கூலியில் 50 விழுக்காடு பணமாகத் தரப்படும். இத் தொகையில் 75% மய்ய அரசு அளிக்கும்; மாநில அரசு 25% தரும். இதற்கு முன் மய்ய அரசும் மாநில அரசும் சரி பாதி தரவேண்டும் என்று இருந்தது. பணம் இல்லை என்ற காரணத்தால் வேலைக்கும் உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை; இதனால் வேலைக்கு உணவுத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தானியத்தை மத்தியத் தொகுப்பி லிருந்து எடுக்கவில்லை என்று மாநில அரசுகள் கூறியதால் மய்ய அரசு பணமாக்த் தருவதில் தன் பங்கை 75% ஆக உயர்த்திக் கொண்டது. நாட்டின் வருவாயில் பெரும் பகுதியை மய்ய அரசே எடுத்துக் கொள்ளுகிறது என்ற உண்மையை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய உணவுக் கழகம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கங்கள்: 1. அறுவடைக் காலத்தில் நெல்லையும் கோதுமையையும் ஒரு குறிப்பிட்ட நிலையான விலையில் கொள்முதல் செய்வதால் தனியார் தானிய வியாபாரிகள் அறுவடைக் காலத்தில் வெளிச் சந்தையில் இவற்றின் விலையை அவர்கள் விருப்பம் போல் குறைக்க முடியாது. பெரும் ஏற்ற இறக்கங்களுக்கு இடந்தராத நிலையான விலையால் விவசாயிகளுக்குத் தாங்கள் விளைவித்த நெல்லுக்கும், கோதுமைக்கும் ஓரளவு இலாபம் கிடைக்கிறது. 2. அறுவடைக் காலம் முடிந்த பிறகு தனியார் தானிய வியாபாரிகள் அரிசி, கோதுமையின் விலையை அதிகமாக உயர்த்த முனையும் போது இந்திய உணவுக் கழகத்தின் கையிருப்பிலிருந்து வெளிச்சந்தைக்கு விற்பதால், விலை உயர்வு கட்டுப்படுத்தப்படுகிறது. 3. பொது விநியோக முறையின் (PDS) கீழ் உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள் மூலம் அரிசி, கோதுமை மானிய நிலையில் வழங்கப்படுவதற்கு இந்திய உணவுக் கழகத்தின் (இ.உ.க.) கையிருப்பிலிருந்து பெறப்படுகிறது. இதன் மூலமும் வெளிச்சந்தையின் தானிய விலை கட்டுப்படுத்தப்படுகிறது. 4. வறட்சி, பஞ்சம் வெள்ளம் முதலான காலங்களில் நிவாரணப் பணிகளுக்காக இலவசமாகவும், வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழும் வழங்கப்படும் அரிசி, கோதுமை, இ.உ.க. இருப்பிலிருந்து அளிக்கப்படுகிறது.

இந்திய உணவுக் கழகத்தின் பிரச்சினை என்ன? இப்போது அதிகமாகப் பேசப்படுகிறது - உபரி இருப்பு 2 கோடி டன் இருந்தால் போதும், ஆனால் 6 கோடி டன் கொள்முதல் செய்து இருப்பு வைத்திருப்பது ஏன்? என்பதாகும்! குஜ்ரால் பிரதமராக இருந்தபோதே தேவைக்கு மேல் கொள்முதல் செய்யும் போக்கு அரசியல் காரணத்திற்காகத் தொடங்கியது. குஜ்ரால் பஞ்சாப் மாநிலத்துக்காரர். பஞ்சாப் அகாலிதளம் கட்சி குஜ்ராலுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தாமல் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஆவதற்கு உதவி செய்தது. இதற்கு நன்றிக் கடனாகவும், பஞ்சாபியர் என்ற உணர்வாலும் பஞ்சாபில் தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக மய்ய அரசு செலவிட்ட பணத்தில் பஞ்சாப் அரசின் பங்காக மய்ய அரசுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகையாக இருந்த ரூ.5000 கோடியை பிரதமர் குஜ்ரால் தள்ளுபடி செய்து விட்டார். இந்தியாவில் கொள்முதல் செய்யப்படும் நெல்லில் 80 விழுக்காடு பஞ்சாப், அரியானா மாநிலங்களிலிருந்து தான் கிடைக்கிறது. அடுத்தது ஆந்திரம். குஜ்ரால் பிரதமராக இருந்த காலத்திலேயே பஞ்சாபிற்கான குறியீட்டு அளவை விடக் கூடுதலாகக் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை (பு.பொ.கொ.) இந்தியாவில் 1991 இல் நரசிம்மராவ் பிரதமரானது முதல் நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கின் வழிகாட்டுதலின்படி தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டது. பு.பொ.கொள்கையின் முதலாவது நோக்கம் வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக் குறையைப் போக்க வேண்டும் என்று கூறப்பட்டது. உலக வங்கியின் வற்புறுத்தலின் காரணமாக மக்கள் நலத் திட்டங்களுக்குச் செலவிடும் தொகையை மெல்ல மெல்லக் குறைத்திட மய்ய அரசு ஒத்துக் கொண்டது. 70 விழுக்காடு மக்கள் உழவுத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற - 35 கோடி மக்கள் கொடிய வறுமையில் உழன்று கொண்டிருக்கின்ற இந்திய நாட்டில் விவசாயத்திற்கு முதன்மையானதாகத் தேவைப்படும் உரங்களுக்கான மானியத்தைக் குறைத்தது. அடுத்ததாகப் பொது விநியோகத்தின் கீழ் வழங்கப்படும் தானியங்களுக்கான மானியத்தைக் குறைக்கத் திட்டமிடப்பட்டது.

உணவு தானியம் கிடைக்காமல் தவிப்பவர்களுக்கு அரசு மானிய விலையில் தானியம் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பங்கீட்டுக் கடைகளில் வாங்குவோரை இரண்டு பிரிவாகப் பிரித்திட மய்ய அரச 1997 பிப்பிரவரியில் முடிவு எடுத்தது. முதலாவது பிரிவினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் (Below Poverty Line - BPL - வ.கோ.கீ). இவர்களுக்கு இந்திய உணவுக் கழகம் கொள்முதல் செய்த அரிசி / கோதுமையின் பொருளாதார விலையில் (Economic cost) 50 விழுக்காடு விலையில் விநியோகம் செய்யப்படும். இரண்டாவது பிரிவினர் வறுமைக் கோட்டிற்கு மேலேயிருப்பவர்கள் (Above Poverty Lime - APL - வ.கோ.மே). இவர்களுக்குப் பொருளாதார விலையில் 90 விழுக்காடு விலையில் விநியோகிக் கப்படும். அதாவது இவர்கள் 10 விழுக்காடு மானியம் மட்டுமே பெறுவார்கள். இ.உ.க.தின் பொருளாதார

படிப்பகம்

www.padippakam.com



விலை என்பது கொள்முதல் விலை, போக்குவரத்துச் செலவு, சேமிப்புச் செலவு, இதில் பணிபுரியும் 60,000 பேர்களின் ஊதியம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையாகும். 1997 சூன் முதல் வ.கோ.கீ. வ.கோ.மே என்பது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு மாதந் தோறும் 10 கிலோ அரிசி/ கோதுமை வழங்கப்படும். மாநில அரசுகள் விரும்பினால் தரப்படும் அளவை உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் அதற்கான மானியச் செலவை அம்மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். 2000 ஏப்பிரல் முதல் மய்ய அரசு வ.கோ.கீ. பிரிவினருக்கு மாதந்தோறும் வழங்கும் தானியத்தின் அளவை 10' கிலோவிலிருந்து 20 கிலோவாக உயுர்த்தியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பாக பா.ச.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தது முதல் நெல்/ கோதுமை கொள்முதல் விலை ஆண்டுதோறும் உயர்த்தப்பட்டது. அதேபோல் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் விற்பனை விலையும் உயர்த்தப்பட்டது. விவசாயத்தில் விளை பொருளுக்குரிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருவதால், கொள்முதல் விலையை உயர்த்தியது சரிதானே என்று எண்ணத் தோன்றும். நெல் கொள்முதல் முதலைப் பொறுத்தவரை - முன்பே குறிப்பிட்டது போல் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் 80 விழுக்காடு கொள்முதல் செய்யப்படுகிறது. அடுத்தது ஆந்திரம். எனவே நெல் கொள்முதலின் விலை உயர்வால் நேரடியாகப் பெரும் பயன் அடைபவர்கள் இம்மூன்று மாநிலங்களில் உள்ள பெரிய விவசாயிகளே! கோதுமை கொள்முதலில், பஞ்சாப் - அரியானா மாநிலங்களிலிருந்து 60 விழுக்காடும், பிற வட இந்திய மாநிலங்களிலிருந்து 40 விழுக்காடும் கொள்முதல் செய்யப்படுகிறது. சிறு/ குறு விவசாயிகளிடம் இ.உ. கழகத்திடம் விற்பதற்கான உபரி விளைச்சல் இருப்பதில்லை. தம் குடும்பத்தின் உணவுத் தேவைக்கே பெரும்பாலும் போதுமானதாக விளைச்சல் இருப்பதில்லை. சிலரிடம் உபரி விளைச்சல் இருந்தாலும் சாகுபடிச் செலவுக்காக உள்ளூர் தானிய வியாபாரியிடம் வாங்கிய கடனை அடைப்பதற்காக உள்ளூர் தானிய வியாபாரிகளுக்கே விற்க நேரிடுகிறது. இதுபோன்று உள்ளூர் தானிய வியாபாரிகள் கடந்த 5 ஆண்டுகளாக சிறு - குறு விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு நெல் - கோதுமையை வாங்கி இ.உ.க. இல் இலாப விலைக்கு விற்று வருகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக வாஜபாய் அரசு பஞ்சாபில் உள்ள தன் கூட்டணிக் கட்சியான அகாலிதளக் கட்சிக்கும், ஆட்சிக்கும் பயந்து நெல், கோதுமை கொள்முதல் விலையை ஆண்டுதோறும் உயர்த்தியது. கொள்முதல் செய்ய வேண்டிய அளவையும் அறவே நீக்கியது. மேலும் கொடுமை என்னவென்றால் 13% மட்டும் இருக்க வேண்டிய நெல்லின் ஈரப்பதம் 20% வரை இருக்கலாம் என்று அனுமதித்தது. இது தரங்கெட்ட நெல் கொள்முதலுக்கு இடமளித்தது. இதேபோன்று ஆந்திரம், பீகார் அரசுகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி நெல், கோதுமை ஆகியவற்றின் தரத்தைப் பாழ் செய்தது.

இதன் விளைவு என்னவாயிற்று? இரண்டு கோடி டன் மட்டும் இருப்பு இருந்தால் போதும். ஆனால் 6 கோடி டன் தானியம் இருப்பு உள்ளது. விழிபிதுங்கி நிற்கிறது இ.உ.க. சமூக அக்கறை கொண்ட பல்துறை அறிஞர்கள் வேலைக்கு உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தித் தானியச் சேமிப்பின் அளவைக் குறைக்க வேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தார்கள். மிகவும் காலம் கடந்து இந்த அக்டோபர் மாதத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆனால் இதன் பயன் ஏழ்மையில் வாடும் மக்களுக்கு ஆறில் ஒரு பங்கே போய்ச் சேரும்.

இ.உ கழகத்திடம் நெல், கோதுமை விற்றவர்கள் யார்? பெரும் நில உடைமையாளர்களாகவும், மேல்சாதியினராகவும் இருப்பவர்கள். இவர்கள்தாம் சங்பரிவாரங்களுக்கும், பா.ச.க.விற்கும், காங்கிரசுக் கட்சிக்கும் அடித்தளமாக இருப்பவர்கள். இவர்களின் நலனைப் பெருக்குவதற்காகவே கொள்முதல் விலையையும், அளவையும் கண்ணை மூடிக் கொண்டு உயர்த்திய வாஜ்பாய் அரசு, பசியால் வாடும் ஏழைகளின் எதிரி! இதே அக்கறையைக் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏழை மக்களுக்கு உணவு தானியம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் ஏன் காட்டவில்லை?

கொள்முதல் விலையை உயர்த்தியதன் உடன் விளைவாக பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை விற்பனை விலையும் உயர்த்தப்பட்டது. இதனால் வ.கோ. மேல் உள்ள பிரிவினர்க்கு வழங்கப்படும் அரிசி, கோதுமையின் விலையும் வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கிறது. மேலும் பங்கீட்டுக் கடையில் வழங்கப்படும் அரிசி தரங்கெட்டதாக இருப்பதால் வ.கோ.மே. உள்ளவர்கள் பங்கீட்டுக் கடையில் இதை வாங்கு வதில்லை. இதனால் மய்ய அரசு அண்மையில் வ.கோ.மே. பிரிவினர்க்கான விற்பனை விலை அதன் பொருளாதார விலையில் 75% என்றும், வ.கோ.கீ. உள்ள பிரிவினர்க்கு 40% என்றும் குறைத்துள்ளது. இப்போதுள்ள விலை:

படிப்பகம்

www.padippakam.com



| | வ.கோ.மே ரூ./கிலோ | வ.கோ.கீ ரூ./கிலோ |
|---|---|---|
| அரிசி | 11.30 | 5.65 |
| கோதுமை | 8.30 | 4.15 |

வ.கோ.மே. பிரிவினர்க்கும், வ.கோ.கீ பிரிவினர்க்கும் வழங்கப்படும் விலையில் உள்ள பெருத்த வேறுபாடு கள்ளச் சந்தையை மேலும் வளர்த்து விட்டது. பொது விநியோகத்திற்கு என்று ஒதுக்கப்படும் அரிசி, கோதுமையில் 41 விழுக்காடு கள்ளச் சந்தைக்குப் போகிறது (Frontline Sep. 14, 2001). இதில் பீகார், அசாம் முதலிடத்தில் உள்ளன. இ.உ.க. அதிகாரிகள், அரசியல்வாதிகள், பெரிய தானிய வணிகர்கள், உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கும் (சிவில் சப்ளைஸ்) துறை அலுவலர்கள் ஆகிய அனைவரும் கள்ளச் சந்தையின் கூட்டாளிகள். 41 விழுக்காடு கள்ளச் சந்தைக்குப் போவது குறித்து மய்ய அரசும், மாநில அரசுகளும் வாய் திறப்பதில்லை. மானியத்தில் தானியம் தருவதால்தான் நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று கூச்சலிடும் கும்பல் கள்ளச் சந்தையைத் தடுப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? மாறாக ஆண்டிற்கு 13,500 கோடித் தொகை தானிய விநியோக மானியமாகப் போகிறது என்று புலம்புகிறார்கள்.

ஒரு டன் தானியத்தை ஓராண்டுக் காலம் சேமித்து வைக்க ஆகும் செலவு ரூ.2300. தற்போது இ.உ.கழகத்திற்கு சேமிப்புச் செலவு மட்டும் 6000 கோடி. உலக வங்கி, இந்திய உணவுக் கழகத்தை ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையில், ''50% இருப்பு இரண்டு ஆண்டுகளானவை; 30 விழுக்காடு தானிய இருப்பு நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்டவை'' என்று கூறியுள்ளது.

எலிகளாலும், பூச்சிகளாலும், ஊழல் பெருச்சாளிகளாலும் கொள்ளை போகின்ற அரிசி, கோதுமையை அடுத்த வேளை உணவுக்கு வழியின்றித் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு அளித்திட மய்ய அரசும் மாநில அரசும் ஏன் தீவிரமாக முயற்சி எடுக்கவில்லை? இது அவர்களுடைய பொறுப்பு - கடமை என்று அவர்கள் நினைப்பதில்லை. 1997 சூன் முதல் வ.கோ.மே. வ.கோ.கீ. என்ற பிரிவு நடப்பில் உள்ளது. ஆனால் வ.கோ.கீழ் உள்ள 35 கோடி மக்களுக்கு இன்னும் பங்கீட்டு அட்டை முழுமையாகத் தரப்படவில்லை. 16 மாநிலங்களும் இரண்டு யூனியன் பிரதேசங்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் பட்டியலை இன்னும் தயாரிக்கவில்லை என்பது கடுங் கண்டனத்திற்குரியதாகும் என்று உச்சநீதிமன்றம் சாடியுள்ளது. கணக்கு எடுத்த இடங்களிலும் உண்மையில் கொடிய வறுமையில் இருப்பவர்களுக்குப் பங்கீட்டு அட்டை வழங்கப்படவில்லை. ஆசியாவின் மிகப் பெரிய குடிசைவாழ் பகுதியான பம்பாயில் உள்ள தாராவியில் 151 குடும்பங்களுக்கு மட்டுமே பங்கீட்டு அட்டை தரப்பட்டுள்ளது. தலைநகர் தில்லியில் 20 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். இவர்களுக்கு ஓர் அட்டை கூட அளிக்கப்பட வில்லை. (அவுட்லுக், செப்.17, 2001).

குடியரசு எனப்படும் நாட்டில் மக்களுக்கான ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதனவாகத் தேவைப்படும் உணவு, குடிநீர், மருத்துவ வசதி, கல்வி, எரிபொருள் ஆகியவற்றை அளிக்க வேண்டியது அரசின் முதல் கடமையாகும். அப்போதுதான் அது மக்கள் நல அரசு என்று கருதப்படும். ஆனால் இந்தியாவில் 54 ஆண்டுகளாக நடைபெறும் ஆட்சிகளும் ஆட்சியாளர்களும் இதைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. இதற்கு முன்னுரிமை தருவதில்லை. ஏழை மக்களின் பசியைத் தணிப்பதில் பொது விநியோக முறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் பங்கீட்டுக் கடைகளில் தானியம் வாங்குவோர் பற்றிய விவரம் சில முக்கிய மாநிலங்களுக்கு மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது.

மாநிலத்தின் மக்கள் தொகையில் பங்கீட்டுக் கடைகளில் மானிய விலையில் அரிசி, கோதுமை வாங்குவோர் விழுக்காடு

| மாநிலம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| 1. கேரளம் | 87.7 | 87.0 |
| 2. கர்னாடகம் | 61.9 | 62.7 |
| 3. தமிழ்நாடு | 53.5 | 55.4 |
| 4. ஆந்திரம் | 59.7 | 51.4 |
| 5. மேற்கு வங்கம் | 26.9 | 59.8 |
| 6. பீகார் | 1.7 | 7.1 |
| 7. உத்தரப்பிரதேசம் | 2.1 | 7.0 |
| 8. மத்தியப்பிரதேசம் | 9.1 | 17.4 |
| 9. இராஜஸ்தான் | 8.8 | 5.6 |
| 10. ஒரிசா | 1.7 | 13.8 |
| இந்திய அளவில் | 26.8 | 35.5 |

(India: Economic Development and Social Opportunity. Jean Dreze, Amartya Sen. முழுப் பட்டியல் நூலில் காண்க)

இந்துத்துவத்தின் கோட்டையாக உள்ள மாநிலங்களில் மக்களுக்கு உணவு தானியம் வழங்குவது இழிந்த நிலையில் இருந்த போதிலும், இராமனுக்கு அயோத்தியில் கோயில் கட்டுவதே உயிர் மூச்சு என்று இவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருப்பது, மக்கள் விழிப்படையக் கூடாது; மடையர்களாகவே இருக்க வேண்டும் என்பதற்காக வேயாம்.

2001 ஆண்டின் மனித வள மேம்பாட்டு அறிக்கை

படிப்பகம்

www.padippakam.com



வெகு மக்களின் கொடிய வறுமை, கல்லாமை, மருத்துவ வசதியின்மை, குடிநீர் கிடைக்காமை முதலானவை பற்றி விரிவாக ஆராய்ந்திருந்த போதிலும், அந்த அறிக்கையின் முகப்பு அட்டையில் 'மனிதவள மேம்பாட்டைப் புதிய தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடைவோம்' (Making New Technology Work for Human Development) என்பதைத் தீர்வாகக் கூறியிருப்பது நரித்தனமான ஏமாற்று வேலையாகும்.

அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்த உயர் தொழில் நுட்பம் முற்றாக இப்போது பன்னாட்டு நிறுவனங்களிடம் சென்று விட்டது. இவர்கள் ஏவிவிடும் ஆள் விழுங்கும் பூதங்களாக உலக வணிக மையம், உலக வங்கி, பன்னாட்டு நிதியம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

எம்.எஸ். சாமிநாதன் போன்றவர்களும், மற்ற சமூக அக்கறை கொண்டோரும் தொழில் நுட்பத்தைப் பரவலாக்குவதும், உள்ளாட்சிகளுக்கு அதிகாரத்தை அளிப்பதும் தீர்வாகும் என்று கூறி வருகிறார்கள். இம்முயற்சிகளால் சிறிதளவு பயன் ஏற்படும். ஆயினும் கடுமையான நிலச் சீர்திருத்தம் மூலம் நிலத்தைப் பிரித்தளித்தல், மற்றும் கல்வி, சுகாதார வசதி, வேலை வாய்ப்பு ஆகியவற்றை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு அளிப்பதன் மூலமே இவர்களின் இருண்ட வாழ்வில் ஒளி உண்டாகும். பசித் தீ அப்போதுதான் அணையும். ●

### தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா மற்றும் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

தந்தை பெரியார் பிறந்த தின விழா மற்றும் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு 25.11.2001 அன்று காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை ஓசூர் - சிவா வளாகத்தில் நடைபெற்றது. காலையில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா அற்புதம் குயில்தாசன் தலைமையில் நடைபெற்றது. கோவை கு. இராமகிருஷ்ணன் மாநாட்டைத் துவக்கி வைக்க பேரா. சுபவீரபாண்டியன், மு.அந்தாலனார், தமிழேந்தி, கி.த. பச்சையப்பன், வழக்கறிஞர் துரைசாமி, அ.சி. சின்னப்பா தமிழர் உட்படப் பலர் புங்கேற்க குளத்தூர் தா.செ.மணி, சிறப்புரை ஆற்றினார். பிற்பகல் 3 மணி அளவில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு இளமுருகு பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை ப.சண்முகசுந்தரம், (கர்நாடகத் தமிழர் பேரவை) துவக்கி வைத்திட, ஆனூர் ஜெகதீசன், பெ.மணியரசன், தியாகு, வாலாசா வல்லவன், இறைக்குருவனார், நர.ப. இராமசாமி, ச.மெல்கியோர், தமிழ் வேங்கை உட்படப் பல தோழர்கள் பங்கேற்றனர்.

### பாவலரேறு தமிழ்க்களத் தொடக்கவிழா

நாள்: தி.பி. 2033 சுறவம் 6, காரி (19.1.2002) பிற்பகல்

★ தமிழ்க்களம் திறப்பு

★ நூலகம் திறப்பு

★ பாராட்டு நிகழ்ச்சி

★ அரங்கம் திறப்பு

★ நூல் வெளியீடு

★ அலுவலகம் திறப்பு

★ தமிழ்நாட்டிலும் அயல் நாடுகளிலும் உள்ள முதுபெருந் தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள், தமிழ்நல - பொதுநல இயக்கங்களின் முன்னோடிகள், கலைத் துறையினர் மற்றும் பல்துறைப் பெருமக்கள் பங்கேற்கின்றனர்.

★ பாவலரேறு ஐயா அவர்களின் அரும் பணிகளில் ஆசிரியக் குழுவினர்ராகவும், பணித்துணைவர்களா கவும் கருத்துப் பரப்புநர்களாகவும், அனைவரும் பாராட்டப் பெறுகின்றனர்.

★ தென்மொழி அன்பர்கள் அனைவரும் குடும்பத் தோடும் நண்பர்களுடனும் வருகை தர அணிய மாகுங்கள்!

பாவலரேறு தமிழ்க் களத்துக்கு உங்கள் பங்களிப்பைச் செலுத்தி விட்டீர்களா?

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' என்னும் பெயரில் வரைவோலை / காசோலை / பணவிடை அனுப்ப வேண்டிய முகவரி:

தாமரை பெருஞ்சித்திரனார்<br>
நிறுவனர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்<br>
அறக்கட்டளை<br>
செந்தமிழ் அடுக்ககம்,<br>
மேடவாக்கம் - கூட்டுச் சாலை<br>
சென்னை - 601 302.

### முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 103 ஆவது பிறந்த நாள் விழா

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் 103 ஆவது பிறந்த நாள் விழா 27.11.2001 அன்று மாலை 5 மணிக்கு சென்னை மயிலாப்பூரில் உள்ள கற்பகம் ஓட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பதிப்புச் செம்மல் முனைவர் ச.மெய்யப்பன், பாரி நிலையம் சு. செல்லப்பன் மற்றும் மூத்த எழுத்தாளர் வல்லிக் கண்ணன் ஆகியோர் பாராட்டு பெற்ற சான்றோர்கள் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com



# கல்வி கோழைத் தனத்தை வளர்க்கிறதா?

- இரா. இரத்தினகிரி



இன்றையப் படிப்பு மனிதாபிமானத்தைக் கற்றுத் தருகிறதா என்றால், படிக்காதவர்களை விடச் சில படித்தவர்களிடம் தான் மனிதாபிமானமே இருப்பதில்லை! சென்னை அண்ணாசாலையில் ஒருவர் விபத்தில் அடிபட்டு இரத்தப் பெருக்கோடு துடிதுடித்துக் கொண்டு சாவதை, பல படித்தவர்கள் பார்த்துக் கொண்டே கார் ஓட்டிச் செல்வதைப் பார்க்கலாம். யாராவது ஒரு ஆட்டோ டிரைவர், பரிதாபப்பட்டு வண்டியை நிறுத்தி அடிபட்டவரை மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்தால் ஒருவேளை பிழைக்கலாம்!

இன்றையப் படிப்பும் புத்தகங்களும் பொதுவாக மனிதனுக்கு நேர்மையை நாணயத்தைக் கற்றுக் கொடுக்கிறதா என்றால், இல்லை!

எத்தனை அய்.ஏ.எஸ். அதிகாரிகள், பெரிய, பெரிய, படிப்புப் படித்தவர்கள் எல்லாம், எத்தனை இழிவான, அதாவது மனிதர்கள் நினைக்கக் கூசுகின்ற காரியங்களையெல்லாம் செய்துவிட்டு இன்றைக்கு வழக்கு மன்றங்களுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

இன்றையப் படிப்பும், புத்தகங்களும் சமூகப் பொறுப்புணர்ச்சியைக் கற்றுக் கொடுத்திருக் கின்றனவா என்றால், இன்றைக்குப் படித்தவர்கள் வேலை செய்யும் அலுவலகங்களிலே, வங்கிகளிலேயெல்லாம் பார்க்கலாம். ஆட்களே இல்லாத நாற்காலிகளுக்கு மேல் மின் விசிறிகள் சுழன்று கொண்டிருப்பதையும், பட்டப் பகலில் எல்லாச் சன்னல்களும் திறந்திருக்கும் வேளையிலும், எல்லாக் குழல் விளக்குகளும் எரிந்து கொண்டிருப்பதையும் பார்க்கலாம். படித்த யாரும் மின்சாரம் வீணாகிறதே என்று அவற்றை நிறுத்த வரமாட்டார்கள்! ஓர் அலுவலகத்தில் கூடப் பொதுக்கழிப்பறைகள் சுத்தமாக இருப்பதைப் பார்க்க முடியாது. குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் கிடைக்காது. பல அலுவலகங்கள் இயங்கும் வளாகங்கள், அடுக்குமாடிக் கட்ட டங்கள் குப்பைக் கூடங்களாகக் காட்சியளிப் பதையும் பார்க்கலாம். தன் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்புணர்ச்சி அலுவலகத் தில் இருப்பதில்லை! படித்தவர்கள் வேலை பார்க்கும் அலுவலகங்களில் முகாம் போகாதவர்கள் கூட உரிய நேரத்தில் இருக்கையில் இருப்பது அரிது. சில நேரங்களில் ஒருவருக்குப் பக்கத்தில் மற்றொருவர் பதில் சொல்லக் கூட ஆள் இருக்க மாட்டார்கள். காலையும், மாலையும் ஊழியர் இருக்கையில் காணாவிட்டால் பக்கத்தில் இருப்பவர் சொல்வார். 'டீ'க்குப் போயிருப்பார், 'லஞ்ச்' போயிருப்பார், 'உடம்பு சரியில்லை டாக்டர்கிட்டே போயிருப்பார்' என்று படித்தவர்கள் இப்படிப் பொய் சொல்லவும் தயங்குவதில்லை.

இதிலே அலுவலகம், பெரிதாகப் பெரிதாகப் பொறுப்புணர்ச்சி குறையும். தாலுகா அலுவலகத்திலே இருப்பவர்களை விட, கலெக்டர் அலுவலகத்திலே இருப்பவர்கள் பொது மக்களிடம் சற்றுக் கூடுதல் அலட்சியமாக நடந்து கொள்ளுவார்கள்; அவர்களை விட சென்னைத் தலைமைச் செயலகத்திலே இருப்பவர்கள்; அவர்களுக்கும் மேலே மாநிலக் கணக்காயர் போன்ற மத்திய அரசாங்க அலுவலகங்களிலே பணியாற்றும் படித்தவர் களிடையே கூட அதிகம் இந்த அலட்சிய உணர்ச்சியைப் பார்க்கலாம். அவரவர்களுக்கு இருக்கும் ஊழியர் சங்கங்கள், கூட்டமைப்புகள், பேரமைப்புகள் எல்லாம் ஊதியத்துக்கு உரத்த குரல் கொடுக்கிற அளவுக்குப் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றிட வேண்டும் என முழக்கமிடுவதில்லை. படித்தவர்களின் நிலை இப்படி இருக்கலாமா?

கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் எல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்தரத்தோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதே யாகும் - என்றார் தந்தை பெரியார். அப்படிப்பட்ட சுதந்தர எண்ணம் உருவாக்கப் பட்டிருக்கிறதா என்றால், இல்லை. பெரிய பெரிய படிப்புகள் படித்து வேலைக்கு வந்த அதிகாரிகள்தான், தம் மேலதிகாரிகளிடம் சர்வ அடிமையாக நடந்து கொள்ளுவதும், தன் கீழ் உள்ள அலுவலர்கள் எல்லாம் தன்னிடம் சர்வ அடிமைகளாகவே நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பதும், அப்படி யாரும் நடந்து கொள்ளவில்லை எனில் அந்த அலுவலர்களைத்

படிப்பகம்

www.padippakam.com





வாங்கி அலுவலகச் செலவினங்களிலே வாங்கிக் கொள்ளலாமா?' என்று அடுக்கடுக்காகக் கேள்வி மேல் கேள்வி கேட்டுப் பதில்களைக் குறித்துக் கொள்வார்கள்!

யாராவது, ''ஏன் சார்? இப்படித் தேவையில்லாத, புத்தியில்லாத காரியத்தில் நேரத்தையும் பணத்தையும் அதிகாரத்தையும் செலவு செய்கின்றீர்களே!'' என்று கேட்டால் - ''கேள்வி கேட்பது எங்கள் வேலை இல்லை! கலெக்டர் என்ன சொல்கிறாரோ அதைச் செய்வதுதான் நம் வேலை! குறுக்குக் கேள்வி கேட்டால் . அது எவ்வளவு அறிவு பூர்வமாக இருந்தாலும் அது கீழ்ப்படியாமை (Disobedience) என்றே கருதப்படும். நடவடிக்கை எடுத்து விடுவார்கள்; வேலை போய்விடும்'' என்று பதில் சொல்வார்கள். ஆனால் அப்படியெல்லாம் எவரையும் வேலையிலிருந்து அனுப்ப முடியாது என்பதே உண்மை!

தண்டிப்பதும் தான் இன்றைய நடைமுறையாகும்.

இன்றையப் படிப்பும் புத்தகங்களும் உண்மையை, துணிவைக் கற்றுக் கொடுத்திருக்கின்றனவா என்றால், இல்லை! வயிற்றை நிரப்பவே படிப்பு என்கிறார்கள். இன்றைக்கு அதுவும் இல்லை.

எடுத்துக்காட்டாக, காடுகளே இல்லாத பகுதியில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர், தம் ஆளுகையில் உள்ள எல்லாத் தாசில்தார்களையும் அழைத்து, ''ஒவ்வொருவரும் ஆளுக்குப் பத்து லிட்டர் புலிப்பால் கொண்டு வந்து தர வேண்டும்'' என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எந்தத் தாசில்தாராவது இதை மறுப்பாரா? என்றால் நிச்சயம் மறுக்க மாட்டார்கள்! ''என்னுடைய வட்டத்தில் (தாலுகாவில்) காடுகள் இல்லை, காடுகள் இருந்தாலும் அங்கே புலிகள் இருக்குமா? அப்படியே புலிகள் இருந்தாலும் அதைப் பிடித்து யாராவது பால் கறக்க முடியுமா? அப்படியே நான் உயிரைத் திரணமாக வைத்துப் புலிப்பால் கொண்டு வந்து கொடுத்தாலும் அதன் தேவை என்ன? அதை வைத்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? அதனால் என்ன உபயோகம்?'' என்று யாரும் ஆட்சியரைக் கேள்வி கேட்க மாட்டார்கள்!

கலெக்டரைத் தாசில்தார் கேள்வி கேட்டால் நிர்வாகம் நடத்த முடியுமா? நியாயத்தைக் கூட எவரும் கேட்க மாட்டார்கள்! பின், எப்படி நடந்து கொள்வார்கள் என்றால்:

'எப்போது புலிப்பால் வேண்டும்? காலையா? மாலையா? நீங்களே அங்கே வந்து சேகரித்துக் கொள்வீர்களா? அல்லது நாங்களே கொண்டு வர வேண்டுமா? வாகனம் நாங்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமா? பாத்திரங்கள் நீங்களே மொத்தமாக வாங்கி எங்களுக்கு வழங்குவீர்களா? அல்லது நாங்களே உள்ளூரில் போட்டி மதிப்பீடுகள்

''ஒரு மாவட்டத்தையே நிர்வாகம் செய்கிற ஆட்சித் தலைவருக்கு இங்கே புலிகள் இல்லை என்பது தெரியாதா? புலிப்பால் வழங்கக் கடைசி நாள் வரை காத்திருப்போம். கெடு முடிந்த நாளில் ஆளுக்குப் பத்து லிட்டர் எருமைப் பாலையாவது வாங்கிக் கொடுத்து, அதுதான் புலிப்பால் என்று சத்தியம் செய்ய வேண்டும்.'' இதுதான் ஆட்சியர் அதிகாரம் - நிர்வாக நடைமுறை என்றால், இதைச் சுலபமாக யாரும் மறுக்க முடியாது!''

ஒரு உதாரணத்துக்காகத்தான் மாவட்ட ஆட்சியர், தாசில்தார் என்று கட்டுரையில் வருகிறது. இதே நிலைதான் தலைமைச் செயலகத்தில் செயலாளர், துணைச் செயலாளர், உதவிச் செயலாளர் என்பவர்களிடமும் மற்றும் துறை நிர்வாகம் என்றால் இயக்குநர், இணை - துணை - உதவி இயக்குநர்கள் பணி நிலைகளில் உள்ளவர்களும் இயக்கப் படுகிறார்கள்.

**தேவையில்லாத ஒன்றை மேலதிகாரிகள் செய்யச் சொன்னாலும், அதைப் பொது நன்மை கருதி மறுக்கின்ற துணிவை, தெளிவை அரசு அதிகாரிகள், ஆசிரியர்களுக்கு நம்முடைய படிப்பும் புத்தகங்களும் கொடுப்பதில்லை. இந்தப் புத்தகங்களே படிப்பவர்களைக் கோழைகளாக்கி விடுகின்றன என்பது அசைக்க முடியாத உண்மையாகத் தெரிகிறது!**

நமக்குச் சொல்லிக் கொடுக்கிற படிப்பு, நாம் படிக்க முடிகிற படிப்பு, புத்தகங்கள் இவையெல்லாம் நமக்கு மனிதாபிமானம், நேர்மை, நாணயம், சமூகப் பொறுப்புணர்ச்சி, சுதந்தரம், துணிவு, தெளிவு எதையுமே கற்றுக் கொடுப்பதில்லையே!

எப்போது அப்படிப்பட்ட கல்வி, கிடைக்கும்?

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 9

# முடியாட்சி – குடியாட்சி எல்லாம் குடுமி ஆட்சியே!

- ஒலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டண்ட்)

*மருதமுத்து:* வாரும், அய்யரே. அடாது ஸ்டிரைக் நடந்தாலும் - விடாது மன்றம் நடக்கும்னு வந்துட்டீரே! மரத்தடி மன்றம் அப்படி இழுக்குதா?

*மன்னார்சாமி:* ஆச்சரியமாவும் இருக்கு - சந்தோஷமாவும் இருக்குங்க. நமக்கு என்ன இங்கிலீஷ் பேப்பர் படிக்க முடியுதா - நீங்க வந்தாதான் இங்கே 'விஷயதானம்'

*வெங்கடேசய்யர்:* உனக்கு என்னய்யா - நாலு செருப்பு பிஞ்சா - உலை காஞ்சுடறது. மழைக்காலத்தில் நிறையவே செருப்பு பிய்யும். நேத்து யுனிவர்சிடி லைப்ரரிக்குப் போனேன். ஜம்முன்னு - ஆம்னி பஸ். ஏறினா - எடு பத்து ரூபாங்கறான். கபால்னு வெளியே குதிச்சேன். பின்னாலேயே - மினிபஸ். அஞ்சு ரூபாயோட போச்சு! என்னாடி ராக்கம்மா பாட்டு. டிரைவர் சீட்டுக்கு பின்னாலே - பனியன் ஜட்டி எல்லாம் காயறது. எங்கேயோ - ஈரோட்டில் ஓடின பஸ் போல இருக்கு. ஆனா - 2 கண்டக்டர் - 2 கிளீனர் - ஒரு டிரைவர் - பல்லவன் மாதிரி கூட்டத்தில் ஏமாத்த முடியாது. சந்து பொந்துல்லாம் சிட்டு மாதிரி நுழைஞ்சு பறக்குறான். திரும்பறச்சே - பளபளன்னு 'குவாலிஸ்' வேன் - ஏறிக்குங்கோ - ஏறிக்குங்கோன்றான். ஒசின்னு - அடையார் வந்தா - எடு பத்து ரூபாங்கறான். தாலி அறுது - பஸ் ஸ்டிரைக்கால - தினப்படி ரூ.20 ஆவுது பஸ் செலவு மட்டும்.

*மருதமுத்து:* அது பரவாயில்லையே அய்யரே. நேத்து ஜி.எச்.சுக்கு - என் சீக்காளி சொந்தக்காரனைப் பர்க்கப் போனேன். எல்லாம் வெள்ளை சட்டை - டிரைவர் - கண்டக்டர். நேரா பிளாட்பாரத்து மேலே ஏத்திப்புட்டான். மிரண்டு ஓடின - நடைபாதை வாசிகள் திரும்பி வந்து பஸ் கண்ணாடியை உடைச்சான். ஆள் பிழைச்சது அதிர்ஷ்டம்னு தப்பிச்சு ஓடினேன்.

*மன்னார்சாமி:* தினமணிகாரர் நல்லா அடி எடுத்து குடுக்கறார்ங்கோ - டெம்பரவரி டிரைவர் ஓட்டின பஸ் ஆளைக் கொன்னுது - மினி பஸ் சுவத்தில் இடிச்சுதுன்னு.

*வெங்கடேசய்யர்:* தினமணியில் சிவராமன் காலத்து விஷமிகள் பத்துப் பேர் இருக்கா - ரொம்ப அல்பம். ஒரு மல்யுத்த வீரனை - மாமிச மலைன்னு எழுதறான். மசூதி இடிச்சவனை - இந்து தீவிரவாதின்னு எழுதறதில்லை. ஆனால் கோயம்பத்தூர் குண்டு மட்டும் - முஸ்லிம் தீவிரவாதி. தோப்பில் மீரான் தான் கேட்டார் - தீவிரவாதின்னு சொல்லுங்களேன் - முஸ்லிம்னு சேர்த்து - ஒரு மார்க்கமே - வன்முறை மாதிரி ஏன் சொல்றீங்கன்னு. ஏன் வாஜ்பேயி - வெளிநாட்டில் பேசறாரே - மதத் தீவிரவாதம்தான் உலகத்தின் பேராபத்துன்னு. இவாள் - ராமாயண டி.வி. ஒலிபரப்பு இரண்டு வருடம் பண்ணி - ரத யாத்திரை ஒரு வருடம் நடத்தி - பாபர் மசூதியை இடிச்சது மகா யோக்யமான செயல் மாதிரி.

*மருதமுத்து:* அய்யரே - இன்னிக்கு செம மூடில் இருக்கீர்! 'சேம்சைட் கோல்' போட்டு விளாசுறீர். பஸ் ஸ்டிரைக்கு பத்தி சொல்லுமே!

*வெங்கடேசய்யர்:* இந்த ஊழியர் யூனியன்கள்லே - கம்யூனிஸ்ட் நிறைய இருக்கா. இந்திய கம்யூனிஸ்ட் அதிலும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தண்ட கருமாந்திரம். பெரிய பெரிய மிட்டா மிராசு - நிலச் சீர்திருத்தம் எல்லாம் உட்டுடுவா. பண்ணையாளுக்கு தினக் கூலியை ஏத்து - பஸ் கூலிகளுக்கு போனஸை ஏத்து... இதான் இவாளுடைய மார்க்சிசம் - வெறும் ஒன்னே முக்காலணா - கம்யூனிஸ்ட்.

*வந்தவர்:* ஏங்க - எல்லா யூனியனும்தானே போராடறாங்க - கம்யூனிஸ்ட்டை ஏன் பிரிச்சு சொல்றீங்க. (செருப்பை கழட்டி விட்டு) ஒரு ஆணி அடிப்பா.

*வெங்கடேசய்யர்:* உலகப் பார்வையும் - தத்துவப் பின்னணியும் கம்யூனிஸ்டுக்கு தானே இருக்கணும்? வெளியில் நிலைமை என்ன? கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லை. ஜனங்க மூச்சு திணறிண்டிருக்கா. அதில் 8.33 போனஸ் போதாதுன்னா எப்பிடி? குடுக்குறதை வாங்கிக்க - மேல கேளு. இன்னும் ஒரு வாரம் ஸ்டிரைக் நடந்தா - பஸ் ஊழியரை மக்களே உதைப்பார்கள் போலிருக்கே! லொடுக்குன்னு பஸ் ஓட்டற வேலையை டிவிஎஸ் காரன் கிட்டே குடுத்துட்டா உன் கதி என்ன?

*வந்தவர்:* இரு இரு. அவசரமா - குடும்பத்தோட உண்ணாவிரதத்துக்கு போறன் - வந்து பேசிக்கிறேன், உதைப்பானாம் - டிவிஎஸ்ஸிடம் கொடுப்பானாம். பாப்பம்.

படிப்பகம்

www.padippakam.com



மருதமுத்து: அய்யரே - அடக்கி வாசியும். எதுக்கு வயசான காலத்திலே அடி உதை?

வெங்கடேசய்யர்: (ஆள் தூரமாகப் போனது பார்த்து) கிழிச்சான். குரைக்கிற நாய் கடிக்காது. அரசாங்கம்தான் வந்தன்னைக்கே - கஜானா காலி - அம்பேல்னு கை தூக்கிட்டானே. மலடியை புள்ள பெறுன்னா எங்கே போவா. பஸ் தனியார் மயமாக - இவாளே வழி பண்றாளே!

மருதமுத்து: ஏஜி ஆபீஸ் - எல்அய்சி - ஏர் இந்தியா மட்டும் மலடிகள் இல்லை. நீங்க வசமான இடத்துல உட்காந்து கிட்டு - பஸ் தொழிலாளர்களை நொட்டாரம் சொல்றீங்க. பிராமணர் வேலை செய்யும் மத்திய அரசு நிறுவனம் எல்லாம் இழுத்து மூடறாங்களே - பிராமணர் கொள்ளையடிச்சு - நஷ்டமாகி அது பரவாயில்லையா?

வெங்கடேசய்யர்: அந்த திறமையாவது இருக்கணும் - அட்டை மாதிரி உறிஞ்சி - சாகடிக்க பொது ஜன உபயோக - நிறுவனம். அதில் போய் - ஸ்டிரைக் - அது இதுன்னா - மக்களும் அரசாங்கமும் ஒன்னா சேர்ந்தா - இவன் கதி என்ன?


மன்னார்சாமி: மத்த மத்த அரசு இலாக்காவுலே - மேசைக்கு கீழே ஒரு சம்பாத்யம் இருக்குமாம் சாமி. டிரைவர் - கண்டக்டருக்குதான் மேசையே இல்லையே! நாலனா மீதி திருப்பித் தரலைன்னா - நம்ம மாதிரி பனாதிகள் - பஸ்ஸை நிறுத்தி சண்டை போடறோம். அதுவும் பென்ஷனர் கிழங்கள் மீதி காசு வாங்காம விடறதில்லையாம்.

மருதமுத்து: தரும சங்கடம்தான் - பஸ் ஊழியர் பிரச்சனை - கொஞ்சம் மக்கள் நலனை உத்தேசிச்சு - இறங்கித்தான் வரணும். இல்லைன்னா - முதலுக்கு மோசம்தான்!

வெங்கடேசய்யர்: பேசாம நான் அமெரிக்கா போயிடலாம்னு பாக்குறேன்யா!

மருதமுத்து: ஏன் அய்யரே! வாழுற காலத்தை உட்டுட்டு - அமெரிக்கன் - உசிரைக் கையிலே பிடிச்சிக்கிட்டு திரியறப்ப போறேன்கிறீர்?

வெங்கடேசய்யர்: பின்லேடன் - அடிபட்டியலில் - இந்தியப் பாராளுமன்றம், ஜனாதிபதி மாளிகை, அத்வானி - எல்லாம் இருக்காம். நம் பக்கத்திலே - கல்பாக்கம் - அனல் மின் நிலையம் - ஒரு குண்டு போட்டா - 100 கிலோ மீட்டர் சுற்று வட்டாரம் சாம்பல்தான். அந்த நெருப்பை அணைக்க - ஆகாசத்திலிருந்து சுரங்கத்திற்குள் - ஈயத்தைக் காய்ச்சி ஊத்தனுமாம். இப்படி வெந்துச் சாகிறதுக்கு அமெரிக்கா பெட்டர். அப்பறம் - கிட்டே வாரும் - அமெரிக்கப் பெண்கள் - அவசரமா புருஷன் தேடறாளாம் - சாகிறதுக்கு முந்தி அனுபவிச்சுட்டு சாகலாம்னு. மாமி செத்த பிறகு - எனக்கும் ஒரே தனிமை. மக வீட்டுக்கு போற மாதிரி இருக்கும் - நமக்கும் ஏதாச்சும் பெண் துணை கிடைக்குமான்னும் பாக்கலாம். ஒரு வேளை லக் அடிச்சா?



மன்னார்சாமி: கட்டையோடதான் போகும் - காதல் ஆசைன்னானாம். ஏன் சாமி இந்த வயசுலே இந்த ஆசை? லக்கு கிக்கானா - உசிரு பொக்குன்னு போயிடுமே.

வெங்கடேசய்யர்: உனக்கு என்னய்யா தெரியும்? காபூல் விழுந்தாச்சி - விழுந்தாச்சின்னு உலகம் கூத்தடிக்கிறப்ப - பின் லேடன் - இஸ்லாமாபாத் - அவுத் - பத்திரிகை ஆசிரியர் ஹமீத் மீர் கிட்டே - நவம்பர் 6, 2001ல் என்ன சொல்லியிருக்கான் தெரியுமா? 'சண்டை இனிமேதான் ஆரம்பிக்கப் போவுது - அமெரிக்க கும்பல் உள்ளே நுழையட்டு



www.padippakam.com





மின்னுதான் - காபூலிலிருந்து வெளியேறினோம். தேவையானா அணுகுண்டு கூட போடுவோங்' கிறான்.

மருதமுத்து: அய்யய்யோ - இவங்களுக்கு எப்படி அணுகுண்டு கிடைக்சுதாம்?

வெங்கடேசய்யர்: உலகம் முழுக்க - பாதாளச் சந்தையில் தான் அணுகுண்டு கிடைக்குதாமே! அது இல்லாம ரஷ்யாவில் 30 அணுகுண்டு திருட்டு போயிடுச்சாம்.

மன்னார்சாமி: பாகிஸ்தான் யார் பக்கம் சாமி? பின்லேடன் நண்பன்கிறாங்க. அமெரிக்காவுடன் கூட்டணிங்கறாங்க. ஒன்னுமே புரியலையே!

மருதமுத்து: புரியாம அடிக்கிறதுதான் - முஷாரப் பாணி. பாகிஸ்தான் - ஜெயிக்கிறவன் கட்சி.

வெங்கடேசய்யர்: மச்சான் பின்லேடன் - தெளிவாச் சொல்லிப்புட்டான்யா - முஷாரப் ஒரு துரோகின்னு! பொய்ப் பித்தலாட்டம் - எங்கே நிலைக்கும்? இப்ப பாரும் 'இந்திரா'ன்னு புத்தகம் எழுதி - பொய்ச் செய்திகளைச் சொன்ன கேதரின் ஃபிராங்க் - மேனேகா காந்தி தொடுத்த வழக்கில் - தோத்து, மன்னிப்பு கேட்டு ரூ.50 லட்சம் தண்டம் கட்டியிருக்கா.

மருதமுத்து: அதே மேனேகா - குஷ்வந்த் சிங்குக்கு எதிரான வழக்கில் - தோத்திருக்காரே

வெங்கடேசய்யர்: பத்திரிகைக்காரப் பயல்கள் உலகம் முழுக்க - காது மூக்கு வச்சு - பொய் எழுதறதே தொழிலாச் செய்யறான். ஒரு தடவைதான் இந்திராவைப் பார்த்தாராம் - குஷ்வந்த் சிங். மூன்று தடவைதான் - சஞ்சையை பாத்திருப்பாராம். ஆனா - எழுதறது - என்னமோ - ஒன்னா கட்டிப் புரண்ட மாதிரி. மேனேகா - சுப்ரீம் கோர்ட்டுக்கு பொயிட்டாளே!,அங்கே இருக்கு - தாடிக் கிழவனுக்கு தடியடி.

மருதமுத்து: ஏன்யா - குஷ்வந்த் சிங் மேலே இவ்வளவு கடுப்பு உமக்கு?

வெங்கடேசய்யர்: அவன்தானே - டிராயின் டு பாகிஸ்தான் - எழுதினவன். எப்ப என்ன எழுதினாலும் செக்ஸ் சமாச்சாரம் தலைப்பிலேயே போடறான் - எல்லார் மீதும் வெறுப்பும் எரிச்சலுமாக - எழுதறேன்னு - ஒவ்வொரு கட்டுரையிலேயும் கடுப்புவராம - சிரிப்பு வருமா?

மருதமுத்து: ஒரு பேச்சுக்கு போட்டா - அதை பெரிசா எடுத்துகிட்டீரே! தமிழக அரசியலைச் சொல்லும் - கொஞ்சம் மனம் சாந்தியடையுமே!

வெங்கடேசய்யர்: தமிழகத்தில் எங்கே அரசியல் இருக்கு? கருணாநிதியே சித்தியைப் பாத்துக்கிட்டு - நெஞ்சுக்கு நீதி எழுதப் போயிட்டாரே! ஜெயா மாமி ஜெயில் - ஜெயில்னா, கருணாநிதி - ஆ ஹோ - அய்யய்யோன்னார்: காட்சி முடிந்து விட்டது.

மருதமுத்து: கருணாநிதி - மகாயோக்கியர்! ஆட்சியில் இருக்கும் போது மக்களுக்கு அநீதி. ஆட்சியை விட்டு விரட்டினா - நெஞ்சுக்கு நீதி பெரிய சேதி

மன்னார்சாமி: சித்தின்னா - வெற்றின்னு அர்த்தமாங்கோ! சொல்றார் - கோபாலபுரத்தார்.

வெங்கடேசய்யர்: புடலங்கான்னு அர்த்தம். சித்தி பாக்குற மடையன்களை பாத்தா - செமை கோவம் வருது. 400 நாள் நடந்துதாம் என்ன லாபம்? ஒன்பதரை மணியானா - பொட்டச்சிங்க டிவிக்கு முன்னாடி உட்காந்து பிழியப் பிழிய அழுததுதான் லாபம். அதுக்கு முன்னாடி சிரிச்சிண்டிருந்தாளா?

மருதமுத்து: உம்ம பாலச்சந்தர் - மர்மதேசம் - வெண்டைக்கா - சீரியல் நடத்தி கையை சுட்டிண்ட எரிச்சல் உமக்கு. சித்தியின் அபார வெற்றி உம்மை படுத்துது.

மன்னார்சாமி: இப்ப கமலகாசனோட ஆளவந்தான் கூட தூள் கிளப்புதுங்களாம்.

வெங்கடேசய்யர்: எல்லாம் இந்தப் பிராமணக் கும்பல் கிளப்பற தூள்தான்யா. ஆளவந்தான் - தண்டம்னு தினமணியிலே எழுதிப்புட்டானே. சரக்கு இருந்தாத்தானே ஓடும்?

மருதமுத்து: எரிச்சலில் சொல்றீரா - சந்தோஷத்தில் சொல்றீரா? புகழேந்தியோட காற்றுக்கென்ன வேலியும் கூட பாத்துட்டீரா?

வெங்கடேசய்யர்: சினிமா பாக்க ஏது காசு - ஒரு பென்ஷனர் கிட்டே? எல்லாம் நூலகத்தில் அங்கே இங்கே ஓசி பேப்பர் படிச்சு தெரிஞ்சுக்கறதுதான். உருப்படாத சங்கதி - எல்டிடிஈ-ன்னு வர்றதாம். காற்றுக்கென்ன வேலியில் அதுக்கோசரம் ஒரு வருஷத்துக்கு மேலே - இந்தப் படத்தை வெளிய உடாம - அமுத்தியிருக்கானுக - எங்காளுக. ஒரு வழியில் பாத்தா - பிராமணனுக்கு அறிவு கிடையாதுன்னு ஈவெரா - சொன்னது நியாயமாப்படறது. எல்டிடிஈ - சமாச்சாரம் - இனி நொச்சி பிடிப்பு - விமானதளம் உடைப்புன்னு

www.padippakam.com



உலகத்து மீடியாவில் எல்லாம் அலர்றது. இவன் - ஒன்னே முக்கா பிராமணன் - RAW விலேயும், CBI லேயும், ஆத்தமாட்டா ஜன்மங்கள் - படுதா போட்டு மூடப் பாக்குறான்.

மருதமுத்து: மன்னார்சாமி - ஒன்னுமே புரியலேயப்பா? அய்யர் இன்னிக்கு பூரா ரிவர்ஸ் கியரில் ஓடிகிட்டு இருக்காரே!

வெங்கடேசய்யர்: மன்னார்சாமியை ஏன்யா கேட்கிறீர்? என்கிட்டே கேளும். உத்திரப்பிரதேச தேர்தலுக்கு பிறகு வாஜ்பேயி ஆட்சி - என்னாகும்னு தெரியலை. செய்யறதை சட்டுபுட்டுன்னு செய்ய மாட்டேன்கிறா. வரலாற்றைத் திருப்பி எழுதணும். ராமர் கோயில் கட்டணும். கல்லூரியில் வேதக் கல்வி வரணும். ஆரம்பக் கல்வி - காவியமாகணும். இந்த அத்வானியும் - ஜோஷியும் - வாஜ்பேயும் - மீனம், மேஷம் பாத்திண்டிருக்கா. வேகம் போதாதுன்னு ஒரே கவலையா இருக்கு. எரிச்சலா வருது.

மருதமுத்து: அப்பிடி போடும் அருவாளை. அய்யருக்கு புத்தி தெளிவாருக்கேன்னு சந்தோஷப் பட்டேன்! இஷ்டதத்துக்கு சலாங்குடு அடிக்க முடியலைன்னுதானே வாஜ்பேயி - முன் ஜென்மத்தில் கொள்ளைக்காரர்களா இருந்தவங்க - இப்ப பாராளுமன்ற உறுப்பினராயிருக்காங்கன்னு சொல்றார். முன் ஜென்ம கொலைகாரர்கள் இப்ப பிராமணரா இருக்காங்கன்னும் சொல்லலாமே!

மன்னார்சாமி: நான் எதிர்க்கட்சியில் இருந்து பேசினது எல்லாம் அபத்தம். ஆளுங்கட்சியா வந்து பார்த்தாதான் கஷ்டம் தெரியதுன்னும் பேசியிருக்கார்ங்கோ - வாஜ்பேயி.

வெங்கடேசய்யர்: அர்த்தம் என்னான்னா - அசட்டு சூத்திரப் - பஞ்சம மடையன்களா, வாயை மூடிண்டு - பிராமணனின் தனியாவர்த்தனம் வாசிக்க விடுங்கடா - என்கிறதுதான்.

மருதமுத்து: அது எப்பிடி அய்யரே? இரண்டே முக்கா சதவீதம் இருக்கிற பிராமணர்கள் - ஒரு ஜனநாயகத்தில் 97 சதவீத மக்கள் மீது யாரும் கண்டுக்காம - சவாரி விட முடியுமா?

வெங்கடேசய்யர்: வெங்காய சதவீதம்! அவுரங்கசீப் ஆட்சியில யாரு - அதிகாரி - யாரு ஆட்சிப் பண்ணினான்னு உமக்கு தெரியுமாய்யா? பிராமணன்தான். அரசன் எவனானாலும் - ஆட்சி பிராமண ஆட்சி. அப்பிடி அஸ்திவாரம் போட்டு வளர்த்த பிராமண ஆதிக்கத்தை - இன்னிக்கு ஜனநாயகம்கற பேரிலே விட்டுட முடியுமாய்யா?

மன்னார்சாமி: இந்த மாதிரி சாமர்த்தியம் உங்களை விட அதிகமா 4 விழுக்காடு மக்கள் தொகைன்னு இருக்கிற - சக்கிலி கும்பலுக்கு வர மாட்டேங்குதே சாமி! முடியாட்சி - குடியாட்சி - எல்லாம் குடுமி ஆட்சியாகவே இருக்கணுமிங்கிறீங்க. நல்ல ஞாயந்தான்.

## தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் *17.11.2001* அன்று ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் கூடியது. இராசேந்திரசோழன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி), தியாகு (தமிழ்த் தமிழர் இயக்கம்), வாலாசா வல்லவன் (மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), பேரா. பா. கல்யாணி, தமிழ்க்கனல், மா.செ. தமிழ்மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1: ஆங்கில வழிப் பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் கொண்டு வரும் முயற்சியைத் தமிழக அரசு கைவிட வேண்டும்.

தீர்மானம் 2: உதவி பெறும் பள்ளிகளுக்கு உள்ளதுபோல் தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கும் ஏற்பு அளிப்பு வழங்க வேண்டும் எனத் தமிழக அரசை வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 3: கண்டன ஆர்ப்பாட்டம்

ஆங்கில வழிப் பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் தொடங்கும் ஆணையைத் தமிழக அரசு திரும்பப் பெறக் கோரி, 05.12.2001 அன்று பள்ளிக் கல்வி இயக்கக அலுவலகம் முன் தமிழ் உரிமைக் கூட்டமைப்புச் சார்பில் அனைத்து அமைப்புகளும் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 4: கோரிக்கை விளக்க மாநாடு

தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் கோரிக்கை விளக்க மாவட்ட மாநாட்டினை எதிர்வரும் சனவரி 25 மொழிப்போர் தியாகிகள் நாளில் திண்டிவனத்தில் நடத்துவதெனவும், காஞ்சி, நெல்லை, சென்னை மாவட்டங்களில் அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக இதேபோன்று மாநாடுகளை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### வாழ்த்துகிறோம்

அரகண்டநல்லூர் நகர தி.மு.க. செயலாளரும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் ஆதரவாளருமான ஆர்.சுந்தரமூர்த்தி நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அரகண்டநல்லூர் பேரூராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மக்களுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றக் கூடியவர். அவர் தொண்டு மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

ஏ.கே.ஆறுமுகம், மா.பெ.பொ.கட்சி

## பெரம்பலூரில் முப்பெரும் விழா

பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் சிதம்பரம் நகரில் 17.11.01 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில், பெரம்பலூரில் தந்தை பெரியார் சிலை நிறுவியதில் முனைப்புக் கொண்டவரும், சிறந்த மனித நேயம் மிக்க பண்பாளருமான ஓவியர் சி. முகுந்தன் விருப்பார்ந்த பணி ஓய்வில் செல்வதை முன்னிட்டுத் தோழர்கள் புலவர் குறளன்பன், அண்ணாதாவூத், முனைவர் பொன்னொலியனார், ந.சந்திரசேகரன், ப. தண்டபாணி, செல்வி செம்மாடி சில்வா, திருச்சி சி. மருதை, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் கோ. சூரியமூர்த்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பெரம்பலூர் பாரத அரசு வங்கி மேலாளர் ந. ஆறுமுகம், பேரூராட்சி மன்றத் தலைவர் க. செல்வராசு மற்றும் பெரியார் பற்றாளர்கள், தமிழ் உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெரம்பலூர் அரசு அலுவலர் ஒன்றிய மாவட்ட மய்யப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தும், மாவட்டப் புதிய பொறுப்பாளரைப் பாராட்டியும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் கோ.சூரியமூர்த்தி உரையாற்றினார்.

செய்தி: திருச்சி ந. கருணாகரன்

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க மயமாதல்

து. தில்லைவனம்



1939 முதல் 1945 வரை நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் முடிவில் அமெரிக்காவும், சோவியத் இரஷ்யாவும் உலகின் இருபெரும் வல்லரசுகளாக முகிழ்த்தன. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றிய அமெரிக்காவுக்கும் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றிய சோவியத்து நாட்டுக்கும் இடையே தொடர்ந்து கருத்து மோதல்கள் தோன்றிக் கொண்டே இருந்தன.

வட அட்லாண்டிக் ஒப்பந்தம் ("NATO' - North Atlantic Treaty Organisation), தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தம் ("SEATO' - South East Asia Treaty Organisation) முதலியவற்றின் மூலம் அமெரிக்கா தனக்கு ஆதரவான நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. இதற்கு ஈடு கொடுக்க வேண்டிப் பொதுவுடைமை நாடுகளை இணைத்து 'வார்சா ஒப்பந்த நாடுகள்' என்ற இராணுவ ஒப்பந்த அணியை சோவியத்து நாடும் ஏற்படுத்திக் கொண்டது.

இவ்விரு இராணுவ ஒப்பந்த அணிகளுக்கும் வெளியே, 'எந்த அணியிலும் சேராத நாடுகள்' என்பவை ஓர் அணியில் நின்றன. இவற்றை 'அணிசேரா நாடுகள்' அல்லது 'மூன்றாம் உலக நாடுகள்' என்று அழைப்பது வழக்கம். இந்தியா இந்த மூன்றாவது அணியில்தான் முன்னோடியாக இருந்தது.

அமெரிக்க அணி நாடுகளும், சோவியத்து அணி நாடுகளும் எப்போது போரைத் தொடங்கி விடுமோ, அது மூன்றாம் உலகப் போராக மாறி விடுமோ என்று உலக மக்கள் அடிக்கடி நடுங்க வேண்டியிருந்தது.

இந்தப் பனிப் போர் ஆபத்தானது, சோவியத்து மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் பொதுவுடைமையை உதறி விட்டு, முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பிய ஆண்டுகளான 1980 - 90 ஆகிய பத்து ஆண்டுகளில் அகன்றது.

இந்தக் காலகட்டத்தில் மூன்றாம் உலக நாடுகளில் தொலைக்காட்சியின் பயன்பாடு அதிகமாயிற்று. இந்தச் சக்திமிக்க செய்தி ஊடகத்தையும், ஏனைய செய்தி ஊடகங்களையும் பயன்படுத்தி உலகம் ஒரே கொள்கைத் துருவமுடையதாகி விட்டது (Unipolar) என்று உலக மக்களை நம்ப வைத்தன அமெரிக்காவும் அதன் அடியொற்றிச் செல்லும் நாடுகளும்.

அமெரிக்கா எந்த நாட்டின் மீதும் ஒரு நொண்டிச் சாக்கைக் கூறிக் கொண்டு தடாலடியாகத் தலையிட்டுப் போர் புரியும் போக்கை (உலகப் போலீசு) மேற்கொண்டது.

சோவியத்து வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவின் 'பேட்டை ரவுடித்தனத்திற்கெல்லாம்' ஒப்புதல் வழங்கும் நிறுவனமாகவே அய்க்கிய நாடுகள் அவையும், பாதுகாப்பு அவையும் மாறிவிட்டன.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, உலகம் முழுவதையும் தம்முடைய பொருளாதார வல்லாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர, வளரும் நாடுகள் அனைத்தையும் புதிய காலனி நாடுகளாக்கிடத் திட்டமிட்டன - அமெரிக்காவும், பொருளாதாரத்தில் வளர்ந்து விட்ட மற்ற நாடுகளும்.

1980 ஆம் ஆண்டிலேயே 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்ற ஒன்றை எல்லா நாடுகளின் மீதும் இவை திணித்தன. கருத்து ஊடகங்கள் இதற்கு ஒத்து ஊதின. புதிய பொருளாதாரக் கொள்கை என்பது, கூர் சீவப்பட்ட முதலாளித்துவக் கொள்கைதான் என்பதை மூடி மறைக்கும் வண்ணமும், அந்தக் கொள்கையை ஏற்பதிலிருந்து இந்த உலகம் விடுபட இயலாது என்றும் ஒரு பொய்யான தோற்றத்தைத் திட்டமிட்டே உருவாக்கி வந்தனர்.

புதிய பொருளாதாரக் கொள்கைப் பரப்புரையால் மக்களின் மனதில் ஏற்பட்டிருந்த மயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தாராளமயமாதல் என்னும் பொருளாதர்ர நடைமுறையைக் கடுவிசையில் புகுத்தினர். ஒவ்வொரு நாடும் தன் நாட்டுப் பொருளாதார நலன் கருதி ஏற்படுத்தியிருந்த 'ஏற்றுமதி - இறக்குமதி'க் கொள்கைகளின் இறுக்கம் நெக்கு விடச் செய்யப்பட்டது.

முக்கியமாக, மூன்றாம் உலக நாடுகளின் சந்தைகளில், முன்னேறிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன.

இந்தத் தாராளமயமாக்கலின் பட்டை தீட்டப்பட்ட வடிவமாக 'உலகமயமாதல்' உருவெடுத்தது. உலகம் ஒரு சிற்றூராகச் சுருங்கி எந்த நாட்டின் வேளாண் விளை பொருளும், ஆலை உற்பத்திப் பொருளும் உலகில் எல்லா நாடுகளின் மூலை முடுக்குகளிலும் கிடைக்கும் வண்ணம் உலக நாடுகளில் மிகப் பெரும்பாலானவை தங்களுடைய ஏற்றுமதி

www.padippakam.com



இறக்குமதிக் கொள்கைகளை மாற்றியமைத்துக் கொள்ள வற்புறுத்தப்பட்டன.

இவற்றின் விளைவாக வளர்ந்த நாடுகளின் ஆயத்த ஆடைகள், ஆயத்த உணவுகள் உட்பட அனைத்தும் வளரும் நாடுகளில் உள்ள எல்லா இடங்களிலும் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டது.

ஆனால், அதே சமயத்தில் வளரும் நாடுகள் உற்பத்தி செய்த பொருள்களைக் 'குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தது' என்ற காரணம் காட்டியோ, 'சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் உற்பத்தி முறைகளில் உற்பத்தி செய்யப்பட்டவை' என்பதைக் கூறியோ இறக்குமதி செய்ய வளர்ந்த நாடுகள் மறுத்து வருகின்றன. அமெரிக்கா இதில் 'முன்னோடும் பிள்ளையாக' இருந்து வருகிறது.

ஒரு பக்கம் ஊட்டி வளர்க்கப்பட்ட நுகர்வுக் கலாச்சாரம் காரணமாகத் தங்கு தடையற்ற 'துய்ப்புப் பொருள்கள்' இறக்குமதி; இன்னொரு பக்கம் தத்தம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பட்ட 'குழந்தைத் தொழிலாளர் ஈடுபாடு' முதலிய தடைகள் ஆகியவற்றின் - காரணமாக, வளரும் நாடுகள் அன்னியச் செலாவணிப் பற்றாக் குறையில் சிக்கித் தவிக்கின்றன.

இவற்றிலிருந்து மீளுவதற்கு, அந்நியக் கடனைப் பெற இந்நாடுகள் ஆலாய்ப் பறக்கின்றன. இச்சிக்கலில் இருந்து மீள உள்ள வழிகள்: தங்கள் நாட்டு மூலப் பொருள்களை அந்நிய நாட்டு முதலாளிகளுக்கு மிகக் குறைந்த விலையில் விற்றல் என்பதும், மிக மோசமான நிபந்தனைகளின் மீது வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்குவதும்தான்.

இவை போன்ற நடவடிக்கைகளால், உலகில் உள்ள 150க்கும் மேற்பட்ட நாடுகள் அப்பட்டமான பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆட்பட்டு அறிவிப்புச் செய்யப்படாத அயலாரின் காலனி ஆதிக்க நாடுகளாக மிக வேகமாக மாறி வருகின்றன.

புதிய பொருளாதாரக் கொள்கை, தனியார் மயமாதல், உலக மயமாதல் ஆகிய அனைத்தையும் உலகின் மீது திணிக்க 'காட்' ஒப்பந்தத்தை வ்ளர்ந்த நாடுகள் வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டன.

'காட்' ஒப்பந்தம் சென்று, இன்று 'உலக வணிக நிறுவனம்' உருவாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், ஏனைய வளர்ந்த நாடுகளை விடத் தனக்கு இருக்கும் அதிக மக்கள் தொகை எண்ணிக்கை, பரந்த நிலப்பரப்பு, வெளிநாடுகளில் இருந்து வந்து குவிந்துள்ள மூளை உழைப்புத் தொழிலாளிகள், ஆனானப்பட்ட சோவியத்து நாட்டையும் ஏனைய பொதுவுடைமை நாடுகளையும் திசை மாற வைத்த நாடு என்ற முகாமை, உலகெங்கிலும் - முக்கியமாக அரபு நாடுகளில் - உள்ள எண்ணெய் வ்ளத்தின் மீது தனக்குள்ள ஆதிக்கம், உலகில் படை வலிமை மிக்க முதலாவது நாடு என்ற ஆணவம் ஆகிய அனைத்தையும் வைத்துக் கொண்டு 'உலகமயமாதல்' என்பதன் உள்ளடக்கமாக 'அமெரிக்கமயமாதல்' என்பதை முன்னிறுத்த அமெரிக்கா முயன்று வருகின்றது.

இந்தப் போக்கு கிளிண்டன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த எட்டு ஆண்டுகளில் ஊட்டம் பெற்றது. அவர் காலத்தில், அவருடன் ஒப்பிடக் கூடிய வேறு தலைவர்கள் உலகில் எந்தநாட்டிலும் இல்லை. எனவே கிளிண்டனின் உளறல்கள் எல்லாம் தத்துவங்கள் ஆயின; சொந்த ஒழுக்கக் கேடுகள் எல்லாம் கண்டு கொள்ளாமல் விடப்பட்டன; அமெரிக்காவின் அத்துமீறல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எதிர்ப்பாக ஏதோ சில முனகல் ஒலிகள் எழுந்தன. அவ்வளவே!

அமெரிக்காவின் இந்த 'அமெரிக்கமயமாதல்' ஆசையை முதலில் கண்டு கொண்டவை அய்ரோப்பிய நாடுகள்தாம். அவை தங்களுடைய வேளாண் விளைபொருள்களுக்கான சந்தைகள் கைநழுவிப் போய்விடக் கூடாது என்பதற்காகவும், தங்களுடைய பொருளாதார நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும் அமெரிக்காவின் தடாலடிப் போக்குக்கு அவ்வப்போது முட்டுக்கட்டை போட்டு வந்தன.

அண்மையில் அமெரிக்கா 7.10.2001 அன்று ஆப்கானிஸ்தானத்தின் மீது குண்டு மழை பொழியத் தொடங்கிய போது கூட, பிரிட்டன், மட்டும்தான் - நாடகத்தில் வரும் முன்னறிவிப்புச் செய்யும் நகைச்சுவையாளன் போல், 'எள் என்னும் முன்பு எண்ணெயாக' நின்றதேயன்றி, ஏனைய வளர்ந்த நாடுகள் போரைத் தவிர்த்த வேறு முறையிலேயும் ஆப்கானிஸ்தானத்துடனான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விரும்பின. இது அந்த நாடுகளில் உள்ள மக்களின் எண்ண ஓட்டமாகும். ஆனால் அந்த அரசாங்கங்களில் பலவும் போர் நடவடிக்கைகளில் சிறிய அளவிலாவது பங்களித்தன.

வெளிப்படையாகக் கூறப்படாமல், மறை பொருளாக வைக்கப்பட்டுள்ள 'அமெரிக்கமயமாதல்' என்பது, முதலில் உலக நாடுகள் அனைத்தும் அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு அதன் 'உலகப் போலீஸ்' நடவடிக்கை களுக்கு நிபந்தனையற்ற ஏற்பளிக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.

புதிய பொருளாதாரக் கொள்கை, தாராளமயம், உலக மயம் ஆகியவற்றின் மூலம் அமெரிக்கா வெறும் பொருளாதார மேலாதிக்கத்தை, கொள்ளைச் சுரண்டல் பொருளாதார முறையை மட்டும் தூக்கிப்

படிப்பகம்

www.padippakam.com



பிடிக்கவில்லை. உலக மக்களின் மனநிலையே அமெரிக்காவின் இராணுவ பலம், தொழில் பலம், தொழல் நுட்ப பலம், அரசியல் பலம், செல்வச் செறுக்கு ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் பக்குவப்படுத்தப்பட வேண்டும் என்பது அமெரிக்கா மூடி மறைத்து வைத்துக் கொண்டு செயல்படுத்தும் திட்டமாக உள்ளது.

நுகர்வுக் கலாச்சார வளர்ச்சி என்பது அமெரிக்கமயமாதல் கொள்கை வேரூன்றப் பெரிதும் துணை புரிகின்றது.

இராணுவ ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், கலாச்சார ஆதிக்கம் ஆகியவற்றின் துணை கொண்டு முதலில் ஒரு மலைப்பை ஏற்படுத்திப் பின்னர் அந்த மலைப்பபயே ஈர்ப்பாக மாற்றி, எந்தவொரு பொருள் பற்றியும் அமெரிக்கா எடுக்கும் நிலை - போக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கும் என்ற மனநிலையை உலக மக்க்ளிடையே ஏற்படுத்த அமெரிக்கா எல்லா முயற்சிகளையும் அண்மைக் காலமாக மேற்கொள்ளுகின்றது.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் நியூயார்க்கிலும், வாஷிங்டனிலும் நடந்த கொடூர தாக்குதல் நிகழ்ச்சியின் மூலம் அமெரிக்காவின் மீது பெரும்பாலான மக்களுக்கு இரக்க உணர்வு ஏற்பட்டது.

இதனைப் பயங்கரவாதத்துக்கு எதிரான ஆதரவாக மாற்றிக் கொண்ட அமெரிக்கா, 'விதிகள் எதற்கும் கட்டுப்படாத' தன்னுடைய போர்க்கள விளையாட்டை ஆப்கானிஸ்தானத்தின் மீது அய்ந்து கிழமைகள் நிகழ்த்தித் தாலிபான்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாத ஒடுக்குதல் என்ற போர்வையில், 'அடுத்தவன் தோளில் துப்பாக்கி வைத்துச்சுட' ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த வேறெந்த நாட்டின் விருப்பமும் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் இதுவரை புலப்படவில்லை.

தன்னுடைய சுரண்டல் பொருளாதார நலன்களைத் தற்காத்துக் கொள்ள எதை வேண்டுமென்றாலும் செய்யக் கூடிய நாடுதான் அமெரிக்கா.

அரபு நாடுகளில் உள்ள எண்ணெய் வளங்களின் மீது தான் செலுத்தி வரும் மறைமுகமான மற்றும் நேரடியான கட்டுப்பாடுகளையும், மேலாதிக்கத்தையும் அமெரிக்கா விட்டுத் தராது. பயங்கரவாத அழிப்பு என்கிற பெயரால் இந்த மேலாதிக்கம் மீண்டும் உறுதி செய்யப்பட்டு விட்டால், உலகில் மற்றப் பகுதிகளில் நடப்பதாகக் கூறப்படும் பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா அக்கறை எடுத்துக் கொள்ளாது.

சுரண்டல் அற்ற, போரே இல்லாத அமைதிப் பூங்காவாக உலகத்தை மாற்றுவது அமெரிக்காவின் நோக்கமாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

அமெரிக்க ஒட்டுண்ணிப் பொருளாதாரத்தில் 'போர்த்தளவாட உற்பத்தி' முதலைகளுக்கு முதன்மையான பங்குண்டு. அமைதிச் சூழ்நிலையில் அவர்கள் சரக்கு எப்படி விலை போகும்?

எனவே, தன்னுடைய எண்ணெய் வள நலனை உறுதிப்படுத்திக் கொண்டபின் அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான பிரச்சாரத்தை வேகமாக நிகழ்த்திக் கொண்டே பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதாகக் கூறிக் கொள்ளும் அரசுகளுக்குக் கொள்ளை விலையில் போர்க் கருவிகளை விற்பனை செய்யும்.

இதே கருவிகள் இன்னும் சற்று அதிக விலையில் அமெரிக்க முத்திரை குத்திய பயங்கரவாதிகளுக்குக் கிடைப்பதையும் கண்டும் காணாது விட்டு விடும்.

'அமெரிக்கமயமாதல்' மயக்கத்திலேயே இருக்கும் அமெரிக்கா, இதற்கு மேலும் பயங்கரவாதத்தை ஒழிக்க உதவும் என யார் எதிர்பார்த்தாலும் அவர்களின் நிலை 'இலவு காத்த கிளி'யின் நிலைதான். ★

## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி

முதல் பரிசு ரூ.1000

இரண்டாம் பரிசு ரூ.600

மூன்றாம் பரிசு ரூ.400

★ ஒடுக்கப்பட்ட மக்களின் - துயரங்களை விளக்கும் 20 வரிக்கு மிகாத கவிதைகள் வரவேற்கப் படுகின்றன.

★ தமிழ் - தமிழன் - தமிழ்நாடு உணர்வுகளை வளர்ப்பவையாக கவிதைகள் இருக்கலாம்.

★ தேர்வாகும் 100 கவிதைகளை நூலாக்கும் வாய்ப்பு உண்டு. நூலில் இடம் பெறும் கவிதைகளுக்குத் தனியாக அடையாள ஊதியம் தரப்படும்.

கடைசி நாள்: 31.1.2002

பரிசுத் தொகை நன்கொடை: ந. அப்துல் ரகுமான், ஆங்காங்

கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

சங்கமித்ரா

பொறுப்பாளர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
நினைவுக் கவிதைப் போட்டி
1/429, தென்பெரும் நெடுஞ்சொலை
வண்டலூர் வாயில், சென்னை - 600 048.

www.padippakam.com



# 'அறிவியல் தமிழின் தேவை'

மருத்துவர் சு. நரேந்திரன்

*(நவம்பர் இதழின் தொடர்ச்சி)*

### கிறித்துவ சங்கமும் பாடநூலும்:

*1858*இல் 'கிருத்துவப் பள்ளிப் பாட நூல்' சங்கம் பல புத்தகங்களை வெளியிட்டது. இச்சங்கம் *1858*இல் 'கிருஸ்துவ வெர்னாகுலர் லிட்டரேச்சர் சொசைட்டி' என்றாகியது. அதன் பின் *1891*ல் கிருஸ்துவர் லிட்ரேச்சர் சொஸைட்டி என்றாகியது.

1867 - 1900:

*1867 - 1900* ஆண்டுகளில் வெளிவந்த நூல்களில் வேளாண்மை, மருத்துவம், கணிதம், தவிர்த்து மற்ற நூல்கள் *33*.

வானவியல் *1*, பொது அறிவியல் *2*, உயிரியல் *15*, நவீன தொழில் நுட்பம் *5*, புவியியல் *5*, பொறியியல் *5*.

இவற்றில் முக்கிய நூலாசிரி யர்கள் கிருஸ்துவப் பாதிரியார் களே. இவர்கள் எழுதிய நூல்கள் மொத்தம் *22*. ஏறத்தாழச் சரிபாதியாகும். புாதிரியார்கள் - *22*, பிராமணர் - *5*, பிராமணர் அல்லாதார் - *4*, புத்தக சங்கம் - *8*, கிறித்துவ நூல் நிறுவனம் - *2*, ஆக மொத்தம் *41*.

தமிழர் எழுதிய நூல்கள் பாதிரியார்கள் எழுதிய நூல்களை விமர்சித்துப் பதில் கொடுக்கவே எழுதப்பட்டன. 'மதராஸ் ஸ்டேட் புக் அன்ட் வெர்னாகுலர் லிட்ரேச்சர் சொசைட்டி' மூலம் 'பூகம்பம் எரிமலை இவைகளின் வரலாறு' என்னும் புத்தகம் வெளியிடப்பட்டது. இதேபோல் *1898* இல் 'பூகோள பகோள சாஸ்திரம்' வெளியிடப்பட்டது. பொதுவாக இக்கால கட்டத்தில் இந்தியப் பாரம்பரியக் கலாச்சாரத்தையும் அறிவு வடிவையும் பாதிரியார்கள் விமர்சித்து எழுதியவற்றை எதிர்த்துப் பதில் கொடுக்கும் முறையிலேயே அவை அமை[illegible]திருந்தன.

[illegible]ழ மக்கள் எழுதிய பொது [illegible]யல் [illegible]:

*1900* ஆண்டில் வெளியிடப்பட்ட கல்விக் கொள்கையின்படி பல அறிவியல் நூல்களும் பாட நூல்களும் தமிழில் வெளியிடப்பட்டன.

1900 - 1920:

வானவியல் - *5*, பொது அறிவியல் *25*, உயிரியல் - *23*, நவீன தொழில் நுட்பம் - *7*, புவியியல் - *0*, வேதியியல், இயற்பியல் - *2*, பிற - *2*, ஆக மொத்தம் *64*.

இதை நோக்கும் பொழுது தமிழ் மக்களே அறிவியல் நூல்களைப் படைக்கத் தொடங்கிய காலத்தில் வானவியல், புவியியல் சார்ந்த நூல்கள் குறைந்து, பொது அறிவியல் நூல்கள் அதிக அளவில் வெளிவந்துள்ளன. தமிழகத்தில் இப்புதிய முயற்சிகள் உருவாவதற்கு, தமிழில் அறிவியல் பாடங்களை இணைப்பது என்ற கொள்கையே காரணமாய் அமைந்தது. இந்நூலாசிரியர்களில் அதிகம் பேர் பிராமணர்களே, பிராமணர் அல்லாதார் பலரும் மருத்துவம், விவசாயம், பயனுறு தொழில் சார்ந்த நூல்களை எழுதியுள்ளனர்

### சென்னை மாகாணத்தில் படித்தவர் எண்ணிக்கை

| | படித்த ஆண்கள் (விழுக்காடு) | | | ஆங்கிலம் தெரிந்தவர்கள் (விழுக்காடு) | | |
|---|---|---|---|---|---|---|
| | *1901* | *1911* | *1921* | *1901* | *1911* | *1921* |
| பிராமணர் | *73.6* | *71.9* | *71.5* | *17.88* | *22.27* | *28.21* |
| செட்டியார் | *32* | *39.1* | *39.5* | *0.15* | *0.98* | *2.34* |
| நாடார் | *15.4* | *18.1* | *20.0* | *0.05* | *0.30* | *0.75* |
| வெள்ளாளர் | *6.9* | *24.6* | *24.2* | *0.14* | *2.12* | *2.37* |
| அகமுடையர் | *14.9* | *20.8* | *20.8* | *0.15* | *.33* | *0.72* |
| கள்ளர் | *10.9* | *15.7* | *16.3* | *0.13* | *0.27* | *0.38* |
| மறவர் | *10.6* | *13.6* | *13.7* | *0.04* | *0.13* | *0.23* |
| வன்னியர் | *14.8* | *31.7* | *29.8* | *0.04* | *1.12* | *1.12* |
| மொத்தம் படித்தவர் | *20* | *24* | *27* | | | |

(Source: Compiled from the Census of India, Madras 1922. XIII Part I, PP 128 - 129 Note: This data is compiled from the table in p.57K. Nambi Arooran, Tamil Renaissance and the Dravidian nationalism 1905 - 1940, Kudal Publishers, Madurai 1980.)

*(தொடரும்)*

www.padippakam.com



# தமிழர் மருத்துவம்

மருத்துவர் எம். **கோலப்பப்பிள்ளை**

பண்டைத் தமிழர்களின் அறிவியல் வளமைக்குச் சான்றாக விளங்குவது சித்த மருத்துவம். சித்த மருத்துவம் தமிழ் மொழியோடு இயைந்து, தமிழர் வாழ்வோடு கலந்து வளர்ந்த மருத்துவம். காலக் கோள்களாலும், கடல் படுதலாலும் அழிந்துபட்ட தமிழர் அறிவியலின் கடைசிச் சான்றாய், அன்றைய பொற்கால நாட்களின் அருஞ்ச் சுவால்களாய் நிலைத்து நிற்கிறது சித்த மருத்துவம்.

சித்த மருத்துவம் ஒரு முழுமையான வைத்தியமுறை ஆகும். சித்தர்கள் உடலுக்கு ஊறு செய்யும் நோய்களை மட்டும் பற்றிக் கூறாமல், நோய் வந்து உறுத்தும் உடலினைப் பற்றிய உடற் கூறு (Anatomy), உடல் இயங்கு தத்துவம் (Physiology), குணபாடம் (Pharmacology), மருந்துகள் (Medicine), நஞ்சியல் (Toxicology), பிணி அணுகா விதி (Preventive Medicine), அறுவை மருத்துவம் (Sugery), பிள்ளைப் பேறு மருத்துவம் மற்றும் சூல் மருத்துவம் (Gynaecological and obstretics), பிள்ளைப் பிணி மருத்துவம் (Paediatrics) ஆகிய அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள் சித்தர்கள்.

'சித்தி' என்றால் வெற்றி என்றும், 'சித்தம்' என்றால் அறிவு எனவும் பொருள். முழுமையான அறிவைப் பெற்று வெற்றி பெற்ற மனித குல விளக்கங்களே சித்தர்கள் எனலாம்.

சித்த மருத்துவம் என்பது நோயை மட்டும் குணப்படுத்தாமல், அதன் மூல காரணத்தையும் கண்டறிந்து குணப்படுத்தும்.

'நோய் நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்'

- எனும் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப, நோய் என்ன என்று கண்டு, அது வந்த வழியை காரணத்தினைக் கண்டுபிடித்து, அதனைக் குணமாக்கும் வழிமுறைகளைக் கண்டு சொன்ன மருத்துவம் சித்த மருத்துவம்.

சித்த மருத்துவத்தில் பெரும்பாலும் மூலிகைகளே மருந்துகள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வேதியியல், மற்றும் பாடாணப் பொருட்களையும் மருந்துகளில் கையாண்டு பலன் கண்டவர்கள் சித்தர்கள்

'வேர் பாரு, தழை பாரு

மிஞ்சினக்கால் பற்ப செந்தூரம் பாரு'

என்னும் சித்தர் மொழிக்கேற்ப, வேர்கள், இலைகளாலான மருந்துகளைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்தினர். இவைகளில் குணமாகாவிடில், பற்பம், செந்தூரம் என்னும் உயர்ந்த மருந்துகளைப் பயன்படுத்தினர்.

மருந்துகளோடு மட்டும் நில்லாமல் நோய்களைக் குணப்படுத்த வர்மம், யோகாசனங்கள், மூச்சுப் பயிற்சி போன்ற வழிமுறைகளையும் கூறியுள்ளனர்.

இன்றைய நவீன அறிவியல் மருத்துவ முறைகளால் குணப்படுத்துவதற்கு அரிதான நோய்களைக் கூட அன்றைய மருத்துவர்கள் மிக எளிதான, நுட்பமான வழிமுறைகளில் குணப்படுத்தினர். சாதாரண நீரேற்றம், நீர்க்கோவை (ஜலதோஷம்) முதல் 'எய்ட்ஸ்' என்னும் உயிர்க் கொல்லி நோய் வரைக்கும் அனைத்து நோய்களுக்கும் சித்த மருத்துவத்தில் தீர்வுகள் உள்ளன.

தமிழர்களின் அறிவுத் திறனுக்குச் சான்றாக விளங்கும் சித்த மருத்துவத்தின் பெருமை இன்னமும் தமிழர்களால் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல், தமிழ் நாட்டிலேயே ஆங்கில மருத்துவத்திற்கு - மாற்று மருத்துவம் (Alternative Medicine) என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிற அவலம் நீங்க வேண்டும்.

உலகெங்கும் சித்த மருத்துவத்தின் பயன் பரவிச் சென்று மண்ணில் வாழும் மாந்தருக்கெல்லாம் உடல் பிணியும், உள்ளப் பிணியும் நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே இம் மருத்துவ முறையின் நோக்கம் ஆகும்.

**தன் முன்னேற்றச் சிந்தனை முன்னோடி**
**அப்துற் றகீம் பெயர் போற்றும் கட்டுரைப் போட்டி**

★ முதல் பரிசு ரூ.1000
★ இரண்டாம் பரிசு ரூ.600
★ மூன்றாம் பரிசு ரூ.400
★ தமிழ் மக்களின் தன் முன்னேற்றச் சிந்தனை - உணர்வு - உழைப்புகளைத் தூண்டும் தன்மையில்
★ தன் வரலாறு
★ வெற்றிக் கவிதைகள்
★ புதிய தொழில்/ வணிகம்
★ வேலை வாய்ப்பு
பற்றிக் கட்டுரைகள் இருக்கலாம்.
★ 5 பக்கம், 1000 சொற்களும் மிகக் கூடாது.
★ கடைசி நாள் 31.1.2002
★ பரிசுத் தொகை நன்கொடை: ந.அப்துல் ரகுமான், ஆங்காங்.
★ சிறப்பான 15 கட்டுரைகள் நூலாகும் வாய்ப்பு உண்டு. நூலில் சேர்க்கப்படும் கட்டுரைகளுக்கு தனி ஊதியம் தரப்படும். கட்டுரைகளை அனுப்ப:

**சங்கமித்ரா**
அப்துற் றகீம் கட்டுரைப் போட்டி
1/429, தென்பெரும் நெடுஞ்சாலை
வண்டலூர் வாயில், சென்னை - 600 048.

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி டிசம்பர் - 2001

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| புகழ் | சென்னை | 350.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 100.00 |
| முத்து அனபழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்- இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| கு.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 100.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 25.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 25.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 25.00 |
| மு.பாலகுருசாமி | குழை | 200.00 |
| வெ.அமிர்தலிங்கம் | கள்ளக்குறிச்சி | 100.00 |
| மருத்துவர் மா. அன்புமணி | களமருதூர் | 100.00 |
| இனியன் | சென்னை | 200.00 |
| கவிஞர் உலகநாதன் | திருவண்ணாமலை | 50.00 |
| கொ. நாகப்பன் | திருவண்ணாமலை | 50.00 |
| இரா. இரத்தினகிரி | தஞ்சை | 200.00 |
| மாசிலாபாரி | தாம்பரம் | 100.00 |
| பொ.செல்வன் மற்றும் மனைவி, மகன் | மயிலாப்பூர் | 300.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| க. முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

**நூல் அறிமுகம்:**

### திருக்குறள் தென்னவன் (நாடகக்காப்பியம்)

**பேராசிரியர் இரா. சோதிவாணன்**

மூவாத் தமிழை 'முத்தமிழ்' என்று நாம் தித்திக்கத் தித்திக்க அழைத்தாலும் நாடகத் தமிழில் நாம் வறியவர்களாகவே இருக்கிறோம். மனோன்மணியம் முதலான குறைந்த நாடக நூல்களே தமிழில் உள்ளன. இக்குறையைப் போக்கும் எண்ணம் உடையவராய், இன்றுள்ள கவிஞர்களில் சிறந்து விளங்கும் பேராசிரியர் இரா. சோதிவாணனின் இரண்டாவது நாடகக் காப்பியமே திருக்குறள் தென்னவன். அவர்தம் முதல் நாடக நூலான 'பாண்டியன் பாவை' கல்லூரிப் பாட நூலாகும் சிறப்புப் பெற்றது. 'திருக்குறள் தென்னவன்' நூல் முழுவதும் திருக்குறளின் பெருமை சிறப்பாகப் பேசப்படுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகளோடு தம் கற்பனைக் கருத்தையும் பொருத்தமாய்க் குழைத்துத் தூய தனித்தமிழ் நாடகக் காப்பியமாகத் தந்துள்ள இந்நூலாசிரியர் மிகுந்த பாராட்டுக்குரியவராவார். *விலை: ரூ.40. சோராதே பதிப்பகம், 22, குட்டைத் தெரு, சோளிங்கபுரம் - 631 102.*

---

### வையம் வசப்படும் (கவிதைகள்)

**வங்கனூர் அ. மோகனன்**

வங்கனூர் அ. மோகனன் மரபுப் பாக்களால் சிறகு விரித்துப் பறக்கும் வானம்பாடிக் கவிஞராவார். ஏராளமான மெல்லிசைப் பாடல்களைச் சென்னை வானொலியில் எழுதிக் குவித்து எல்லோராலும் பாராட்டப்பட்ட கவிஞர் இவர். முற்போக்குச் சிந்தனைகள் முரசு கொட்டும் இந்தப் பாத் தொகுப்பில் கணுக்களற்ற கரும்புக் கவிதைகளும்; பல் நீக்கப்பட்ட பலாச் சுளைப் பாடல்களும் நிறையவே உண்டு. கவிஞர் ஈரோடு தமிழன்பன் வழங்கியுள்ள ஆழமான அணிந்துரை நூலுக்கு அழகு சேர்க்கிறது. *விலை ரூ.21. சஞ்சவியார் பதிப்பகம், 88, கொத்தவால் சாவடித் தெரு, சைதை, சென்னை - 15.*

---

### பாரதிதாசன் பாடல்களில் அகமும் புறமும்

**முனைவர் கு.ப. கணேசன்**

புரட்சிக் கவிஞரின் படைப்புகளைப் பற்றி வெளிவந்துள்ள சிறந்த திறனாய்வு நூல்களில் இதுவும் ஒன்று. காய்தல் உவத்தலின்றி நடுநிலையோடு செல்லும் இவ்வாய்வு நூலில் முனைவர் கு.ப. கணேசன் அவர்கள் காதல், வீரம், தமிழ், இயற்கை எனப் பாரதிதாசனின் பல்வேறு பாடுபொருள்களை அலசி முடித்து இறுதியில் 'பதிப்பீடு' என்னும் தலைப்பில் தம் முடிவாக எடுத்து மொழியும், கருத்துக்கள் தனிச்சிறப்புடையனவாகும். ஒவ்வொரு தலைப்பின் இறுதியிலும் தம் ஆய்வுக்கு அரண் சேர்க்கும் தன்மையில் இவர் இணைத்துள்ள நீண்ட சான்றுகள் பட்டியல் இவருடைய அரிய முயற்சியை வெளிப்படுத்துகிறது. பலரும் பாரதிதாசன் முழு நாத்திகராக வாழ்ந்தார் என நம்புகின்றனர். இதற்கு மாறான நிலைப்பாட்டை நூலாசிரியர் திறம்பட நிறுவுகிறார். அரிய ஆய்வு நூல். வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும். *விலை: ரூ.60. அழகின் சிரிப்பு, 671 பெரியார் சாலை, கலைஞர் கருணாநிதி நகர், திருச்சி - 620 021.*

- தமிழேந்தி

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

படிப்பகம்


www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001

# 'பொடா' - போடா!







நாளுமோர் தடைச்சட்டம்
ஆளுவோர் தொடுக்கிறார்
மாளுதல் நாமல்லவோ - போராடி
மாய்ந்தாலும் மேலல்லவோ?
தடாவுக்கு அண்ணனாய்ப்
பொடா ஒன்று வந்தது
விடாதிந்தக் காட்டாட்சிகள் - இவை
வீழ்ச்சியே நம் மீட்சிகள்
நாட்டையே விற்கிறார்
காட்டிக் கொடுக்கிறார்
கேட்பவர் சதிகாரரா - அட, இந்தக்
கேடரே அதிகாரரா?
தேவாரம் போல்நம்மின்
சாவிலே மகிழ்கின்ற
காவலர் ஏராளமே - இனிப்பிணக்
கழுகுகள் ஊர்மேயுமே
அத்வானி கள்முதல்
சித்பவன் பார்ப்பனர்
மொத்தமாய்க்
கொலைக்கும்பலே - இவர்க்கொரு
முகமூடி வாஜ்பாயியே
சீக்கிய மக்களை
சிறுபான்மை யாளரைத்
தாக்கிட ஓர்சட்டமா - எங்கும்
'சங்பரி வார்' கொட்டமா?
தேச நலன் என்று
பூசியே மெழுகிடும்
பாசிசம் நாடாளுமா - உரிமைகள்
பாய்போட்டுத் தான் தூங்குமா?
ஆயிரம் சட்டங்கள்
பாயட்டும் இங்கே
சாயாது நம்போர்ப்படை - நாளை
தகர்ந்துதூ ளாகும் பகை!

\- 'தமிழேந்தி'

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்